ANGLO ASIAN MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly

முரசு: 5 30 செப்டெம்பர் – 06 ஒக்டோபர் 1999 முழக்கம்: 246

CAR CHECK
Mot & Repair Center
உங்களுடைய சகல திருத்த
வேலைக்கும், M.O.T க்கும்
தொடர்புகொள்ளவேண்டிய இடம்:
(Honda & Nisson Dealer க்கு அருகாமையில்)
Unit 17 Stonefield Close.
Off Stonefield Way
Ruislip - Middx.
தொடர்புகளுக்கு: 0181-841 1880
(சுகுமார்)
Pub.

# விடுதலைப் புலிகள் அமைதிப் பேச்சுக்குத் தயார்!

## தமிழ்ச்செல்வன், கரிகாலன் சந்திப்பின் பின் ஆயர் தகவல்

(27.09.99)

விடுதலைப் புலிகள் வடக்குக் கிழக்கு பிரச்சினையில் தீர்வுகாண சிறீலங்கா அரசுடன் பேச்சுக்களில் ஈடுபடத் தயார் என அறிவித்துள்ளதாக கிழக்குப் பிராந்திய ஆயர் டாக்டர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கொழும்பில் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பில் 22 தமிழர்கள் சிறீலங்காவின் விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட நிகழ்வின் பின் அவ்விடத்திற்கு விஜயம் செய்த யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப், கிழக்குப் பிராந்திய ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோர் அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், துணைப்பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினர். இதன்போதே விடுதலைப் புலிகளின் தரப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டதாகக் கொழும்பில் வைத்துக் கூறினார்.

## அரசு இராணுவத் தீர்வையே விரும்புகிறது

### சு.ப.தமிழ்ச்செல்வன்

பேச்சுவார்த்தை மூலம் சமாதனத்தை ஏற்படுத்துவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். ஆனால் சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதற்கு முயற்சிக்கவில்லை இராணுவ நடவடிக்கைகளிலேயே முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றது என விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். கடந்த செவ்வாயன்று வன்னிக்கு விஜயம்செய்த ஆயர்களை சந்தித்து உரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் வன்னிக்கு விஜயம்செய்த மன்னார், யாழ்ப்பாண, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர்களை கடந்த செவ்வாயன்று வன்னியில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலனும் சந்தித்து உரையாடினர்கள். அப்போது ஆயர்கள், போரை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண விடுதலைப்புலிகள் முன்வரவேண்டும் எனக் கேட்டபோது, அவர்களிடம் பேசிய தமிழ்ச்செல்வன், பேச்சுவார்த்தைக்கான பல சமிக்ஞைகளை நாம் அரசுக்கு கொடுத்திருந்தோம். ஆனால் அரசுதான் எந்த வித பதிலையும் தரவில்லை என தெரிவித்ததுடன், அவ்வாறு ஒரு பதிலை அரசாங்கம் தருமாக இருந்தால் அதற்கு பூரண ஒத்துழைப்பை நாம்

(☞ 2ம் பக்கம்)

## விடுதலைப் புலிகளை தோற்கடிக்கும் இராணுவ முயற்சிகள் வெற்றியளிக்காது

### முன்னாள் அமெரிக்க தூதுவர்

(27.09.99)

கடந்த ஐந்து ஆண்டுகளாக இலங்கையில் நடைபெற்றுவரும் போரினால், படையினரால் சில நிலப்பகுதிகளை கைப்பற்றத்தான் முடிந்தது. அடிப்படையில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை என முன்னாள் சிறீலங்காவிற்கான அமெரிக்க தூதுவரும் தற்போது வாஷிங்டனில் உள்ள சர்வதேச ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் தெற்காசியாவிற்கான பணிப்பாளருமான ரெறசிடா சிராபர் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பிலுள்ள இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையத்தில் கடந்த வாரம் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் தனது உரையில், கிழக்கு மாகாணத்தில் நிலைமை மிகவும் மோசமாக

(☞ 2ம் பக்கம்)

## பள்ளமடு இராணுவத் தோல்விக்கு கேணல் தீபனின் வழிநடத்தலே காரணம்

### – இராணுவத் தளபதி

(27.09.99)

ரணகோசா 5-ஐ தடுப்பதற்கான பதிலடி நடவடிக்கைகளுக்கான சிறப்பு உத்தரவுகளை தலைவர் பிரபாகரனே விடுத்ததாகவும், கேர்ணல் தீபனே போர் முனையில் புலிகளின் படையணிகளை தலைமையேற்று நடாத்தி படைகளை விரட்டியடித்ததாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மோதல் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது கேர்ணல் கருணா அல்லது தளபதி ரமேஸின் உதவிகள் தேவைப்படுகின்றதா என கேர்ணல் தீபனிடம் தொலைத்தொடர்பு கருவி மூலம் கேட்கப்பட்டது எனினும் அவர் தன்னால் சமாளிக்க முடியும் என அறிவித்தார் என தாம் தொலைத்தொடர்பு கருவிமூலம் இச் சம்பாசணையை ஒட்டுக் கேட்டதாக இராணுவ வட்டாரம் தெரிவித்தது.

ரணகோசா 5 இன்போது

(☞ 2ம் பக்கம்)

## வன்னி – முல்லையில் ஓயாதஅலைகள் வெற்றிவிழாவும் திலீபனின் எழுச்சி நிகழ்வும்

(27.09.99)

கிளிநொச்சி நகர் ஓயாத அலைகள் இரண்டின் மூலம் மீட்கப்பட்ட ஓராண்டு வெற்றி நிகழ்வுகளும் திலீபனின் 12வது ஆண்டு எழுச்சி நிகழ்வுகளும் நேற்று முல்லைத்தீவு, வன்னிப் பகுதிகள் எங்கும் நினைவுகூரப்பட்டது. கிளிநொச்சி மீட்கப்பட்ட வெற்றிநிகழ்வில் அம் மண்ணின் மீட்புக்காக தங்கள் உயிர்களை தியாகம் செய்த போராளிகளுக்கு வீரவணக்கமும் செலுத்தப்பட்டது. அப் போராளிகளை நினைவுகூர்ந்து அவர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டதாகவும் வன்னியில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை லெப்.கேணல் திலீபன் வீரச்சாவடைந்த 12வது ஆண்டான நேற்று வன்னியில் பல பகுதிகளிலும் மக்கள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்

(☞ 2ம் பக்கம்)

## புலிகளின் ஆட்லெறி தளங்களை எவ்வாறு ராடர்களால் கண்டுபிடிக்க முடியாமல் போனது?

### படைத் தலைமையில் குழப்பம்

(27.09.99)

ரணகோஷா-5 நடவடிக்கையின் போது சிறீலங்கா படையினர் புலிகளின் ஆட்லெறி மற்றும் குண்டுவீச்சு நிலைகளை கண்டறிவதற்காக பயன்படுத்திய நவீன ராடர் கருவிகளினால் கூட அந் நிலைகளை எவ்வாறு கண்டுபிடிக்க முடியாமல் போனது என்பது குறித்து படையினர் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப்புலிகளின் பீரங்கித் தளங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியாததனாலேயே அவற்றை விமானப்படையினரால் தாக்கியழிக்க முடியாமல் போய்விட்டது, அதனாலேயே ரணகோஷா-5 பாரிய இழப்பை சந்திக்கவேண்டி ஏற்பட்டது

(☞ 2ம் பக்கம்)

தமிழினி
TAMILINI Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
பல்பொருள் அங்காடி
Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France

E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
**Leama**
**Tel: 0208 2053650**
**Fax: 0208 2053651**

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140
Australia
E-Mail:tccsydney@one.net.au

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## பள்ளமடு...

கொல்லப்பட்டுவிட்டார் அல்லது காணமல் போய்விட்டார் என அறிவிக்கப்பட்ட சிலோன் இலகுரக பற்றாலியனைச் சேர்ந்த தஸ்ரா என்பவர் மூன்று நாட்களின் பின் புலிகளிடம் அகப்படாது தப்பி வந்துவிட்டார் என அறிவித்துள்ள இராணுவம் தமது இராணுவ நடவடிக்கைகள் பற்றி புலிகள் ஏற்கனவே அறிந்து வைத்திருந்தார்கள் எனச் சந்தேகின்றது.

நாடன்கண்டல் மற்றும் விடத்தல்தீவு பள்ளமடு ஆகிய பகுதிகளிலிருந்து படையணிகளை நகர்த்தி புலிகள் தயாராக இருந்தனர் எனவும் 120மிமீ, 81மி.மீ. எறிகணை செலுத்திகள் தயாராக இருந்தபோதும் 122 மி.மீ. பீரங்கிகளை புலிகள் பின்னர் இப்பகுதிகளுக்கு நகர்த்தினர் எனவும் கூறப்பட்டுள்ளது.

தமது முன்னரங்கிற்கு 75மீற்றர் அண்மைவரை இராணுவத்தின் சிறப்பு அணியான ஏயார் மொபைல் பிரிவும் 533 பிரிகேட்டும் நகர்ந்த போது புலிகளின் ஜொனி கண்ணிவெடிக்குள் அகப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகளின்...

எனவும் படைதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

வெளிநாடுகளில் இருந்து பீரங்கி நிலைகளை கண்டறியும் நவீன ராடர் கருவிகள் சிறீலங்கா படைகளால் கொள்வனவுசெய்யப்பட்டு ரணகோஷா -5 நடவடிக்கையின் போது அவை பயன்படுத்தப்பட்டதாகவும், ஆனால் அவைகள் புலிகளின் இலக்குகளை சரியாக அடையாளம் காட்டவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. புலிகள் இவ் ராடரில் அகப்படாதவாறு தமது பீரங்கி நிலைகளை அமைத்துள்ளனரா அல்லது இராணுவ நகர்வின் போது படையினரால் இவ் ராடர் கருவி சரியானமுறையில் பயன்படுத்தப்படவில்லையா என்பது குறித்து படைத் தளபதிகள் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## வன்னி-முல்லையில்...

கொண்டனர். திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மக்களால் மலர் வணக்கம் செலுத்தப்பட்டதுடன் ஆலையங்களில் விசேட வழிபாடுகளும் ஆராதனைகளும் இடம் பெற்றன. இதேவேளை வன்னி முல்லைத்தீவு பகுதிகளில் பல இடங்களில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந் நிகழ்வுகளின் போது விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள் பலரும் உரை நிகழ்த்தினர்.

திலீபனின் நினைவுதினத்தை முன்னிட்டு நேற்று வன்னிக் களமுனையில் போரெழுச்சிக் குழுவினர் போராளிகளை சந்தித்து உரையாடினர். அங்கு கூடியிருந்த போரெழுச்சிக் குழுவினர் முன் உரை நிகழ்திய விடுதலைப்புலிகளின் துணைத் தளபதி பால்ராஜ் அவர்கள், திலீபனின் கனவு நனவாகி வருவதாக தெரிவித்தார். 'மக்கள் புரட்சி வெடிக்கவேண்டும்' என்ற திலீபனின் கனவு நனவாகி வருவதையே இப்போது இங்கு நாம் கண்கூடாக காண்கின்றோம் என தெரிவித்தார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## விடுதலைப் புலிகள்...

உள்ளதாகவும் இந்த யுத்தத்தினால் சகல சமூக செயற்பாடுகளும் சீரழிந்து போயுள்ளதாகவும் தெரிவித்ததுடன், இதற்கு காரணமாக உள்ள இப் போரை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் எனவும் தெரிவித்தார். விடுதலைப்புலிகளை அழித்தோ அல்லது அவர்களை ஓரங்கட்டுவதோ இராணுவ நடவடிக்கை மூலம் முடியாது என்பதையே அண்மைக்கால அனுபவங்கள் காட்டுகின்றன என தெரிவித்தரெறசிடா, மூன்றாம் தரப்பின் மத்தியத்துடனோ, அல்லது இரு தரப்பினரினதும் ஆக்கபூர்வமான சமாதான திட்ட முயற்சிகளின் மூலமோ தான் தீர்வு காணமுடியும் எனத் தெரிவித்ததுடன், அயர்லாந்து, தென்னாபிரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளின் பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்பட்டன என்பதையும் ஆதாரங்களுடன் அங்கு விளக்கி கூறினார்.

## பிறந்தநாள் வாழ்த்து



திரு.திருமதி. ஜெயேந்திரா, சிவகாமசுந்தரி தம்பதிகளின் செல்வப் புதல்வி **ஜெனிதா** தனது முதலாவது பிறந்தநாளை 02.10.99 சனிக்கிழமை ஜேர்மனி Haus Nidda, Harheimer Weg 18-24, 60437 Frankfurt-Bonnames-Mitte கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அண்ணாமார், இந்தியாவிலிருந்து அப்பப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், மாமாமார், சித்திமார், மாமிமார், மச்சாள்மார், அக்காமார் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் பல்கலைகளையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

Pub

## பரதநாட்டிய அரங்கேற்ற அழைப்பிதழ்



**பவித்திர கலாலயா அதிபர் நாட்டிய சாந்தி செல்வி—பவித்ரா செல்வகாந்தனின் மாணவியும் எமது செல்வப் புதல்வியுமான செல்வி ஜனனி தெய்வேந்திரன் அவர்களின் நாட்டிய அரங்கேற்ற விழாவிற்கு வருகை தந்து ஆசீர்வதித்து வாழ்த்த அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**இடம்: KULTURHAUS**
**Freiherr-Vom-Stein str.9,**
**58511 Lüdenscheid.**
**காலம்: 10.10.1999 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்: 16.00 மணிக்கு.**

*அன்புடன்*
*திரு. திருமதி தெய்வேந்திரன் தம்பதிகள்*
*ஜேர்மனி.*

Pub

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## அரசு...

வழங்குவோம். அரசு வெளிநாட்டின் உதவியுடன் குறிப்பாக அமெரிக்காவின் உதவியுடன் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள விரும்புகின்றது. ஆனாலும் நாம் சமாதான முயற்சிகளை யார் எடுத்தாலும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம் எனத் தெரிவித்தார்.

## மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

*பிரெஞ்சு, ஆங்கில மொழிகளில் இருந்து தமிழில் மொழிபெயர்க்க மொழி பெயர்ப்பாளர்கள் தேவை.*

தொடர்புகளுக்கு:
திரு. வேலழகன்
Chez EELAMURASU
22, Rue Perdonnet, 75010 Paris.
தொலைபேசி: 0140376363 தொலைநகல்: 0140376464
E-mail: eelamurasu@aol.com

Pub.Gra

## ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

# வடதமிழீழச் செய்திகள்

## நான் பெயர்குறிப்பிட்ட அதிகாரிகளை விசாரியுங்கள் இன்னும் புதைகுழிகள் தெரியவரும்! - ராஜபக்ஸ

யாழ். செம்மணிப் புதைகுழிகள் பற்றித் தனக்குத் தெரிந்த இடங்கள் அனைத்தையும் தான் அடையாளம் காட்டிவிட்டதாகத் தெரிவித்துள்ள ராஜபக்ச, இப் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனத் தன்னால் அடையாளம் காட்டப்பட்டுள்ள அதிகாரிகளை விசாரித்தால் இன்னும் பல புதைகுழிகளைக் கண்டுபிடிக்கலாம் என கடந்த வாரம் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்பட்டபோது தெரிவித்துள்ளார்.

யாழ். செம்மணிக்கு அழைத்துச் செல்லப்பட்டு இவரால் அடையாளம் காட்டப்பட்டுத் தோண்டப்பட்ட புதைகுழிகள் அனைத்தையும் இவர் பார்வையிடுவதற்காக அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது 'உம்மால் அடையாளம் காட்டப்பட்ட புதைகுழிகள் பலவற்றில், சடலங்கள் எதையுமே காணமுடியவில்லையே' என நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்தபோது, தான் காட்டிய இடங்கள் அனைத்திலும் சடலங்கள் புதைக்கப்பட்டன என உறுதிப்படக்கூறிய ராஜபக்ச, 'இவ் இடங்களில் சடலங்களைப் புதைப்பதற்காக அவற்றை ஏற்றிக்கொண்டுவந்த உழவு இயந்திர சாரதி, மற்றும் இக் கொலைகளைப் புரிந்துவிட்டு என்னோடு கூடநின்று புதைத்தவர்களின் பெயர்களை எல்லாம் நான் தெளிவாகக் கூறியுள்ளேன். அவர்களையும் விசாரணை செய்யுங்கள். உண்மை தெரியவரும்' எனத் தெரிவித்துள்ளார்.



அதனைத் தொடர்ந்து நீதிபதி, ஜயதிலக கூறிய இடங்கள் அனைத்திலும் சடலங்கள் மீட்கப்பட்டள்ளன. ஆனால் உம்மால் அடையாளம் காட்டப்பட்ட பகுதிகளில் 30 வீதமான பகுதிகளிலேயே சடலங்கள் காணப்பட்டுள்ளன எனக் கேள்வியெழுப்பினார். அதற்குப் பதிலளிக்காமல் மௌனமாக இருந்த ராஜபக்ச, தான் கடமையில் இருந்தபோது ஒரு உழவு இயந்திரத்தில் மூன்று தடவைகளாக முப்பதுக்கும் மேற்பட்ட சடலங்களைப் புதைப்பதற்காகக் கொண்டு செல்வதைப் பார்த்தேன். ஆனால் அவற்றை எங்கே புதைத்தார்கள் என்பது தனக்கு தெரியாது 'எனத் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின் பின்னர் செம்மணியின் பல பகுதிகளை மீண்டும் பார்வையிட அழைத்துச் சென்ற நீதிபதி பார்வையிட்டதன் பின்னர் கொழும்பிற்கு அனுப்பி வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

## இராணுவ வாகனத்தில் பாடசாலை செல்லும் மகாஜனா மாணவர்கள்

(26.09.99)

யாழ். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 9 வருடங்களின் பின்னர் மீண்டும் பழைய இடத்தில் இயங்குவதற்குச் சிறீலங்கா படைகளால் அனுமதிக்கப்பட்டுள்ளது. பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் படையினரால் தீவிர சோதனைக்கும் விசாரணைக்கும் உட்படுத்தப்பட்ட பின்னரே பாடசாலைக்குள் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

பாடசாலைக்கு வரும் மாணவர்கள் பாடசாலைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமில் நேராகச் சென்று தமது அடையாள அட்டைகளை ஒப்படைக்க வேண்டும். அதன் பின்னர் அவர்கள் அப் பாடசாலையில் கல்வி கற்கின்றார்களா என்பது பற்றிய விபரங்களை இராணுவ முகாமில் இருக்கும் குறிப்பேடுகளில் ஒப்பிட்டுப் பார்த்து அவர்களது அடையாள அட்டைகள் முகாமில் வைக்கப்படும். அதன் பின்னர் இராணுவ வாகனம் ஒன்றில் அவர்கள் ஏற்றப்பட்டு பாடசாலை வாசலில் நிற்கும் இராணுவத்தினரின் அனுமதியுடன் பாடசாலையினுள் கொண்டு செல்லப்பட்டு அதன் பின்னரே வாகனத்தில் இருந்து மாணவர்கள் இறங்கித் தமது வகுப்பறைகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். பாடசாலை முடிந்த பின்னர் அதேபோன்று மாணவர்கள் மீண்டும் முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டு அதன் பின்னரே அடையாள அட்டைகள் மாணவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வீடு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இதேவேளை பாடசாலைக்குள் மாணவர்கள் ஆசிரியர்கள் தவிர்ந்த வேறுயாரும் படையினரால் அனுமதிக்கப்படுவதில்லை. மாணவர்களோ ஆசிரியர்களோ எந்தவித அவசரகாரணம் கூறியும் பாடசாலை நடந்துகொண்டிருக்கும் நேரத்தில் பாடசாலைக்கு வெளியே செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் என படையினரால் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

படையினரின் இக் கெடுபிடிகளால் இதுவரை 400ற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திவிட்டதாகத் தெரியவருகிறது.

## யாழ். தீவக கடற்கரைகளில் கரையொதுங்கும் சடலங்கள்

### இதுவரை 13 சடலங்கள் கண்டெடுப்பு

(26.09.99)

யாழ். புங்குடுதீவு, குறிகட்டுவான், நயினாதீவு கடற்கரைகளில் சடலங்கள் கரையொதுங்கி வருகின்றன. கடந்த புதனன்று புங்குடுதீவு கடற்கரையில் ஏழு சடலங்கள் கரை ஒதுங்கி உள்ளன. கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து இக்கடற்கரை பிரதேசங்களில் சடலங்கள் கரையொதுங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதுவரை இவ்வாறு 13 சடலங்கள் கரை ஒதுங்கி உள்ளன. இது மேலும் அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. கரையொதுங்கிய சடலங்களில் ஆண்கள், பெண்கள், குழந்தைகளின் சடலங்களும் காணப்படுகின்றன. கரையொதுங்கிய சடலங்களில் ஒன்று ஒரு வயது மதிக்கத்தக்க குழந்தையென்றும் இன்னொன்று நான்கு வயது மதிக்கத்தக்கதென்றும் கூறப்படுகிறது.

இச்சடலங்கள் மிகவும் சிதைவடைந்த நிலையில் அடையாளம் காண முடியாது இருந்ததால் இவைகள் அப்பகுதிகளிலேயே அடையாளமிடப்பட்டு பொது மக்களால் புதைக்கப்பட்டுள்ளன. இவர்கள் அணிந்திருந்த நகைகள் அனைத்தும் கழட்டியெடுக்கப்பட்டு அப்பகுதி கிராமசேவகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இப் பகுதியில் நேற்று கரையொதுங்கிய பயணப்பை இரண்டு பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அப் பையினுள் சந்திரசேகரன் ஞானசேகரன் என்பவருக்கு நேர்முகப் பரீட்சை ஒன்றிற்காக கிளிநொச்சி கிழக்கு கிராமசேவகரால் வழங்கப்பட்ட நற்சான்றிதழ் ஒன்று காணப்பட்டுள்ளது. இன்னொன்றில் தர்மபுரம் வைத்தியசாலையில் கடமையாற்றும் யோகராசா ஜெயராம் என்பவரது 1999ம் ஆண்டிற்கான தினக் குறிப்பேடும் கண்டெடுக்கப்பட்டள்ளது.

இதேவேளை நயினாதீவில் கரையொதுங்கிய கைப்பை ஒன்றில் இருந்து இணுவில் என்ற முகவரியுடன் பொன்னம்பலம் குணபாலசிங்கம் (30.01.66 பிறந்த திகதி), நாவற்குழியை சேர்ந்த ஜெகதீஸ்வரி தர்மலிங்கம் (21.11.73), வேலணையைச் சேர்ந்த கிருஷ்ணன் சிவாஜினி (06.11.75), கோப்பாயைச் சேர்ந்த கிட்டினன் பூமணி (11.05.51) ஆகியோர் அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவர்கள் எவ்வாறு இறந்தனர் என்பது தெரியாத போதிலும், சிறீலங்காப் படைகளிடம் இருந்து தப்புவதற்காக பாதுகாப்புத் தேடி இந்தியாவுக்குச் செல்ல முனைந்து கடற்படையினரின் தாக்குதல்களால் கொல்லப்பட்டவர்களாக இருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

## செம்மணிப் புதைகுழிகள் தோண்டும் பணி ஒத்திவைப்பு

(26.09.99)

யாழ். செம்மணி புதைகுழிகள் தோண்டும் பணி எதிர்வரும் 06.12.99 வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதுவரை செம்மணிப் புதைகுழிகளில் இருந்து 15 எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் இரு எலும்புக்கூடுகளே அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏனைய 13 எலும்புக்கூடுகளும் றுகுணு பல்கலைக்கழகத்தில் ஆராயப்பட்டு அதன் அறிக்கையை மீண்டும் 6.12.99 இல் நீதிமன்றில் சமர்ப்பிக்கும்படி நீதிபதி இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்தவாரம் ராஜபக்ஸவினால் தெரிவிக்கப்பட்ட இருபது இராணுவ அதிகாரிகளின் விபரங்களையும் அறிந்து குற்றப்புலனாய்வுப் பொலிசார் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும், அதில் கொலைகள் எவ்வாறு நடைபெற்றது, சடலங்களை யார் யார் புதைத்தார்கள், சடலம் எவ்வாறு இப்பகுதிகளுக்கு எடுத்து வரப்பட்டது, பாதுகாப்பு அரண்களுக்கு மேல் சடலங்கள் எவ்வாறு புதைக்கப்பட்டது போன்ற கேள்விகளுக்கு விளக்கம் கேட்டு மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.


A.S.C.E.S இன் புதிய வகுப்புகள்

14 ஆசிரியர்களின் கல்வி புகட்டலால் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர்

பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெறும் ஒரே பாடசாலை

bio,chimie,maths,anglais,français,histoire,tamoul etc

dictée, orthographe, résumé, expression écrite

வீட்டுப்பாடங்கள் செய்ய கூடுதல் விளக்கம் பெற உதவி செய்யப்படும்

சனி பி.ப 1.30 மணி-ஞாயிறு காலை 10 மணி முதல்

பிரஞ்சு

09.10.99 சனி பி.ப.1.30 மணி

19.09.99 ஞாயிறு காலை 10 மணி

04.10.99 திங்கள் பி.ப. 4 மணி (Paris 18 இல்)

05.10.99 செவ்வாய் பி.ப 3 மணி & மாலை 10 மணி (Paris 18 இல்)

06.10.99 புதன் பி.ப 3 மணி (Paris 18 இல்)

ஆங்கிலம்

Cambridge,Toefl பரீட்சைகளுக்கும் - பாடசாலை மாணவர்களுக்குமான வகுப்புகள்

03.10.99 ஞாயிறு பி.ப 1.30மணி-3.30 மணி

02.10.99 சனி காலை 10 மணி

கம்பியூட்டர்

02-03.10.99 சனி-ஞாயிறு காலை 10 மணி பி.ப 1.30 மணி

சிறுவர்க்கான தமிழ்-பிரஞ்சு-கணித-ஆங்கில வகுப்புகள்

பிரதி சனி பிற்பகல் 1.30மணி முதல்

நடன வகுப்புகள் ஞாயிறு பி.ப 1.30மணி

தையல் கேக் அலங்காரம் : 02.10.99 சனி பி.ப 2 மணி-3.30மணி

சங்கீத வயலின் ஓர்கன் வகுப்புகள்

சனி ஞாயிறு 3.30 மணி திங்கள் புதன் 5.30 மணி

சனி ஞாயிறு வகுப்புகள் நடைபெறும் இடம்

41, rue Didot 75014 Paris

M° Pernety Dir N° 13

திங்கள் செவ்வாய் புதன் வகுப்புகள் நடைபெறும் இடம்

2,rue Esclagnon 75018 Paris

M° Porte de Clingnancourt

Tél 01 42 57 23 56



ஜேர்மனியில் வாடகைக்கு

கடந்த இரண்டரை வருடங்களாக நல்ல நிலையில் இயங்கும் ஆசிய விற்பனை நிலையம் ஒன்று வாடகைக்கு உண்டு. வேலை காரணமாகத் தொடர்ந்து நடாத்த முடியாமல் இருப்பதால் நடாத்த விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

KRISHNA TRADERS

Longenberger Str-49, Bocho-16.

தொலைபேசி; 02564-33240 / 02871-183801

Pub

# களுத்துறைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

(26.09.99)

விசாரணை செய் அல்லது விடுதலை செய் எனக்கோரி களுத்துறைச் சிறையில் மீண்டும் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதத்தில் குதித்திருந்தனர். காரணமின்றி கைது செய்யப்பட்டு விசாரணையின்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதை எதிர்த்து இவர்கள் கடந்த காலங்களிலும் இவ்வாறான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வந்தனர். இவர்களது உண்ணாவிரதத்தை தடுத்து நிறுத்துவதற்காக இவர்களது விடுதலை குறித்து நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவித்து சிறீலங்கா அரசின் ஆதரவாளர்களால் இவர்களது உண்ணாவிரதங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு வந்தன.

கடந்தவாரம் இதே கோரிக்கையை முன்வைத்து இவர்களால் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதனையறிந்து கடந்த வாரம் களுத்துறைச் சிறைக்கு நேரடி விஜயம் செய்த குமார் பொன்னம்பலம் அவர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த கைதிகளுடன் பல மணி நேரமாக உரையாடி, அவர்களது விடுதலை அல்லது விசாரணை தொடர்பாக அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் எனத் தெரிவித்ததை அடுத்து உண்ணாவிரதிகள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த திரு.குமார், களுத்துறைக் கைதிகள் தனக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்ததாகத் தெரிவித்தனர். ஆனால் அது தனது கைக்குக் கிடைக்கவில்லை என்றும் அதுபற்றிச் சிறை அதிகாரிகளிடம் கேட்டபோது அதை தாம் தமது அதிகாரிக்கு அனுப்பிவிட்டதாகவும் தெரிவித்தார். ஆனால் உண்ணாவிரதமிருந்த கைதிகள் தன்னைச் சந்தித்து தன்னிடம் இருந்து கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னரே, உண்ணாவிரதத்தைக் கைவிடுவதாகத் தெரிவித்த 'தகவல் தனக்கு வந்ததை அடுத்தே' தான் களுத்துறைச் சிறைக்கு வந்ததாக குமார் தெரிவித்துள்ளார்.

## இது குசும்புங்கோ...!

★ சமூக நலன்களுக்காக நிதி சேகரிக்கப்படுவதாகக் கூறிக்கொண்டு தொண்டரமைப்பு நிறுவனங்களால் சேகரிக்கப்படும் நிதிகள் புலிகளையே போய்ச்சேருகின்றது. அப் பணம் போருக்கே செலவிடப்படுகிறது. இதனால் இளம் பிள்ளைகளின் வாழ்க்கை அழிக்கப்படுகிறது.

*– ஐ.நாவில் சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கதிர்காமர்*

★ ★ ★

★ அம்பாறையில் புலிகள் இயக்கம் புரிந்துள்ள பயங்கரவாதத்தை நாகரிக உலகம் ஒருபோதும் அனுமதியாது. இதனை உலகுக்கு எடுத்துக் கூறவேண்டும்.

*– திவயின எனும் சிங்கள நாளிதழில்*

★ ★ ★

★ வன்னி மக்களின் உணவுப்பிரச்சினை, யாழ். குடாநாட்டு மக்களின் உலர் உணவு நிவாரணத்தை மீண்டும் வழங்குதல், மீன்பிடித் தடை, யாழ். குடாநாட்டுக்கான நிரந்தரமான போக்குவரத்து போன்ற நான்கு அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வந்தோம். அதில் மூன்று பிரச்சினைகளுக்கு ஏற்கனவே நிரந்தரத்தீர்வு காணப்பட்டு விட்டது. தற்பொழுது யாழ். குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பிரச்சினையும் தீர்த்து வைக்கப்படும் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உறுதியளித்திருந்தார். அதே போல் 'நான்காவது கோரிக்கைக்கும் முடிவு' கிடைத்து விட்டது அதனால் பாராளுமன்ற பகிஷ்கரிப்பைக் கைவிடுவதாக முடிவெடுத்துள்ளோம்.

*– ஈ.பி.டி.பி*

# கொழும்புத் துறைமுகத்திற்கு புலிகளின் கப்பல் வந்துபோகும் – ஜோன் அமரதுங்க

(26.09.99)

விடுதலைப் புலிகளின் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்துபோகக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக ஐ.தே. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்கா எச்சரித்துள்ளார். விடுதலைப் புலிகளின் 15 பாரிய கப்பல்கள் தற்போது கடற்பயணம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த இவர், கொழும்பிலுள்ள எலிசபெத் ராணி இறங்குதுறையைத் தனியாருக்கு கொடுத்துள்ளதால், அவற்றில் விடுதலைப் புலிகள் வெவ்வேறு பெயர்களில் தமக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு சேர்ப்பதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இது கொழும்புத் துறைமுகத்திற்கே ஏற்பட்டுள்ள பாதுகாப்புப் பிரச்சினையெனக் குறிப்பிட்டுள்ள இவர், தனியார் மயமாக்கப்பட்டுள்ள இத் துறைமுகத்தை மீண்டும் அரசு சொந்தமாக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# யாழ். செல்வதற்கு அனுமதி பெறவேண்டும் என்று சட்டம் உள்ளதா?

## பதிலளிக்குமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவு

(26.09.99)

யாழ். குடாவிற்கு விமான மூலம் செல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டும் என்பதற்கு ஒரு சட்டம் உள்ளதா என்பது பற்றி எதிர்வரும் 28ம் திகதிக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நீதிமன்றத்திற்கு அறிவிக்கவேண்டும் எனக் கொழும்பு நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் செல்வதற்குத் தனக்கு அனுமதி வழங்குவதற்குப் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவு பெறவேண்டும் எனக் கூறப்பட்டது தொடர்பாக குமார் பொன்னம்பலம் தொடுத்திருந்த வழக்கினை அடுத்தே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ் வழக்கினை ஏற்றுக்கொண்டு விசாரணை நடாத்த முன்வந்திருக்கும் நீதிபதிகளே இவ் உத்தரவினை வழங்கியுள்ளனர். இவ் வழக்கில் திரு. குமார் பொன்னம்பலத்திற்குச் சட்டத்தரணியாக திரு. சிவராசா அவர்கள் செயற்படுகிறார்.

# புதைகுழிகளை அடையாளம் காட்ட மீண்டும் செம்மணியில் ராஜபக்ஸ!

(25.09.99)

செம்மணிப் புதைகுழிகளை மீண்டும் அடையாளம் காட்டுவதற்காக கிருஷாந்தி கொலை வழக்கின் மரண தண்டனைக் கைதியான சோமரட்ண ராஜபக்ஸ கடந்த செவ்வாயன்று கொழும்பில் இருந்து பலத்த பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்பட்டார். இதனையொட்டி யாழ். மற்றும் செம்மணிப் பகுதிகளில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட ராஜபக்ஸ காலை 9.30 மணியளவில் செம்மணிப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு அமைக்கப்பட்டிருந்த விசேட நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் புதைகுழிகளை அடையாளம் காட்டும் பணி ஆரம்பமானது.

ஏற்கனவே இவரால் அடையாளம் காட்டப்பட்ட புதைகுழிகள் தோண்டப்பட்டு எலும்புக்கூடுகளும் கண்டெடுக்கப்பட்டன. அவர் அடையாளம் காட்டிய சிலவற்றில் எலும்புக்கூடுகள் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. இம்முறை அடையாளம் காட்டப்பட்ட பகுதிகள் ஏற்கனவே ராஜபக்சவினால் அடையாளம் காட்டப்பட்ட பகுதிகள் தான் எனவும் சொல்லப்படுகிறது. புதிதாக எந்தப்பகுதியும் அடையாளம் காட்டப்படவில்லை.

# ஒட்டுசுட்டானில் விமானத் தாக்குதல்

(26.09.99)

ஒட்டுசுட்டான் கருவேலன் கண்டல் என்னும் இடத்தின் மீது சிறீலங்கா விமானப் படைகள் நடாத்திய தாக்குதலில் ஒரு தமிழ்ப்பொதுமகன் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த வியாழன் காலை 7 மணியளவில் மக்கள் குடியிருப்புக்கள் மீது விமானப்படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போதே சுப்பிரமணியம் இலட்சுமிகாந்தன்(49) என்ற குடும்பத்தவர் படுகாயம்டைந்தார். விமானப்படையினர் ஏராளமான குண்டுகளை வீசியபொழுதிலும் மக்கள் பதுங்கு குழிகளில் பாதுகாப்பு தேடிக்கொண்டதால் சேதங்கள் அதிகளவில் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இத் தாக்குதலில் ஏராளமான கால்நடைகள் கொல்லப்பட்டதுடன் பலரது குடிசைகளும் எரிந்து நாசமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. விமானப்படையினர் தாக்குதல் நடாத்திய அதேவேளை ஒட்டுசுட்டான் முகாமில் இருந்து இப் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கொழும்பில் 35 தமிழ் இளைஞர்கள் கைது

(25.09.99)

வவுனியாவில் இருந்து நேற்று முன்தினம் தொடருந்து மூலம் கொழும்பு புறக்கோட்டையில் வந்திறங்கிய 13 தமிழ் இளைஞர்கள் சிறீலங்காப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் பொலிஸார் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது மேலும் 22 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

புறக்கோட்டைப் பகுதியில் இரண்டு குண்டுகள் இன்று பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அதனாலேயே தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளதாகவும் சிறீலங்கா பொலிஸ் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

# நீர்கொழும்பு, தங்கொட்டுவையில் ஒரே நேரத்தில் குண்டுவெடிப்பு

(26.09.99)

நீர்கொழும்பு, தங்கொட்டுவா ஆகிய பகுதிகளில் கடந்த புதனன்று ஒரே நேரத்தில் குண்டுகள் வெடித்துள்ளன. பேருந்துகளில் வைக்கப்பட்டிருந்த குண்டுகளே இரு இடத்திலும் வெடித்துள்ளன. இவ் இரண்டு குண்டு வெடிப்புக்களின் போதும் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

நீர்கொழும்பு நகரின் தனியார் பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருந்த பேருந்து ஒன்றில் பிற்பகல் வேளையவில் ஒரு குண்டு வெடித்தது. இதன்போது மூவர் காயமடைந்ததுடன் இரு தனியார் பேருந்துகளும் சேதமடைந்தன. இதேவேளை தங்கொட்டுவையில் கொஸ்வத்த என்னும் பகுதியில் சிறீலங்கா அரசுக்குச் சொந்தமான பேருந்து ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டும் வெடித்துள்ளது. இதன் போது 9 பேர் காயமடைந்தனர்.


## தமிழர் வித்தியாலயம்

**75, rue Philippe de Girard, 75018 Paris - Tel: 01 40 05 11 16**

Métro: Marx Dormoy அல்லது La Chapelle அல்லது Bus: 65

இந்த ஆசிரியரிடம் பிரெஞ்சு கற்றவர்கள் கல்விநிலையங்கள் நடாத்துகிறார்கள். பிரெஞ்சு படிப்பிக்கிறார்கள். மொழி பெயர்ப்பாளராகப் பணி புரிகிறார்கள். பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்கிறார்கள். உரியவர்களிடம் உசாவிப் பாருங்கள். இலைமறைகாய் உண்மை வெளிவரும்.

★ தகைமை + அனுபவம் உள்ள ஆசிரியர்கள். தரமான கல்வி. கூடிய நேரம். குறைவான கட்டணம்

★ சத்தியப்பிரமாணம் செய்த நீதிமன்ற மொழிபெயர்ப்பாளரின் மொழி பெயர்ப்புச் சேவை வாரநாட்களில் உண்டு

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 22.09.1999**

**பிரெஞ்சு மொழிப் பயிற்சி வகுப்பு** Cours de français

வேலை, மருத்துவம், கடிதம், குடியுரிமை போன்ற எதுவாக இருந்தாலும் உங்கள் காரியங்களை நீங்களாகவே செய்வதற்கு ஏற்ப கற்பிக்கப்படும் பிரெஞ்சு வகுப்புக்கள் ஆரம்பம் ஆகின்றன.

- ஆறு மாத கால சனி-ஞாயிறு வகுப்புக்கள்.
- திங்கள் -புதன்-வியாழன்-வெள்ளி இடம்பெறும் மூன்று மாத கால வகுப்புக்கள்,

**காலை: 10.00 மணி–12.00 மணி அல்லது மாலை: 15.00 மணி –17.00 மணி**

இதைவிட, கற்பவர்களின் நேரம்–தரம் என்பவற்றிற்கேற்ப குறுகிய காலத்தில் பேச – எழுத கற்றுக்கொள்வதற்கான தனி வகுப்புகளும் உண்டு.

**நல்ல ஆங்கிலம்** Good English

Toefl க்குத் தயார்செய்து பரீட்சைக்குத் தோற்ற ஒழுங்கு செய்யப்படும்.

**ஆரம்பமாகும் பிற வகுப்பு:** ★ நல்ல தமிழ்

**டியூசன் வகுப்புக்கள்** Soutien Scolaire

CP தொடக்கம் Terminal வரை

ஒரு பாடம் வாரத்தில் இரு தடவைகள். வகுப்பில் படித்த பாடங்களை மீட்டு, வீட்டு வேலைகளைச் செய்வதற்கு உதவி செய்வது முதல் பாடநேரத்திலும், அடுத்து படிக்க இருக்கும் பாடங்களை முன்கூட்டியே தயார் செய்வது இரண்டாம் பாடநேரத்திலும் இடம்பெறுகிறது.

**சனி, புதன், பிற்பகல், மாலை, ஞாயிறு காலை வகுப்புகள்**

Pub

# தென்தமிழீழச் செய்திகள்

## அம்பாறை எல்லைக்கிராம சிங்களவர்களுக்கு 2500 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன

(26.09.99)

அம்பாறையில் குடியேற்றப்பட்டுள்ள சிங்கள மக்களின் பாதுகாப்பிற்கென 2500 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இவர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அண்மையில் அம்பாறையில் இடம்பெற்ற கொலைகளை அடுத்தே இவ் ஆயுதங்கள் வழங்கப்பட்டதாகச் சிறீலங்கா அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போது இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆயுதங்கள் பயிற்சி முடிந்த பின்னர் மீளப்பெறப்பட்டு அதற்குப் பதிலாக ரீ—56, ஏ.கே.47 ரக துப்பாக்கிகள் வழங்கப்படஉள்ளதாக பொலிஸ் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

பயிற்சி பெறும் இச் சிங்களவர்களில் காவல் கடமைகளில் ஈடுபடுபவர்களுக்கு விசேடமான சலுகைகளும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அம்பாறைச் சம்பவத்தை அடுத்து இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் அப்பகுதிகளில் குடியேற்ற அவர்களுக்கும் ஆயுதங்களை வழங்க பொலிசார் முன் வந்துள்ள போதிலும் தங்களுக்கு பாதுகாப்புத் தருவதாயினும் அப்பகுதிகளைச் சுற்றி இராணுவ முகாம் அமைத்தாலே அப் பகுதிகளில் வந்து குடியேறுவோம் என அச் சிங்களக் குடியேற்றவாதிகள் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அதிகரிக்கும் தேடுதல்கள்

(25.09.99)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் என்றுமில்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதால் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தேடுதல்களும் சுற்றிவளைப்புக்களும் அதிகரித்துள்ளன. புலிகள். நகருக்குள் நுழையக் கூடிய பகுதிகள் எனச் சந்தேகிக்கும் இடங்களில் இருந்து புலிகள் வெளியேறாதபடி படையினரின் கண்காணிப்புக்குள் கொண்டுவரப்பட்ட பின்னரே தேடுதல்கள் நடாத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வாரமும் மட்டக்களப்பு பேருந்து நிலையமும், நகரப்பகுதியும் அதன் சுற்றுப்புறங்களும் சுற்றிவளைக்கப்பட்டுத் தீவிரத் தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டது.

வழக்கம்போல காலையில் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளாமல் திடீர்திடீரென மதிய வேளைகளிலும், பிற்பகல் வேளைகளிலும் அவசர அவசரமாக படையினரால் இப் பிரதேசங்கள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதலுக்கு உள்ளாக்கப்படுகிறது என கிழக்குச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## புலனாய்வு உத்தியோகத்தர் சுட்டுக்கொலை

(26.09.99)

மட்டக்களப்பின் நகரப்பகுதியில் வைத்து சிறீலங்கா புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கடந்த செவ்வாய் இரவு 7.15 மணியளவில் மட்டக்களப்பின் புளியந்தீவு எனும் இராணுவத்தினரின் தீவிர பாதுகாப்புப் பிரதேசத்தில் வைத்தே இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவர் முன்னர் புளொட் குழுவில் இருந்து விலகி இராணுவத்தில் இணைந்து அவர்களின் புலனாய்வுக் குழுவில் செயற்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. கொல்லப்பட்டவர் மண்டூரைச் சேர்ந்த கந்தையா கோபாலபிள்ளை என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை இத் தாக்குதலை நடாத்தியவர்கள் விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவினரே எனத் தெரிவித்துள்ள சிறீலங்கா இராணுவ தரப்பு, அதியுயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் பிஸ்டல் குழுவினர் எவ்வாறு ஊடுருவித் தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றனர் என அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் இது பற்றி ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பக்கியெல்லையில் ரோந்து அணி மீது தாக்குதல்

(25.09.99)

கிழக்குப் பகுதிகளில் தாக்குதல்களை அதிகரித்துவரும் விடுதலைப் புலிகளின் அணிகள் கடந்த புதனன்று அதிகாலை அம்பாறைப் பகுதியில் தாக்குதலை நடாத்தியுள்ளனர். அம்பாறை மாவட்டம் — பக்கியெல்லைக்கு அருகில் பதுளைச் சந்தி வீதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறீலங்கா விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப்புலிகள் மறைந்திருந்து திடீர்த் தாக்குதல் நடாத்தினார்கள். சில நிமிட நேரங்கள் நடைபெற்ற இத் தாக்குதலில் இரு அதிரடிப்படையினர் படுகாயமடைந்ததாக இராணுவ தரப்புச் செய்திகள் மூலம் தெரியவருகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 8.45 மணியளவில் அம்பாறை மாவட்டத்திலுள்ள ராஜதலதென்ன பகுதியில் ரோந்துசென்ற அதிரடிப்படையினர் மீது பதுங்கியிருந்து விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் இரு படையினர் படுகாயமடைந்துள்ளனர்.


**உங்கள் தலைமுடி உதிர்கின்றதா?**
**கவலை வேண்டாம்**
**இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு**

தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.

**Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.**

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.

எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது Naturina®தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules. Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.

***இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!***






எமது ஸ்தாபனத்தின் தயாரிப்புக்களை உபயோகித்து பலன் பெற்றோர் கூறுவதைக்கேட்டு நீங்களும் பயன்பெறுங்கள்.

**சுவிற்சலாந்திலிருந்து: திரு. ராஜன்.**
*நான் இந்த Naturina® தயாரிப்புக்களைக் கடந்த 3 மாதங்களாகப் பாவித்து குறுகிய காலத்தில் எனது தலைமயிர் உதிர்வைக் குறைத்துக்கொண்டேன்.*

**டென்மார்க்கிலிருந்து: திருமதி துரைராஜா.**
*நான் Naturina® மாத்திரைகளைப் பயன்படுத்தி எனது தோல் பிரச்சினைகளையும் நக அழகையும் பேணிக்கொண்டுள்ளேன்.*

**இங்கிலாந்திலிருந்து: திருமதி ரேணுகாதேவி.**
*இந்த Naturina® தயாரிப்புக்களைப் பற்றி பத்திரிகையில் படித்தபோதும் அதன் பிரதி பலன்களை நான் முழுமையாக நம்பவில்லை. இருந்தும் இவற்றை பயன்படுத்தியதில் முழுப் பலனையும் அடைந்துள்ளேன்.*

மேலதிக விபரங்களுக்கு:
**Intercare Handels GmbH**
Munster str 5, 59065 Hamm-Germany
Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349 (நாம் தமிழும் கதைப்போம்)
Internet: http://www.intercare-naturina.com

பிரித்தானிய தொடர்புகளுக்கு:
Naturina® Uk LTD London
Tel: 0171-5150550
Mobil: 07930-471356

......... அந்தச் சம்பவமானது வெள்ளி (24.09.99) மதியத்திற்குச் சற்றுப் பின்னர் கிளைமோர் கண்ணி வெடி வெடித்து 18 படையினர் கொல்லப்பட்டமையும் 17 பேர் காயப்பட்டமையுமாக அமைந்தது. அந்தக் கண்ணிவெடி ஒரு கடை முகப்புப் பலகையின் பின்னே பொருத்தப்பட்டிருந்தது. இந்தக் கடை மட்டக்களப்புத் தொலைத்தொடர்புத் திணைக்களக் கட்டடத்திற்கு அருகே அமைந்திருந்தது.

விசேட அதிரடிப்படையினர் வெள்ளிக்கிழமைத் தாக்குதலுக்குப் பின்னைத் தடுத்துவிட்டன. அம்பாறை மாவட்டத்தில் உதயபுர கிராமத்தின் அருகே இவ்வாரத்தின் ஓரிரவில் வானத்தை நோக்கிப் புலிகள் எனக் கருதப்படுவோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். ததந்தலாவா, மங்களகம, அரத்தலாவா மற்றும் நிலம்பே பகுதிகளில் புலிகள் வேவுப் பணிகளை மேற்கொண்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் அரத்தலாவில் ஒரு விசேட அதிரடிப்படை ரோந்து அணி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.



# பரந்தனில் வெடித்த மர்மக் குண்டுகள்

## தளபதி கருணாவிடம் பாராட்டுப் பெற்ற நிசாம்

– இக்பால் அத்தாஸ் –

புலிகளின் தொலைத்தொடர்பை ஒட்டுக்கேட்டனர். அப்போது முன்னாள் மட்டக்களப்புத் தளபதியும் தற்போது வன்னியில் செயற்படுபவருமான கருணா இத் தாக்குதலை நடாத்தியதிற்காக நிசாம் எனப் பெயர் கொண்டவரை (போராளியை) பாராட்டியதைக் கேட்டனர்.

இவ்வாண்டு ஜூலை முதல் புலிகள் கிழக்கில் தாக்குதல்களை அதிகரித்து வருகின்றனர். அவர்கள் படைகளை வட போர்முனையிலிருந்து கிழக்குக்கு மீள நகர்த்துமாறு அரசை நெருக்குவதையே நோக்காகக் கொண்டிருந்தார்களாயினும் மூன்று கிராமங்களில் இடம்பெற்ற பொதுமக்கள் மீதான கொலைகள் பாதுகாப்பு நிலவரத்தை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

**தாக்குதலுக்கு உள்ளாகக் கூடிய பகுதிகளில் (சிங்கள குடியேற்றப்பகுதிகளில்) ரோந்து நடவடிக்கைகளை அதிகப்படுத்தியுள்ள பொலிஸ் அதிகாரிகளும் இராணுவத்தினரும் அச்சத்தினால் பீடிக்கப்பட்டுள்ள மக்களை தமது வீடுகளை (இருப்பிடங்களை) விட்டு வெளியேற வேண்டாம் எனச் சமாதானப்படுத்தி வருகின்றனர்.**

தாக்குதலுக்கு உள்ளாகக் கூடிய பகுதிகளில் (சிங்கள குடியேற்றப் பகுதிகளில்) ரோந்து நடவடிக்கைகளை அதிகப்படுத்தியுள்ள பொலிஸ் அதிகாரிகளும் இராணுவத்தினரும் அச்சத்தினால் பீடிக்கப்பட்டுள்ள மக்களை தமது வீடுகளை (இருப்பிடங்களை) விட்டு வெளியேற வேண்டாம் எனச் சமாதானப்படுத்தி வருகின்றனர். இப் பகுதியில் மகாஓயா, சென்றல் காம்ப், உகுண பகுதிகளும் அடங்கும். அம்பாறை மாவட்டத்தில் டமன கிராமத்தைச் சேர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் வெளியேறிவிட்டதாகச் சொல்லப்படுகின்றது.

புலிகளின் தாக்குதல் பிரிவுகள் இப் பகுதிகளுக்குள் ஊடுருவிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அதிகரிக்கப்பட்ட படையினரின் ரோந்து நடவடிக்கைகள் இத

அம்பாறை அரச அதிகாரிகள் இக்கிராமங்களுக்கு விஜயம் செய்து மக்களை வெளியேற வேண்டாம் என வலியுறுத்தி வருகின்றனர். குடியேற்றவாசிகளுக்குத் துப்பாக்கிகளை வழங்கவும் அவர்கள் முன்வந்துள்ளனர்.

தற்போதைய போரில் புலிகள் நிறுத்தி வைத்துப் போர்புரியும் கனரக ஆயுதங்களை (stand off weapon) பயன்படுத்தும் உத்திகளைப் பாவிக்கத் தொடங்கியுள்ள நிலையில் மேற்கூறிய சம்பவங்கள் இடம்பெறுகின்றன. முன்பு நான் கூறியவாறு புலிகள் இவ் உத்திக்காகப் பல கனரக ஆயுதங்களைப் பெற்றுள்ளனர். தமது இழப்பைக் குறைப்பதும் உச்ச இழப்பையும் சேதத்தையும் படைகளுக்கு ஏற்படுத்துவதுமே இவ் உத்திக்குப் பின்னுள்ள காரணமாகும்.

பலகுழல் கொண்ட 'MBRL'கள் இத்தகைய ஆயுதங்களில் ஒன்றாகும். இவ்வருடம் மார்ச் 17ல், மன்னார் 212 பிரிகேட் தலைமையகம் மீது முதலில் இது பயன்படுத்தப்பட்டது. இத் தாக்குதல்கள் மில்லியன் கணக்கான சேதத்தை ஏற்படுத்தின. வாகனங்களில் இருந்து இறக்கப்படாத பல்வேறளவிலான பீரங்கிக் குண்டுகள் வெடித்துச் சிதறின. இது எரிபொருள் களஞ்சியத்தில் இரண்டாம் வெடிப்பை ஏற்படுத்தியது. இப்படியே 9 'ஜயன் கோசஸ்' எனப்படும் துப்பாக்கி இழுத்துச் செல்லும் வாகனங்களும் 4 இலகுரக வானங்களும் வெடித்துச் சிதறின.

அதன் பிற்பாடு 'MBRL', ரண கோச 5 நடவடிக்கையை தடுத்து நிறுத்தவே அதிகளவு பயன்படுத்தப்பட்டது.

இவ் வாரத்தில் இடம்பெற்ற ஒரு முக்கிய நிகழ்வு பலவகை கனரக ஆயுதங்களைப் புலிகள் பெற்றுள்ளனர் என்பதைக் காட்டுகின்றது. இது பரந்தன் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தின் அடிப்படையிலானதாகும்.

வெள்ளி காலை (செப். 24) 10.30 மணியளவில் படையினர் பயிற்சியில் இருந்தனர். 2 பிரதான டாங்கிகள் அருகாமையில் நிறுத்தப்பட்டிருந்தன. இரு 120 மி.மி. எறிகணைகள் அருகே வீழ்ந்ததால் இப் பயிற்சிகள் நிறுத்தப்பட்டன. ஒருவரும் காயப்படவில்லை. இதனைத் தொடர்ந்து தொடரான பலத்த சத்தங்கள் எழுந்தன. அருகாமையில் நிறுத்தப்பட்டிருந்த டாங்கி சேதப்பட்டிருந்ததைப் படையினர் கண்டனர். அடுத்த டாங்கி உடனடியாக அங்கிருந்து நகரத் தொடங்கியது. சேதமடைந்த டாங்கியைப் படையினர் இழுத்துச் செல்ல முயன்றனர். சில நிமிடங்களில் அந்த டாங்கி வெடித்துச் சிதறியது.

படையினர் வயர்களையும் செப்புத் துண்டுகளையும் கண்டனர். அது டாங்கியை அழித்த வெடிகுண்டு அல்லது ரவை (munition) எனக் கருதினர். அது பரிசோதனைக்காகக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டது. இது புலிகளின் ஊடுருவல்காரரின் கைவரிசையா? புலிகள் உள்நுழைந்து டாங்கியினுள் வெடிகுண்டைப் பொருத்தினரா? ஆனால் டாங்கிகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் மிகக்கடுமையானவை. அல்லது புலிகளின் அண்மையகொள்வனவாக இருக்கக்கூடிய வழிகாட்டும் வசதியுள்ள டாங்கி எதிர்ப்பு ஏவுகணையின் வேலையா? இராணுவ அதிகாரிகள் இன்னமும் முடிவான விடைக்கு வரவில்லை.

இச் சம்பவத்திற்குப் பின்னர் இப் பகுதியில் மூன்று சுற்று இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகத்தை முன்னரங்கப் படையினர் கேட்டனர். இதன் ரவைகளானது 105 அல்லது 106 மிமீ 'ரிகோயிலஸ்' துப்பாக்கியினுடையது போல் இருக்கலாம் எனப் பரந்தன் இராணுவ அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார். இத் துப்பாக்கிச் சூடானது 2 படையினரைக் காயப்படுத்தியது. இருவரும் மூச்செடுக்கச் சிரமப்பட்டனர். இதனைத்தொடர்ந்து இருவரும் பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இரு மணி நேரம் இருவரும் மயக்க நிலையில் இருந்தனர். பிரயோகிக்கப்பட்ட மூன்று சன்னங்களினதும் உதிரிகள் எனக் கருதப்படும் சிறு அலுமினியம் கொள்கலன்கள் அங்கு கண்டெடுக்கப்பட்டன. அவை கொழும்பிற்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. அவை கேடு விளைவிக்கக் கூடிய இரசாயனக் கலவையைக் கொண்டவையா அல்லது, வேறு காரணங்களினாலா படையினர் மூச்செடுக்கச் சிரமப்பட்டனர் அல்லது மயக்கமானார்கள்?

பரந்தன் சந்திக்குக் கிழக்கே முரசுமோட்டைப் பகுதியிலிருந்தே இரு சம்பவங்களுக்குமான புலிகளின் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. இத் தாக்குதலுக்கான இரு ஆயுதங்கள் அல்லது தளவாடங்கள் புலிகளின் கப்பல்களினால் முல்லைத் தீவுக் கடல் ஊடாக எடுத்து வரப்பட்டதாக இருக்கலாம் என உளவு வட்டாரங்கள் கருதுகின்றன. ரணகோசா 5 படையினரின் நகர்வைத் தடுத்து நிறுத்தப் புலிகள் பீரங்கி - எறிகணை அல்லது MBRL குண்டுகளை அதிகளவு பயன்படுத்திய தன் பிற்பாடு, புலிகளினால் தீவிர இந்திய சிறீலங்கா கடற்படைகளின் ரோந்தையும் வெற்றிகரமாக மீறி ஆயுதங்களைக் கடத்த முடிந்தமை ஆழ்ந்த அவதானத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதே தரப்பினர், கடந்த புதன் வியாழன் இரவுகளில் வடகிழக்குச் சுண்டிக்குளம் கரையோரத்தில் புலிகள் புதிய எறிகணை மற்றும் ஆயுதத் தளவாடங்களை இறக்கியுள்ளமை பற்றி அறிக்கையை ஆராய்ந்து வருகின்றனர். அங்கே அதிக அளவிலான படகு நடமாட்டங்கள் காணப்பட்டுள்ளன. அவை ஆழ்கடலில் நிறுத்தப்பட்ட கப்பலில் இருந்து கரைக்குப் பொருட்களை எடுத்து வந்தன எனக் கூறப்படுகின்றது.

பெரியளவிலான தாக்குல்களில் ஈடுபடாத கடந்த 10 மாதங்களிலும், புலிகள் புதிய போராளிகளை பயிற்றுவித்த பிற்பாடு, மீள் ஒழுங்கு படுத்தல்களை செய்து அண்மையில் கடத்திவரப்பட்ட ஆயுதங்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் வெளிப்பாடாக புலிப் போராளிகளுக்கு மீள ஆயுதம் வழங்கப்பட்டுள்ளமை இப்போது தெளிவாகிவிட்டது.

*(The Sunday Times இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸின் 'பாதுகாப்பு நிலவரம்' தொடர்பான அறிக்கையில் இருந்து தேர்ந்தெடுத்து மொழிபெயர்க்கப்பட்டது. தெளிவான புரிதலுக்காக வசன ஒழுங்கு மாற்றப்பட்டுள்ளது. நன்றி: The Sunday Times, 26th Sep 1999)*

ஸ்ரீ துர்க்கா திருமண சேவை

உங்கள் திருமணம், திருமண நாட்குறித்தல், பொருத்தம் பார்த்தல், ஜாதகம்பார்த்து பலன் சொல்ல, மற்றும் திருமணத்திற்குரிய குருக்கள், மணவறை, வீடியோ, சாப்பாடு, மேளம், ஹோல், வாகனம் சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும். மற்றும் ஏனைய விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.

சனி. ஞாயிறு ஆகிய நாட்களில் 14.01-2000 ஜனவரி மாதம் (தை மாதம்) மரணயோகம் கரிநாள் வருவதால் திருமணம் செய்யமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

K.Y.KURUKKAL
44, Rue Stephenson, 75018 Paris.
Tel: 01 42 51 43 43 - 06 12 31 33 41
Pub

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்
தமிழ் அச்சகம்
(மக்கள் கடை அருகில்)
இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500–க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.
அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.
திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணி வரை
59, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42
அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்
Pub

# யுத்தத்துக்கு வருகிறோம் இவற்றுக்கு பதில் தாருங்கள்

இப்போ சில தினங்களாக தென்பகுதி முழுவதிலும் 'மிகுதியையும் வெற்றி கொள்ள இராணுவத்தில் இணையுங்கள்' என்ற வாசகங்களைக்கொண்ட பெரும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இதனைச் சுவரொட்டி யுத்தம் என்றுகூடக் கூறலாம். அந்த சுவரொட்டிகளில் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட பகுதிகள் எனச் சிலவற்றைப் பிரிவு படுத்திக் காட்டியுமுள்ளார்கள். இந்த சுவரொட்டிகள் மூலம் இராணுவ சேவைக்கு அழைக்கப்படுவது எமது இளைஞர்களே.

சத்தியமாகச் சொன்னால் நாம் இந்த நாட்டை மீட்டுக்கொள்ளவேண்டும்தான். ஆனால் இங்கு நடைபெறுவது யுத்தம் தானா, இதில் எமக்கு நிறையவே சந்தேகங்கள். நாட்டை மீட்கும் யுத்தம் என்பதில் எமக்கு இப்போது நம்பிக்கையில்லை. எமக்குப் படும் வகையில் அரசியல்வாதிகளும், ஆயுத வியாபாரிகளும், உயர் இராணுவ அதிகாரிகளும் ஒன்றாகக் கூட்டுச்சேர்ந்து நடத்திச்செல்வது யுத்தமில்லை, வியாபாரம்தான்!

இந்த நாட்டின் யுத்தத்தின் உண்மை நிலை மறைக்கப்பட்டுள்ளது. ஆனால் பத்திரிகைகளாலும் மற்றைய செய்தி ஊடகங்களாலும் இளைஞர்களை யுத்தத்தில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது. யுத்தத்திற்கு வயது 17 ஆகிவிட்டது. அப்படியிருந்தும் நாம் எதனை வென்றுள்ளோம். இந்த நாட்டின் இளைஞர்களைப் பலிகொடுத்தது மாத்திரம்தானே? இன்று யுத்தம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது வெளிப்படையாகத் தெரிகிறது. இன்று அரசியலில் உள்ளோர்கள் தேர்தலை இலக்கு வைத்து இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு தாங்கள் ஒவ்வொருவரும் இலாபம் பெறும் இது கொலைகார யுத்தமே. அவர்களது அரசியல், மற்றும் சுயநலத்திற்காக இறந்துபோவது எமது இளைஞர்களே.

இராணுவ முக்கியஸ்தர்கள் யுத்த இரகசியங்களை எதிரிக்கு விற்பது பற்றியும், நவீன ஆயுதங்களுக்காக ஓட்டை, உடைசல் பழைய ஆயுதங்களை விலைக்கு வாங்கி பலகோடி ரூபா கொமிஷனை அவர்கள் பெற்றுக்கொள்வதையும் நாம்தான் தினமும் செய்திகள் வாயிலாக அறிந்துகொள்கிறோமே.

அதுபோலவே இராணுவ வீரர்களின் கொடுப்பனவுகளை அபகரித்து, ஏப்பம் விட்டு அவர்களைத் தங்களது வீடுகளில் வேலைக்கு ஈடுபடுத்தும் பெரும் இராணுவத் தளபதிகள் பற்றியும் செய்திகள் மூலம் அறிந்து கொள்கிறோம். இவைகள் அநியாயமில்லையா?

இவற்றின்படி எம்மால் கூறமுடிந்ததெல்லாம் இந்த யுத்தத்தில் எமக்கு நம்பிக்கையில்லை. அன்றும் யுத்தத்தால் வாழ்ந்தார்கள். இன்று இவர்கள் அவர்களை வென்றவர்கள். யுத்தம் நடாத்தும் முன்னர் நாட்டின் திறமையான தலைமையொன்றை நாம் உருவாக்கிக்கொள்ளவேண்டும். வேலியே பயிரை மேயும் இன்றைய நிலையில் எமக்குச் செய்வதற்கு ஒன்றுமேயில்லை.

– திவயின பத்திரிகையில் ஒரு 'இளைஞன்'

## இராணுவ 'லொத்தர்' வாங்கினால் பிரபாகரனாலும் தப்பிச் செல்லமுடியும்

இராணுவத்தின் ஐம்பதாவது வருட பூர்த்தி விழாவுக்காக அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களையும் வேறு வகையிலான பணச் சேர்க்கைகளையும் இராணுவம் இப்போது மேற்கொண்டு வருகின்றது. இதன் ஒன்றின் விலை 20 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதுபோதாதென ஒவ்வொரு இராணுவத்தினரது சம்பளத்தில் இரண்டு வாரத்திற்கு 500 ரூபாய்களை அதிகாரிகள் வாங்கிக்கொள்கின்றனர். அத்துடன் ஒரு அதிகாரி 650 ரூபாய்களை இவ் விழாவிற்கு வழங்குகின்றார். இப்படியான நடவடிக்கைகளைவிட இராணுவத்தினர் சீருடைகளில் வீதிகளில் அங்கங்களை இழந்த படையினருக்கான உதவித் தொகைகளைப் பெற்றுக்கொள்ள ஒரு அதிர்ஷ்டலாபச்சீட்டினை விற்கின்றனர்.

இப்போது வீதியில் செல்லும் வாகனங்கள், வாகன பரிசோதனைக்காக நிறுத்தப்படும்போது அத்துடன் இந்த சீட்டுக்களையும் இராணுவத்தினர் விற்கின்றனர். கடந்த சில தினங்களுக்கு முன் அம்பேபுச்ச நகரில் 'Stop' அறிவித்தலுடன் நின்ற இராணுவத்தினர் வாகனங்களை நிறுத்தி அதில் பயணம் செய்தவர்களிடம் பலவந்தமாக இச்சீட்டுக்களை விற்றுள்ளனர். சோதனைக்கு வாகனம் நிறுத்தப்படக் கோரும்போது சாரதிகள் உயிர்ப் பயத்தில் வாகனங்களை நிறுத்துகின்றனர். நாம் வாகனத்தைச் சோதனையிட உங்களை நிறுத்தவில்லை. அங்கவீனர்களுக்கான அதிஷ்ட லாபச் சீட்டினை விற்பதற்கே எனக்கூறி இராணுவத்தினர் சீட்டுக்களை விற்கின்றனர். சீட்டு விற்கப்படுகிறது வாகனம் சோதனையின்றி அப்பகுதியில் இருந்து சென்று விடுகிறது. இதுதான் பல இடங்களில் நடக்கின்றது.

அங்கவீனர்களுக்கான சீட்டு ஒன்றினை வாங்கிக்கொண்டால் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூட சோதனைச் சந்தர்ப்பங்களில் மிக இலகுவாக அகன்று சென்றுவிடுவார் என அநேகர் பேசிக்கொள்கின்றனர்.

# சிங்களம் கூறும் சில...

– மாந்தன் –

## பிரபாகரனின் யுத்த நகர்வுகளை அறியக்கூடிய தளபதிகள் இல்லை

இன்று கிழக்கில் பாதுகாப்பு நிலைமை மிக மோசமாகியுள்ளது. அங்கு பாதுகாப்புக்கு என அனுப்பிவைக்கப்பட்ட விசேட அதிரடிப்படையினர் முகாம்களுக்குள் முடக்கப்பட்டுள்ளது மாத்திரமல்ல, பெரும் இழப்புக்களையும் சந்தித்து வருகின்றனர். பயங்கரவாத ஒழிப்பிற்காக இஸ்ரேலினால் எமக்கு இந்த படைப்பிரிவு உருவாக்கித் தரப்பட்டது. முன்னர் அந்தப் படைப் பிரிவினரின் தளபதிகள் குறிப்பிட்ட இலக்கைப் பூர்த்தி செய்த பின்னர்தான் லீவில் செல்ல அனுமதிக்கப்படுவார். ஆனால் இப்போது நிலைமை தலைகீழ். கிழக்கு அதிரடிப்படைத் தளபதிகளில் பெரும்பாலானோர் கொழும்பில்தான் நிற்கின்றனர்.

அதைவிட மோசம் எமது நாட்டின் திறமையான தளபதிகளின் பற்றாக்குறை. இதற்கு ரணகோசா ஐந்து நல்ல உதாரணம். அமெரிக்க 'வெஸ்ட் பொயின்ட்' பயிற்சியின் பலன் அந்த தாக்குதலிலேயே சிதறடிக்கப்பட்டுள்ளது. புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என நினைத்தால் இராணுவத்துறையில் நிபுணத்துவம்கொண்ட தளபதிகளை அரசு பயன்படுத்தாமல் ஏன் தோல்விகளைத் தரும் தளபதிகளை பயன்படுத்தும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது என்ற கேள்வியே இப்போது எழுந்துள்ளது.

ரணகோச ஐந்தின் தோல்விக்குப் பதில் சொல்லவேண்டியவர் யார்? அந்த நடவடிக்கை எனது யோசனைப்படி மேற்கொள்ளப்படவில்லை. மற்றையவர்தான் காரணம் என அடுத்தவரை மாட்டிவிட்டு தளபதிகள் தாங்கள் தப்பிக்கொள்கின்றனர். ஆனால் எந்தக் காரணமுமின்றி இழக்கப்பட்ட இராணுவ உயிர்களுக்கு யார் பொறுப்பாகின்றனர்? இப்படியான அதிகாரிகளைக்கொண்டு யாழ்ப்பாண இராணுவ நகர்வு நடத்தப்பட்டிருந்தால் இன்றும் அங்கு புலிகளின் நிர்வாகம்தான் நடக்கும்.

யுத்த நடவடிக்கைகள் தோல்வியடைவதற்குக் காரணம் பிரபாகரனின் இராணுவ நகர்வு முறைகள் பற்றி அறிந்துகொள்ளக்கூடிய தளபதிகள் இல்லாததே ரஷ்ய பிராந்தியமான டகஸ்தானில் இஸ்லாமிய போராளிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ரஷ்யப் படைகள் முதலில் உலங்கு வானூர்திகளையும் றொக்கட் படைப்பிரிவையுமே பயன்படுத்தியது.

அதனால் இழந்த சில கிராமங்களை அது மீண்டும் கைப்பற்றிக்கொண்டது. ஆனால் எமது நடவடிக்கைகளில் முன்னே செல்வது படைவீரர்களே. புலிகளைப் பொறுத்தவரை ஒரு தாக்குதலுக்கு மோட்டார், எறிகணைப் படைப்பிரிவே முதலில் பயன்படுத்தப்படுகிறது. அவற்றின் தாக்குதல்களால்தான் ஏராளமான எமது படையினர் உயிர்களை இழந்தனர். கிளிநொச்சி, மாங்குளம், போன்ற பகுதிகளில் புலிகளின் எறிகணைகளால் உயிரிழந்த அதிகாரிகளும், படைவீரர்களும் ஏராளம்.

படை முகாம்களைக் காப்பாற்றமுடியாத அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு கிடைக்கையில் ரணகோச ஐந்திற்காக உயர் பதக்கங்களும் கிடைக்கலாம். சிறீலங்கா இராணுவத்திற்கு வரும்போ ஐம்பது பூர்த்தியாகியுள்ள இவ்வேளை ஜெனரல் ரத்வத்தையும், ஜனாதிபதி சந்திரிகாவும் இராணுவத்தில் நிபுணத்துவம் கொண்டவர்கள் யார் என்பதையும் திறமையற்றவர்கள் யார் என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும்.

– 'திவயின'



# 41ம் நாள் நினைவஞ்சலி

## திருமதி சிவபாக்கியம் முத்தையா

(கொட்டடி யாழ்ப்பாணம்)

அன்னை மடியில்: 14-05-1924 ஆண்டவன் அனைப்பில்: 14-08-1999

*எங்கள் அன்புத் தாயே!*

யாழ்கொண்ட கொட்டடியில் வந்துதித்தாய்
வேப்பங்குளம் வவுனியாவில்
வளர்ந்துவந்தாய்
காப்பரண்கள் குலம் வாழ வேண்டுமென்று
தாலாட்டில் பாடி எம்மை வளர்த்து வந்தாய்

பூப்போல நீ வளர்த்த உன் செல்வங்கள்
உன் பெயர்சொல்ல சந்ததியும் காட்டிநின்று
கண்போல உனைக்காத்து வந்தவேளை
காலன் முந்தி வந்து நின்றானோ பாசமுடன்

நீர்கொழும்பு அர்சப்பா வீதி இல்லத்தில்
அந்தியேட்டி நடத்தி மக்கள் அழுதிட்டார்
காலமிது துயர்பகிர்ந்த அந்த மக்களுக்கு
நன்றி சொல்லி வேண்டுகின்றோம்
இறைவனையும்
அம்மா உன் ஆத்மா சாந்திபெற.

தகவல்: குணம் குடும்பத்தினர் - பேர்லின். (ஜேர்மனி) - தொலைபேசி: 0173/ 2392160

## நாட்டில் காங்கிரஸ் அலை வீசுகிறது இருந்தும் நான் அரசியலில் ஈடுபடமாட்டேன் - பிரியங்கா

(26-09-99)

அமேதி தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கு ஆதரவாக அவரது மகள் பிரியங்கா பரப்புரை செய்து வருகிறார். அது தொடர்பாக அவர் பத்திரிகையாளரிடம் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

'இப்போதைக்கு எனக்கு அரசியலில் ஈடுபடும் எண்ணம் இல்லை. அரசியலில் நுழைய மாட்டேன். போகும் இடமெல்லாம் மக்கள் எனக்கு உற்சாக வரவேற்பு அளிக்கிறார்கள். 1984 தேர்தலில் கிடைத்த வெற்றி காங்கிரசுக்கு மீண்டும் கிடைக்கும் நிலை உள்ளது. இருந்தும் கூட நான் அரசியலில் ஈடுபட மாட்டேன். அரசியலில் ஈடுபடும்படி 1991-ம் ஆண்டில் இருந்தே காங்கிரஸ் கட்சி என்னை வற்புறுத்தி வருகிறது. முதல்கட்டமாக இளைஞர் காங்கிரஸ் தலைவராகும்படி என்னைக் கூறினார்கள். ஆனால் அரசியலை நான் விரும்பவில்லை. அதில் ஈடுபட நான் தயாராக இருக்கவில்லை. ஏற்கனவே கூட 96, 98 தேர்தல்களில் நான் பரப்புரை செய்திருக்கிறேன். அப்போது வராத கூட்டம் இப்போது வருகிறது. இந்த அளவுக்குக் கூட்டம் வருவது எனக்கு மலைப்பாக இருக்கிறது. நாட்டில் இப்போது காங்கிரஸ் அலை வீசுகின்றது. என் தாயார் வெளிநாட்டுக்காரி என்று சிலர் குற்றம் கூறுகிறார்கள். நான் குழந்தையாக இருந்த காலத்தில் இருந்தே இந்தக் குற்றச்சாட்டு கூறப்படுகின்றது. இந்தக் கேள்விக்குப் பதில் கூற நான் விரும்பவில்லை' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## இந்தியாவில் நான்காவது கட்டத் தேர்தல் 74 தொகுதிகளில் வாக்குப்பதிவு

(25-09-99)

இந்தியாவில் நான்காவது கட்டமாக 74 பாராளுமன்றத் தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. வன்முறை ஏற்படாமல் தடுக்க இராணுவமும் பொலீசும் குவிக்கப்பட்டு இருந்தன. குறிப்பாகப் பீகார் மாநிலத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு வாக்குச் சாவடிகளில் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டு இருந்தது. ஐந்து கட்டமாக நடந்துவரும் பாராளுமன்றத் தேர்தலில் முதல் மூன்று கட்டத் தேர்தல் ஏற்கனவே முடிந்துவிட்டது. இன்று நான்காவது கட்டத்தேர்தல் நடைபெற்றது.

பீகாரில் வெள்ளம் ஏற்பட்டதையடுத்து இரு தொகுதிகளில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் உள்ள வாக்குச் சாவடிகளில் 60 சதவீதம், மிகப் பதட்டமானவை என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகவும் அதிகப்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய துணை இராணுவத்தின் 147 கம்பெனிகளும், பீகார் இராணுவ பொலிசின் 102 கம்பெனிகளும், மாநில பொலிசார் 26 ஆயிரம் பேரும், ஊர்காவல் படையினர் 30 ஆயிரம் பேரும், முன்னாள் இராணுவத்தினரும் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் வன்முறை ஏற்பட்டால், 'கண்டதும் சுடுவதற்கான' உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சரான பெர்னாண்டஸ் போட்டியிடும் நாலந்தா தொகுதியும் பீகார் மாநிலத்தில்தான் அமைந்துள்ளது. அந்தத் தொகுதியில் இன்று வாக்குப்பதிவு நடைபெற்றபோது திடீர் கலவரம் ஏற்பட்டது. இதில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர். நாகலாந்து மாநிலத்தில் இன்று நடைபெற்ற தேர்தலில் ஏற்பட்ட வன்முறையால் ஆறு இடங்களில் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.

## இந்தியச் செய்திகள்

## பாரதிய ஜனதா கூட்டணிக்கு 235 தொகுதிகளில் வெற்றி

(25-09-99)

நான்கு கட்டமாக வாக்குப் பதிவு நடந்த 418 தொகுதிகளில் பாஜக கூட்டணிக்கு 235 இடங்கள் கிடைக்கும் என்று இந்திய தொலைக்காட்சிச் சேவையான தூர்தர்ஷனின் வாக்குக் கணிப்பு முடிவு தெரிவிக்கின்றது. இதன்படி 545 உறுப்பினர் கொண்ட மக்களவையில் பெரும்பான்மை பெற இந்தக் கூட்டணிக்கு இன்னும் 37 தொகுதிகள் தேவை. காங்கிரஸ் மற்றும் அதன் தோழமைக் கட்சிகளுக்கு 145 இடங்கள் கிடைக்கும். இதர கட்சிகள் 38 இடங்களைப் பெறும். 125 தொகுதிகளை உள்ளடக்கிய 28 ஆயிரம் வாக்காளரிடம் கணிப்பு நடத்தப்பட்டது. இதன்படி பாஜக. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவு அலை காணப்படுகின்றது. பதிவான வாக்குகளில் 43 சதவீதம் பாஜக கூட்டணிக்குக் கிடைக்கும் என்று கணிப்பு தெரிவிக்கின்றது.

## தமிழறிஞர் சாமிநாத சர்மா நூல்களுக்கு தமிழ்நாடு அரசு ரூ. 5 இலட்சம் வழங்குகிறது

(25-09-99)

தமிழறிஞர் சாமிநாத சர்மா நூல்களுக்குத் தமிழ்நாடு அரசு ரூ. 5 இலட்சம் வழங்குவதாகத் தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. வெ.சாமிநாத சர்மா தமிழ்நாட்டில் புகழ்பெற்ற எழுத்தாளராவர். கார்ல் மார்க்ஸ், மாஜினி ஆகியோரின் வாழ்கை வரலாறு, பிளேட்டோவின் கடிதங்கள், ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் போன்ற முற்போக்குக் கருத்துக்கள் அடங்கிய ஏராளமான நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தும், பல மூல நூல்களை உருவாக்கியும் தமிழுக்குச் சிறப்புச் செய்தவர்.

இந்த வகையில் இவர் 78 நூல்களைத் தமிழுலகிற்கு அளித்துள்ளார். இவருடைய நூல்களை நாட்டுடைமையாக்கப்படும் என்றும் அந்த அடிப்படையில் அவருடைய நூல்களுக்காக ரூ. 5 இலட்சம் பரிசுத் தொகையாக வழங்கப்படுமென்றும் முதல்வர் கருணாநிதி அறிவித்தார்.

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பு கூறுகின்றது.


# முதலாம் ஆண்டு வீர வணக்கம்



தாயின் மடியில்: 15.07.1967

தாயகத்தின் மடியில்: 28.09.1998

**கப்டன் சசிவர்ணா**

பவளராணி தர்மலிங்கன்

(கிளிநொச்சி)

தேச விடுதலைக்காய் நீ உயிர் கொடுத்தாய்
தமிழ்த் தேசத்தின் புயல்களாய் பகையுடன்
களமாடினாய்
தாயின் கருவறையில் உருவாகி
தாய் தமிழீழ மண்ணில் வித்தானாய்
பகைவன் சேனையைச் சிதறடித்துப்
போர்க்களம் மீதினில் புதுப்பரணி பாடினாய்.
மாவீரர்களான எம்முறவுகளுடன்
நீயும் மாவீரராய் இணைந்து கொண்டாய்
ஆண்டொன்று போனாலும் நேற்று
உன்னுடன் பழகியவையை எண்ணி
எங்கள் மனதும் கனக்கிறது
ஆனால் உன் இலட்சியம் வெல்லும்
அதுவரை நீ நிம்மதியாய் கல்லறையில் உறங்கு.

(இவருடன் ஓயாத அலைகள் II இல் மாவீரர்களான ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீர வணக்கங்கள்)

தகவல்: சி. சிவநடேசன்
வட்டக்கச்சி.

Pub

# தி.மு.க.பெரும் வெற்றி பெறும்! ஜெயலலிதா அதிர்ச்சியில்

பாராளுமன்றத் தேர்தல்கள் தமிழகத்தைப் பொறுத்தவரை 2 கட்டமாக நடந்து முடிந்துவிட்டன. பல்வேறு நிறுவனங்களும் வாக்குப் பதிவை அடிப்படையாக வைத்து, கருத்துக் கணிப்புகளை நடத்தின. இதன்படி தமிழகத்தில் தி.மு.க. கூட்டணியே மாபெரும் வெற்றியை அடையப் போகிறது. அ.தி.மு.க. கூட்டணி மோசமான தோல்வியைத் தழுவப்போகிறது என்று கருத்துக்கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன. இக் கணிப்புக்களின்படி தமிழ்நாட்டில் உள்ள 40 தொகுதிகளில் தி.மு.க. 25 முதல் 30 இடங்களையும், அ.தி.மு.க.10 முதல் 15 இடங்களையும் கைப்பற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக் கருத்துக்கணிப்பு முடிவினால் ஜெயலலிதா கடும் அதிர்ச்சி அடைந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் தோல்வியை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தி.மு.க கூட்டணியினர் கள்ள ஓட்டுப் போட்டுவிட்டதாகப் புகார் கூறி இருக்கின்றார். தோல்வி அடையப் போகிறோம் என்பதைச் சமாளிக்க கவர்னர் மாளிகை நோக்கி, கள்ள ஓட்டைக் கண்டித்து பேரணி என்று அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# அம்பேத்கர் சிலை உடைப்பு

மதுரை அருகே அவனியார் புரம் மாநகராட்சிக் காலனியிலிருந்த அம்பேத்கர் சிலையை இனந் தெரியாதவர்கள் தாக்கி உடைத்துள்ளனர். அதனால் ஆத்திரம் அடைந்த விடுதலைச் சிறுத்தைகள், தமிழ்நாடு அருந்ததியர், புதிய தமிழகம் கட்சியினரும் பொதுமக்களும் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இச் சிலை உடைப்புத் தொடர்பாக இருவரைப் பொலிசார் கைதுசெய்தனர். இது பற்றிய விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

# ராஜீவ் கொலை வழக்கில் தி.மு.க. மீதான குற்றச்சாட்டு முடிந்துவிட்டது

## வாழப்பாடி ராமமூர்த்தி

ராஜீவ் கொலை வழக்கில் ஜெயின், வர்மா கமிஷன் அறிக்கையோடு தி.மு.க. மீதான குற்றச்சாட்டு முடிந்துவிட்டது என்று வாழப்பாடி ராமமூர்த்தி கூறியுள்ளார்.



தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவரும் மத்திய அமைச்சருமான வாழப்பாடி ராமமூர்த்தி சென்னையில் நிருபர்களுக்கு வழங்கிய செவ்வியின்போது, ராஜீவ் கொலை வழக்கில் தி.மு.க. பற்றி நான் மாறுபட்ட கருத்தை ஏதும் சொல்லவில்லை. ராஜீவ் கொலை வழக்கில் தி.மு.க. தன்னை அக்னிபிரவேசத்திற்கு உட்படுத்திக்கொள்ளவேண்டும் என்று சொன்னேன். வழக்கு விசாரணையின்போது கருணாநிதி, ப.சிதம்பரம் ஆகியோரை நான் குறுக்கு விசாரணை செய்தேன். ஆனால் ஜெயின் கமிஷன் மற்றும் பர்மா கமிஷன் விசாரணை முடிந்து அதன் அறிக்கைகள் வெளிவந்தபோது அதில் தி.மு.க எந்த இடத்திலும் சம்பந்தப்படுத்தப்படவில்லை. கமிஷனின் விசாரணை அறிக்கையை நான் ஏற்றுக்கொண்டேன். ராஜீவ் கொலை வழக்கைப் பொறுத்தவரை வர்மா கமிஷன், ஜெயின் கமிஷன் அறிக்கையோடு தி.மு.க.வின் அக்னிப்பிரவேசம் முடிந்துவிட்டது எனத் தெரிவித்தார். தொடர்ந்து நிருபர்கள் இன்றைய தேர்தல் நிலைகுறித்துக் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த வாழப்பாடி,

தமிழ்நாட்டில் என்னைப் பொறுத்தவரை அ.தி.மு.க. ஒரு இடத்தில்கூட வெற்றி பெறப் போவதில்லை. மேற்கு வங்கத்தில் இந்த தேர்தலில் இடதுசாரிக் கட்சிகளுக்கு மிகப்பெரிய நஷ்டம்தான் ஏற்படப்போகிறது. ஆகவே இவர்கள் இருவரும் சேர்ந்து 282 இடங்களைச் சேர்த்து 3-வது அணியை ஆட்சிக்குக் கொண்டுவருவது என்பது, 'முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட' கதைபோல இருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வாக்குப்பதிவு சதவீதம் கடந்த தேர்தலைவிட 0.51 சதவீதம் அதிகரித்துள்ளது. அடிக்கடி தேர்தல் வருவதால்தான் மக்கள் வாக்களிக்க வருவதில்லை. இந்தியா முழுவதும் பாஜக கூட்டணி 320 இடங்களில் வெற்றி பெறும் வாஜ்பாய் மீண்டும் பிரதமராவார் எனத் தெரிவித்தார்.

# காஷ்மீரை கைப்பற்றும் பாகிஸ்தானின் கனவு நனவாகாது

## - வாஜ்பாய் -



இந்தியப் பிரதமர் வாஜ்பாய் மத்திய பிரதேச மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்தபோது, கார்கில் விவகாரத்தில் காங்கிரஸ் கட்சி பொய்ப் பிரச்சாரம் செய்து வருகிறது எனத் தெரிவித்தார். பாகிஸ்தானோடு நடந்த சண்டையில் இந்தியப் படையினர் தங்கள் உயிரைத் தியாகம் செய்து பிடித்த நிலத்தை, ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டு பாகிஸ்தான் ஆக்கிரமித்து வைத்திருந்தபோது அந்நிலத்தை மீட்க காங்கிரஸ் அரசுகள் முயலாதது ஏன் எனவும் கேள்வி எழுப்பினார். கார்கில் ஊடுருவியவர்கள் அனைவரையும் இப்போது நடந்த போரில் விரட்டி அடித்துவிட்டோம். ஒரு அங்குலம் நிலத்தைக்கூட நாம் இழக்கவில்லை. கார்கில் போரில் தோல்வி அடைந்த பாகிஸ்தான் அப்பாவி மக்களைக் கொல்லத் தீவிரவாதிகளை இந்தியாவுக்கு அந்த நாடு அனுப்பி வருகிறது. காஷ்மீரை அபகரிக்க வேண்டும் என்ற பாகிஸ்தானின் கனவு நனவாகாது. ஆட்சிகளைக் கவிழ்ப்பதையே தொழிலாகக் காங்கிரஸ் கொண்டுள்ளது. ஆட்சியில் இல்லாவிடில் அவர்களால் சும்மா இருக்கமுடியாது. நாட்டில் நிலையற்ற தன்மை உருவாகக் காங்கிரஸ்தான் காரணம். பா.ஜ.க.வுக்குப் பதவி, ஆசை கிடையாது எனவும் தனது உரையில் தெரிவித்தார்.

# சர்வதேச நீதிமன்றத்தில் இந்தியா மீது பாகிஸ்தான் வழக்குப் பதிவு

பாகிஸ்தான் உளவு விமானம் கடந்த ஓகஸ்டு 10-ம் திகதி இந்திய எல்லையில் குஜராத் பகுதியில் ஊடுருவியபோது இந்திய விமானப்படை அதனைச் சுட்டு வீழ்த்தியது. இதில் பாகிஸ்தான் விமானத்தில் இருந்த 16 பேர் இறந்தனர். இதற்கு நஷ்டஈடு தர வேண்டும் என்று பாகிஸ்தான் கோரியது. ஆனால் அதை இந்தியா நிராகரித்துவிட்டது. இப்போது ஹோக் நகரில் (நெதர்லாந்து) உள்ள சர்வதேச கோர்ட்டில் இந்தியா மீது பாகிஸ்தான் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. ரூபா 260 கோடி நஷ்டஈடு கோரி இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் வெளியுறவுத் துறைச் செய்திக்குறிப்பில் இந்தத் தகவல் வெளியாகி உள்ளது. இந்தத் தகவலைச் சர்வதேச நீதிமன்றமும் உறுதி செய்துள்ளது.

# நடிகர் விஜய் படத்துக்கு வேலை செய்யமாட்டோம் -சினிமா தொழிலாளர்கள்-

நடிகர் விஜய் படத்துக்கு வேலை செய்யமாட்டோம் எனச் சினிமா தொழிலாளர்கள் கூறியுள்ளனர். சென்னை அசோக் நகரிலுள்ள ஒரு தியேட்டரில் விஜய் நடிக்கும் 'மின்சார கண்ணாவை' திருட்டு வீடியோ எடுத்ததாக மின் பிம்பங்கள் நிறுவனத்தின் மீது குற்றம்சாட்டி விஜயின் தந்தையான எஸ்.ஏ. சந்திரசேகர் மின் பிம்பங்கள் நிறுவனத்தினரின் மீது தாக்குதல் நடாத்தினார்.

இந்த நிறுவனம் டைரக்டர் கே.பாலசந்தரைச் சேர்ந்தது. ஆனால் ஜப்பான் நாட்டிற்காக ஆவணப்படம் ஒன்றிற்காகச் சில காட்சிகள் எடுக்கப்பட்டதாக மின் பிம்பங்கள் தரப்பில் கூறப்பட்டது. இந்தச் சம்பவத்தை அடுத்து தனது பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளதாகக் கூறி டைரக்டர் பாலசந்தர் 'பெப்சி' தலைவர் பதவியிலிருந்து விலகினார்.

இந் நிலையில் தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் நடிகர் விஜய்யும், அவரது தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரும் நடந்துவிட்ட சம்பவத்திற்கு வருத்தம் தெரிவிக்கவேண்டும். அவர்கள் வருத்தம் தெரிவிக்காத வரை விஜய்யும், அவரது குடும்பத்தார்கள் சம்பந்தப்பட்ட படங்களில் இனி 'பெப்சி' தொழிலாளர்கள் வேலை செய்யமாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

# காவிரி நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினை டெல்லியில் முதல்வர்கள் மாநாடு

*(25-09-99)*

தமிழ்நாட்டிற்கான காவிரி நீரைக் கர்நாடக மாநிலம் தர மறுத்துள்ளதால் குறுவைப் பயிர்ச் செய்கை பாதிப்புக்குள்ளாகி உள்ளது. ஆதலால் குறுவைப் பயிரைக் காப்பாற்ற உடனடியாக காவிரியில் தண்ணீர் திறந்துவிடுவது குறித்து விவாதிக்க வரும் 29 திகதி காவிரி நதிநீர் ஆணையத்தின் அவசரக் கூட்டத்தைப் பிரதமர் வாஜ்பாய் கூட்டியுள்ளார். தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், புதுவை ஆகிய மாநிலங்களின் முதல்வர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்கின்றனர். இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வசதியாக தனது தேர்தல் பரப்புரைப் பயணத் திட்டத்தை முன்னதாக்வே பிரதமர் முடித்துக் கொள்கிறார்.

பிரதமர்தான் இந்த ஆணையத்தின் தலைவராவார். சனிக்கிழமை காவிரி பிரச்சினை தொடர்பாக இவரைச் சந்தித்த தமிழ்நாடு அமைச்சர்களிடம் 'தமிழ்நாட்டில் குறுவைப்பயிரைக் கீாப்பாற்றக் காவிரியில் தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்படும்' என உறுதியளித்தார்.

# பிரான்சிடமிருந்து இந்தியா மிராஜ் விமானங்களை வாங்குகிறது

அணுகுண்டு ஏவுகணைகளை ஏற்றிச் செல்லக்கூடிய மிராஜ் 2000 D என்ற வகையைச் சேர்ந்த விமானங்களைப் பிரான்சிடமிருந்து கொள்வனவு செய்ய இந்தியா முடிவு செய்துள்ளது. இதற்காக இந்திய விமானப்படைத் தளபதி டிப்னிஸ், பாரிஸ் வந்துள்ளதாகத் தெரியவருகிறது. இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் 18 விமானங்களை இந்தியா வாங்கவுள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

கொள்வனவு செய்யவுள்ள மிராஜ் விமானம் ஒன்றின் பெறுமதி 48 கோடி இந்திய ரூபாவாகும்.

# கன்னியாஸ்திரி மீது பாலியல் வன்முறை

*(25-09-99)*

பீகாரில், புதுவை கன்னியாஸ்திரி பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டது தொடர்பான நிகழ்வில் குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய அரசுக்குப் புதுவை மாநில அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது. பாதிக்கப்பட்டவருக்கான மருத்துவச் செலவை புதுவை அரசே ஏற்கும் என்றும், அவரைப் புதுவைக்கு அழைத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் புதுவை முதல்வர் ஜானகிராமன் தெரிவித்துள்ளார்.


அம்பாள் வாகன சேவை

AMBAL TRANSPORT

பொருட்களை ஏற்றி இறக்கவும், மங்கள வைபவங்கள், ஸ்தல யாத்திரைகள், சுற்றுலாக்கள், ஐரோப்பிய நாடுகளுக்கான

9 இருக்கைகள் கொண்ட வாகனசேவைகளுக்கு



ஜெயம்:

26, Rue Perdonnet,
75010 Paris.
Mo: La Chapelle
Tel: 06 03 84 02 29 / 06 10 38 44 92 / 06 84 57 21 77




# அமைதிப் பேச்சில் துணைபுரிய உலக சமூகத்தின் உதவியை அரபாத் கோருகிறார்

(23.09.99)

ஐநாவின் பொதுச் சபையின் முன் பாலஸ்தீன அதிகார சபையின் தலைவர் யாசீர் அரபாத் பேசும்போது இஸ்ரேலின் குடியேற்ற நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தும்படி கோரினார். அத்துடன் இஸ்ரேலுடன் இறுதியான உடன்படிக்கை ஒன்றுக்கு வருவதற்கு சர்வதேச சமூகத்தின் தலையீடு இருக்கவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். புதிய நூற்றாண்டில் ஐ.நா கூடும்போது ஜெருசலேமைத் தலைநகராகக் கொண்டு சுதந்திர பாலஸ்தீனம் அமைந்திருக்கவேண்டுமென தாம் விரும்புவதாகவும் கூறினார். அடுத்த மாநாடு செப்டெம்பர் மாதம் 2000-ம் ஆண்டில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிடையே இஸ்ரேலும் பாலஸ்தீனமும் இறுதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் திட்டம் வகுத்துள்ளன.

188 நாடுகளின் பிரதிநிதிகள் முன் அவர் உரையாற்றுகையில், சுதந்திர பாலஸ்தீனை உருவாக்க பாலஸ்தீன மக்களுக்கு உரிமையுண்டு. அதன், தலைநகராக ஜெருசலேம் அமையும். அது மத்திய கிழக்கின் நிரந்தர அமைதியை உறுதி செய்யும் என்று கூறினார். மேலும் ஏற்படக்கூடிய அமைதியை நாசமாக்கும் சில வேலைத்திட்டங்கள் தொடருவதாகவும், சர்வதேச சட்டங்களை அவை மீறுவதாயும் இஸ்ரேல் உடனடியாக அவற்றை நிறுத்தி உலக விதிக்கமைய செயற்படவேண்டும் என்றும் கூறினார். பாலஸ்தீன அமைதி நடவடிக்கைகளில் இருந்து மேற்கு நாடுகள் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா விலகிக்கொள்ள முயற்சிக்கின்றது. இதனைச் சுட்டிக்காட்டிய அரபாத், சர்வதேச சமூகம் தனது பலத்தினை மேலும் உறுதிப்படுத்தி அமைதி முயற்சிகள் வேகமாக முன்னேற உதவவேண்டும் எனக் கோரினார்.



அரபாத்

# செச்சினியாவிற்கு தரைப்படை அனுப்ப ரஷ்யா யோசனை

(26.09.99)

ரஷ்ய விமானப் படைவிமானங்கள் செச்சினியாவின் நிலைகள் மீது தாக்குதல்களைத் தொடரும்வேளை அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் இகோர் சேர்கெயேவ் செச்சினியாவின் மேல் தரைவழி நடவடிக்கைகளையும் நடத்த தாம் யோசித்து வருவதாகத் தெரிவித்தார்.

செச்சினியாவின் உள்ளே ஆழமாக ஊடுருவி அங்குள்ள சட்டவிரோதக் குழுக்களையும், எதிர்க்குழுக்களையும் ஒழித்து அப்பிராந்தியத்தில் பாதுகாப்பு வலையமொன்றினைத் தோற்றுவிப்பதே ரஷ்யாவின் நோக்கம் எனக் கூறிய அமைச்சர், அதற்காகப் பல திட்டங்கள் யோசிக்கப்பட்டு வருவதாயும், இழப்புக்கள் குறைந்த ஒரு நடவடிக்கை சிபாரிசு செய்யப்பட்டு அதனைச் செயற்படுத்தும் யோசனையும் ரஷ்யாவுக்கு உண்டு என்றார். இதற்கிடையே ரஷ்யப் பாராளுமன்றத்தில் செச்சினியா மீது, முழு அளவிலான இராணுவ நடவடிக்கை ஒன்று எடுக்கப்படவேண்டியதன் அவசியம் பற்றியும் விவாதிக்கப்பட்டது. ஆனால் 1994-1996ம் ஆண்டுகளில் நடந்த யுத்தத்தில் 80.000 பேர் வரை கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. ரஷ்ய விமானங்கள் கடந்த நான்கு நாட்களாக செச்சினிய தலைநகர் குரொஸ்னி மீது தாக்குதல்களைத் தொடர்கின்றன. இத் தாக்குதல்களில் அந்நகரின் தொலைக்காட்சி நிலையம் மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் போன்றன அழிவுக்கு உள்ளாகியுள்ளன. பல ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்து அண்டை நாடான இங்குஷேதியாவுக்கு நகர்ந்துள்ளனர். இதுவரை 100.000 இற்கு மேற்பட்ட மக்கள் இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தலிபான் விமானக் குண்டு வீச்சில் 11 பேர் மரணம்

(26.09.99)

ஆப்கான் ஆட்சியாளர்களான தலிபான்களின் விமானப்படை விமானங்கள், நாட்டின் வடபகுதியில் இரண்டாவது நாளாகக் குண்டுவீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

வடபகுதியில் அகமத்ஷா மசூத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிகள்மேல் தொடரும் இத் தாக்குதல்களால் பலர் கொல்லப்பட்டும் ஏராளமான மக்கள் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். வடபகுதி காகர் பிராந்திய தலைநகரான தலக்கான் நகர் மீது தலிபான் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் நேற்று மாத்திரம் 11 பேர் கொல்லப்பட்டு, 28 பேர் காயமடைந்தனர். இதே பகுதியில் கடந்த சனியன்று நடத்தப்பட்ட குண்டுவீச்சில் பதினொரு பேர் கொல்லப்பட்டனர். இதே வேளை தாஷி—I ஆர்ஷி எனும் பகுதியில் நடந்த மோதலில் 44 தலிபான் இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இப்பகுதியில் தொடரும் யுத்தத்தினால் பெரும்பாலான மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர். அத்துடன் பாதுகாப்புத்தேடி நிலக்கீழ் பதுங்கு குழிகளுக்குள்ளும் பதுங்கிக்கொண்டுள்ளனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# உல்லாசப் பயணத்தில் இணையும் வான்வெளி

(26.09.99)

உலகிற்கு அப்பால் ஒரு பயணம் சென்றுவர விருப்பமா? அப்படியானால் வான்வெளிப் பயணம் ஒன்றினை ராக்கெட்டில் சென்று வர, உங்களுக்கு 90.000 அமெரிக்க டொலர் மட்டும்தான் தேவை. ஏற்கனவே ஒரு நிறுவனம் அண்டவெளிப் பயணத்துக்காக நூறு பிரயாணிகளுடன் தயாராக உள்ளது. வேர்ஜினியா மாநிலத்தை மையமாகக்கொண்டு இயங்கும் இந்நிறுவனத்தின் இயக்குநர் பாரமில்லாத உடலின் நன்மையையும், வானின் இருள் சுற்றுப்புறத்தையும், தூர இருந்து உலகைப் பார்ப்பதையும் ஒரு புதுவிதமான அனுபவம் என்கிறார்.

அமெரிக்க தேசிய விண்வெளி ஆய்வு நிறுவனம் ஒரு தசாப்தமாகச் செய்துவரும் ஆய்வுகளின் இறுதியில் தனியார் நிறுவனங்களும் வான்வெளி பயணத்துக்கு ஏற்பாடு செய்வது என முடிவெடுக்கப்பட்டது. 2004 ஆண்டில் சர்வதேச விண்வெளி நிலையத்தின் வேலைகள் முடிவடையும் போது, அங்கு தனியார் நிறுவனங்களும் உல்லாசப் பயணிகளை அங்குகொண்டு சென்று தங்கவைக்கும் என நாசாவின் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.

# பிரித்தானிய உதவி தொடருந்து மசிடோனியாவில் தடுத்து நிறுத்தப்பட்டது

(26.09.99)

பிரித்தானியாவில் இருந்து 8.000 தொன் உதவிப் பொருட்களுடன் கொசோவோ தலைநகர் பிரிஸ்டினாவுக்கு விரைந்து கொண்டிருந்த உதவி தொடருந்து அதனது பயணத்தில் இரண்டாவது முறையாக தற்போது மசிடோனியாவில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. மசிடோனிய அரசு இந்த தொடருந்து தொடர்ந்து செல்லவேண்டுமாயின் 8.000 அமெரிக்க டொலர்களைச் செலுத்தவேண்டும் என அறிவித்துள்ளது. உள்ளூர் தொடருந்து ஊழியர்களின் பயமுறுத்தல்களுக்கும் இந்த தொடருந்து பயணத்தின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான டோனி மொரிஸ் உள்ளானார். உதவி தொடருந்து தொடர்ந்தும் பயணம் செய்ய கொசோவோவிலுள்ள அமைதிப் படைத்தளபதிகளும் மசிடோனியாவில் பிரித்தானிய தூதரகமும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

இந்த தொடருந்தில் உணவுப் பொருட்கள், உடைகள், மற்றும் கட்டடப்பொருட்கள் இவை தவிர குண்டுத் தாக்குதல்களால் சேதமடைந்துள்ள தொடருந்து தண்டவாளங்களைத் திருத்தும் உபகரணங்கள் என பலதரப்பட்ட உதவிப் பொருட்கள் கொண்டு செல்லப்படுகின்றன. இந்தத் தொடருந்து கடந்த வெள்ளியன்று கிரேக்கத்துக்கும், பல்கேரியாவுக்கும் இடையே உள்ளூர் தொடருந்துச் சாரதி ஒருவர் கிடைக்காததால் எட்டு மணி நேரம் நிறுத்தப்பட்டிருந்தது.

# ஹொன்டூராசில் 100.000 மக்களை வெளியேற பணிப்பு

(26.09.99)

ஹொன்டூராஸ் அரசு சுமார் 100,000 இற்கும் மேற்பட்ட மக்களைத் தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேறுமாறு பணித்துள்ளது. கடந்த இரண்டு வாரங்களாக அந்நாட்டில் பெய்து வரும் மழையால் நாட்டின் மிகப் பெரும் மின்சார உற்பத்தி மையத்தின் அணைக்கட்டு 'உடைப் பெடுக்கும் அபாயம்' தோன்றியுள்ளதாலேயே அரசு அப்பகுதி மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு நகருமாறு கோரியுள்ளது.

இதுவரை இப்பகுதியில் பெய்துவரும் மழையால் ஆறுபேர் கொல்லப்பட்டு 300 இற்கும் அதிகமான வீடுகள் தரைமட்டமாகியுள்ளன. அத்துடன் நாட்டின் 9 பாலங்கள் இடிந்துபோயுள்ளன. கடந்த வருடம் 'மிட்ச்' சூறாவளியினால் அந் நாட்டில் 5,000 பேர் கொல்லப்பட்டு 8.000 பேர் காணாமல் போயினர். அத்துடன் பல மில்லியன் டொலர் பெறுமதியான தளவாட இழப்புக்களும் ஏற்பட்டன. அந்த இழப்பில் இருந்து நாடு மீள்வதற்கு முன்பாகவே அடுத்த அனர்த்தம் ஏற்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஹொன்டூராஸ் நாட்டின் மின்சார தேவைகளின் 60 விகிதத்தைப் பூர்த்தி செய்யும் 'எல் கஜோன்' நீர் மின்சார நீர்த்தேக்கத்தின் அளவு தொடர்ந்து உயர்ந்துகொண்டே செல்வதாயும் அது உடைப்பெடுப்பதைத் தடுக்க அணைக்கட்டுக்களைத் திறந்து விடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாயும் கூறும் அதிகாரியொருவர், இதன் காரணமாக உல்வா, சுலாகோ, ஹீமுயா போன்ற ஆறுகளின் நீர்மட்டம் உயரக்கூடும். இதனால் இவ் ஆறுகளின் அண்டிய பகுதிகளில் வாழும் மக்கள் வெள்ள அபாயத்தினை எதிர்நோக்குகின்றனர் என்று கவலை தெரிவித்தார்.



# கொங்கோவில் ஐ.நாவின் கண்காணிப்புக் குழு

(26.09.99)

ஐ.நாவின் இராணுவ கண்காணிப்புக்குழு கொங்கோ ஜனநாயக குடியரசின் கடமைகளை பொறுப்பேற்கும் எனக் கூறியுள்ளது. அங்கு போர் நிறுத்த மீறல்களைக் கண்காணிப்பதே இதன் கடமையாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நியூயோர்க்கில் நடந்த உயர்மட்ட ஆலோசனைக் கூட்டத்தில் கொங்கோவில் ஐ.நாவின் கண்காணிப்பு அவசியம் என்று முடிவெடுக்கப்பட்டது என்று கண்காணிப்புக் குழுவின் தலைவரான பிரித்தானியரான எலெரி கேம்ஸ் கின்சாசாவில் வைத்து பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

அந் நாட்டில் கடந்த ஒரு வருடமாக இடம்பெற்றுவரும் அரச எதிர்ப்பு யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் அண்மையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. ஆனால் அதன் பின்னரும் இரு தரப்பினரும் இடையிடையே மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் அந்நாட்டிற்கு சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐ.நா. கண்காணிப்புக் குழு ஒன்று கடந்தவாரம் அனுப்பி வைக்கப்பட்டது. இன்னும் சில வாரங்களுக்குள் அந்நாட்டில் ஐ.நாவின் அமைதிப்படையொன்று செயற்படும் நிலையை தோற்றுவிப்பதே இக்குழுவின் கடமையாகும். இங்கு தற்போது நிலைகொண்டுள்ள வெளிநாட்டுப் படைப்பிரிவுகள் வெளியேற, அங்கு ஐ.நாவின் அமைதிப் படை செயற்பாடுகளை ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாய்வான் நில நடுக்க இழப்பு இரண்டாயிரத்தைத் தாண்டியது

(23.09.99)

தாய்வானின் தலைநகர் 'தாய் பேய்'யிற்கு 200 கிலோ மீற்றர் தொலைவில் தெற்கே அமைந்துள்ள மலைப்பகுதிப் பிரதேசத்தில் கடந்த செவ்வாயன்று ஏற்பட்ட நில நடுக்கத்தின் விளைவாக ஏற்பட்ட உயிரிழப்பு 2000 இற்கும் அதிகம் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

தாய்வானின் நன்டு, தாய்சூல் மற்றும் யுவ்லிப் போன்ற பகுதிகளை உள்ளடக்கிய பிராந்தியத்திலேயே கடந்தவாரம் நில நடுக்கம் ஏற்பட்டது. இதில் 60.000 மக்களைக்கொண்ட தங்ஸீ நகரின் பெரும்பாலான கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன.

பெரிதாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பாலங்களும் பாதைகளும் சிதைவடைந்து போயுள்ளதால் அப்பகுதிகளுக்கான உதவிகள் வான் வழியாகவே சென்றடைய வேண்டியுள்ளது. மேலும் நில நடுக்கத்தையடுத்துப் பெருங்குளங்கள் சிலவும் உடைப்பெடுத்ததால் ஏராளமான குடியிருப்புக்கள் வெள்ளத்திற்குள் சிக்கிக்கொண்டுள்ளன. இந்த நில நடுக்கத்தின் உயிரிழப்புக்கள் அதிகரிக்கலாம் எனக் கூறும் தாய்வான் அரசு. 5.000 இற்கும் மேற்பட்ட மக்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் 1,000.000 இற்கும் அதிகமானோர் வீடு வாசல்களை இழந்துள்ளனர் எனவும் கூறியுள்ளது.

நில நடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து பல நாடுகள் தமது மீட்புக் குழுக்களை அங்கு அனுப்பியுள்ளன. இஸ்ரேல், ஜப்பான், ரஷ்யா, சிங்கப்பூர், தென்கொரியா, துருக்கி, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளும் இவற்றில் அடங்குகின்றன. அண்டைய நாடான சீனா உதவிகளை அனுப்பத் தயாராக உள்ளதாகச் சீனத்தலைவர் சியாங்செமின் தெரிவித்துள்ளார். இதனை வரவேற்ற தாய்வான் தலைவர், சீனாவின் உதவிக் கோரிக்கை இரு நாடுகளுக்கும் இடையே தோன்றியுள்ள மனக்கசப்பை முடிவுக்குக் கொண்டுவர உதவும் எனக் கூறியுள்ளார்.



நிலநடுக்கத்தில் உறவினரை இழந்த ஒரு பெண்

# புதிய கொசோவோ ஒப்பந்தம் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் –ரஷ்யா

(23.09.99)

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் கடந்த புதனன்று கொசோவோ விடுதலை இராணுவத்தை மக்கள் படையாக மாற்றி அமைப்பது தொடர்பாக ஏற்பட்ட ஒப்பந்தத்தை வன்மையாகக் கண்டித்தார். இது ஒரு நம்பிக்கையற்ற அரசியல் நகர்வு என அதனை அவர் வர்ணித்தார்.

'கொசோவோ பாதுகாப்புப் படை' சமாதானத்திற்கும், யூகோஸ்லாவியாவிற்கும் அச்சுறுத்தலாக இருக்கும் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சு விடுத்த அறிக்கையில் கூறியுள்ளது. இது, ஐநா.வின் அறிவித்தலான . கொசோவோ விடுதலை இராணுவமும் ஏனைய குழுக்களும் ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும் என்பதற்கு முற்றிலும் மாறாக இருக்கின்றது. எடுக்கப்படும் ஒவ்வொரு நகர்வும் KLA சாதாரண வாழ்க்கை முறைக்கு மாறும் வகையில் எடுக்கப்பட வேண்டும். இல்லாது விட்டால் இந்த அர்த்தமற்ற அரசியல் நகர்வால் ஏற்படும் எதிர்மாறான விளைவுகளுக்கு ரஷ்யா பொறுப்பேற்க மாட்டாது என்றும் வெளியுறவு அமைச்சு கூறுகிறது.

கொசோவோ விடுதலை இராணுவத்தை மக்கள் பாதுகாப்புப் படையாக மாற்றுவதென்றும் 5,000 பேர் இவ்விதம் இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் அமெரிக்க அதிகாரிகளும் கொசோவோ விடுதலை இராணுவத்தினரும் ஒப்புக்கொண்டு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டனர். இதன்படி 3,000 அல்பேனியர்கள் நிரந்தர படையிலும் 2000 பேர் உதவிப்படையிலும் செயற்படுவார்கள் என்றும், கொசோவோ பகுதிகளில் மனித உதவி நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும், 18 மாதகாலப் பிரச்சினைகளால் சேதமடைந்துள்ள கொசோவோப் பகுதிகளைப் புனரமைப்பதிலும் இவர்கள் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சரைக்கொன்ற நேட்டோ இராணுவவீரன் விடுதலை

(24.09.99)

நேட்டோ படையில் அங்கம் வகிக்கும் நோர்வேஜிய படைவீரன் ஒருவர் கடந்த வியாழனன்று மசிடோனிய பாதுகாப்பு அமைச்சினால் விடுதலை செய்யப்பட்டார். இவர் கடந்த மாதம் கார் விபத்தில் மசிடோனிய அமைச்சர் ஒருவரையும் அவரது குடும்பத்தினரையும் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இவரது கைது நடவடிக்கையில் மசிடோனிய அரசுக்கும் வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் அமைப்புக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றின. அதனையடுத்துச் சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை மசிடோனியா விடுதலை செய்துள்ளது. ஆனால் இவர் மீதான விசாரணைகள் நோர்வேஜியச் சட்ட விதிகளின்படி தொடரும் எனக் கொசோவோ அமைதிப்படையின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே அமைச்சர் கொல்லப்பட்ட சமயம் தமது படையினர் வீதியில் எதிர்ப்புறமாகவே வந்ததாயும் இதுவே விபத்துக்குக் காரணமானது என்றும் இச் சம்பவத்திற்குத் தாம் வருத்தம் அடைவதாயும் KFOR தளபதி ஒருவர் கூறியுள்ளார். ஆனால் நேட்டோவும் மசிடோனியாவும் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி அங்கு கடமை புரியும் படையினர் அவர் சார்ந்த நாட்டிலேயே விசாரிக்கப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிரியா-அமெரிக்கா பேச்சுவார்த்தை

(23.09.99)

சிரிய வெளியுறவு அமைச்சர் பாரூக் சஹாரா கடந்த புதனன்று அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மெடலின் ஒல்பிரைட்டைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். தமக்கிடையே நடந்த பேச்சுக்கள் மிகவும் சிறந்த முறையில் அமைந்தன எனக்கூறிய சிரிய அமைச்சர், இஸ்ரேலுடன் அமைதிப் பேச்சுக்களைத்தொடர இது பெரும் உதவியாக இருந்தது என்றார். ஆனாலும் குறிப்பிடத்தக்க விடயங்கள் எதுபற்றியும் முடிவுகள் மேற்கொள்ளவில்லை எனக்கூறிய அவர், தாம் தொடர்ந்து தொடர்புகளை வைத்துக்கொள்வோம் என்றும் கூறினார்.

நியூயோக்கில் நடைபெறும் ஐ.நாவின் 54வது பொதுச் சபைச் கூட்டத்தொடரின்போது இவர்களது சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

## துருக்கி இராணுவத்தினர் பலி; ஐந்து ஜேர்மன் படையினர் காயம்

(24.09.99)

கொசோவோவில் கடந்த புதனன்று நடந்த இரு வேறு சம்பவங்களில் ஒரு துருக்கி இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், ஐந்து ஜேர்மனிய இராணுவத்தினர் காயங்களுக்கும் உள்ளானார்கள். நேட்டோ தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில், தினமும் பல சேர்பியர்களும் அல்பேனியர்களும் தங்களது உயிர்களை இழந்து வருகின்றனர் எனக் கூறியுள்ளது. பிரிஸ்ரென் பகுதியில் அமைந்துள்ள துருக்கிய முகாமில் குண்டு வெடித்ததில் ஒரு படையினர் கொல்லப்பட்டார். அத்துடன் அல்பேனிய எல்லைக்கு 20 கிலோ மீற்றர் தூரத்தில் கால் நடையாக ரோந்து சென்ற ஜேர்மன் படையினர் மிதிவெடியில் சிக்கியதில் ஐவர் பலத்த காயமடைந்தனர்.

## உலக சனத் தொகை 6 பில்லியன்களைத் தாண்டுமாம்

உலகின் சனத்தொகை அடுத்தமாதம் 6 பில்லியனைத் தாண்டும் என ஐ.நாவின் கணிப்புக்கள் தெரிவித்துள்ளன. பெரும்பாலான வறிய நாடுகளின் சனத்தொகை மிகவும் அதிகரித்துள்ளதாகக் கூறும் கணிப்பீடு ஆபிரிக்கச் சனத்தொகை 1960-ம் ஆண்டின் பின் இன்றுவரை மூன்று மடங்காக அதிகரித்து 767 மில்லியனாக உள்ளது. அதுபோல் ஆசிய சனத்தொகை இரண்டு மடங்காகி 3.6 பில்லியனாகியுள்ளது. இதற்கு மாறாக வட அமெரிக்க, ஐரோப்பிய சனத்தொகை விருத்திகளானது ஒன்றில் குறைவடைந்தோ அல்லது ஸ்தம்பிதமடைந்தோ உள்ளதென்றும் கணிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் குடியேற்றங்கள் காரணமாக அமெரிக்காவில் மாத்திரம் சனத்தொகை அதிகரித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

## மிலோசோவிச் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் வேகம் குறைகிறது

யூகோஸ்லாவிய அதிபர் ஸ்லோபோடோன் மிலோசோவிச் பதவியில் இருந்து வெளியேற வேண்டும் என அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் ஆரம்பித்த ஆர்ப்பாட்டங்கள் இப்போது வேகம் குறைந்து மந்த நிலையை அடைந்துள்ளன என செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்தவாரம் யூகோஸ்லாவியாவின் எதிர்க்கட்சிகள் தினசரி எதிர்ப்பு நவடிக்கைகளை நடத்தப்போவதாக அறிவித்தன. அதன்படி வார ஆரம்ப நாளில் சுமார் 2000 பேர் தலைநகர் பெல்கிரேட்டில் கூடினார்கள். அதேபோல் நாட்டின் பல்வேறு நகரங்களிலும் இவ்விதமான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. ஆனால் அடுத்து வந்த நாட்களில் இவற்றின் வேகம் சுமார் 2.000 ஆக குறைந்துள்ளன.

எதிர்க்கட்சிகளிடையே உள்ள பிரிவினைகளும் பொலிசாரின் கைதுகளும்தான் இவற்றுக்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது. அத்துடன் கொசோவோவில் ஏற்பட்டுவரும் மாற்றங்களும் மிலோசோவிச் ஆதரவினை அதிகரிக்கக் காரணமாகியுள்ளது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.


உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கலகரமான நிகழ்ச்சிகள், மற்றும் மேடை நிகழ்ச்சிகள் அனைத்திலும் இசைமழையில் நனைந்திட ஐரோப்பா புகழ்

* ஈழநிலா *

தொடர்புகட்கு:
இயக்குநர் எஸ்.எஸ். தில்லைச்சிவம்
Tel: 01 40 37 56 69

ஜேர்மனி பொன் (Bonn) நகரில்

யாழ் ரவல்ஸ்
YARL TRAVELS
Thomas Mann Str 21,53111 Bonn

உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்
பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்
சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா
ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.

தொலைபேசி இலக்கம்: 0228/9652885 — தொலைநகல்: 0228/9652985

GE-Pub.

ETC

# 342 நிமிடம் கோடைகால சலுகை

தேசத்தின் விடிவை விரைவாக்க
இதோ உங்கள் கரங்களில்
ஈழம் தொலைபேசி அட்டைகள்

Kanada
Belgiene
Frankreich
Schweiz
Dänemark
Norwegen
Niederlande
Großbritannien

342 Min




**ஈழம் தொலைபேசி அட்டையின்
வாடிக்கையாளர்களுக்கு ஒரு மாபெரும் நற்செய்தி!**

உங்கள் ஆதரவுப் படிகளில் ஏறி நிற்கிறது ஈழம் தொலைபேசி அட்டையின்

## முன்னேற்றப் புதுப் பொலிவு!!

உலக விஞ்ஞானம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள
நவீன தொழில்நுட்பத்துள் காலடி எடுத்து வைக்கிறது

## ஈழம் தொலைபேசி அட்டை!!!

எவ்வித இடையூறுகளும் இல்லாத தெளிந்த ஒலிப் பொலிவையும்
தடையில்லாத நீண்டநேர இணைப்பையும் காக்கவைக்காத
உடனடித் தொடர்பையும் அதிசயிக்கும் வகையில் தரவிருக்கும்
நவீன வான் அலைநுட்பத்துள்
ஈழம் தொலைபேசி அட்டை இணைந்துகொள்ளுகிறது
என்னும் மகிழ்ச்சிகரமான செய்தியை உங்களுக்கு
அறியத்தருகின்றோம்!

ஆங்கிலமொழி விளக்கத்துடன்:
08001007234 / 069222210046
டொச் மொழி விளக்கத்துடன்:
08001007235 / 069222210047

ஆகிய புதிய இலக்கங்களுடன்–புதுப் பொலிவுடன்
தொடர்ந்தும் தனது பணியில்–முன்னேற்றப் பாதையில்
வெற்றிநடைபோடவிருக்கிறது ஈழம் தொலைபேசி அட்டை!

உங்கள் ஆதரவால் உயர்ந்துவரும் உங்கள் தொலைபேசி அட்டை

## ஈழம் தொலைபேசி அட்டை!

114 Min China, Indien, Srilanka

Tamil Eelam 25 Min

**EELAM TELECARD - Germany**

**Tel: 0173 2722846
0208 2053652**

| Country | 20/Min | 50/Min | 100/Min |
|---|---|---|---|
| Germany | 80 | 220 | 480 |
| Großbritannien | 57 | 157 | 342 |
| Kanada | 57 | 157 | 342 |
| USA | 50 | 137 | 300 |
| Frankreich | 57 | 157 | 342 |
| Schweiz | 57 | 157 | 342 |
| Niederland | 57 | 157 | 342 |
| Italien | 40 | 110 | 240 |
| Dänemark | 57 | 157 | 342 |
| Norwegen | 57 | 157 | 342 |
| Hongkong | 38 | 105 | 230 |
| Neuseeland | 36 | 100 | 218 |
| Australien | 36 | 100 | 218 |
| Japan | 35 | 96 | 210 |
| Jugoslawien | 29 | 80 | 176 |
| Türke | 26 | 73 | 160 |
| Singapur | 25 | 68 | 150 |
| Weissrubbland | 24 | 66 | 144 |
| Malaysia | 23 | 64 | 141 |
| Bulgarien | 21 | 60 | 131 |
| Griecheniand | 21 | 58 | 127 |
| Rumänien | 19 | 52 | 115 |
| China | 19 | 52 | 114 |
| Indien | 19 | 52 | 114 |
| Srilanka | 19 | 52 | 114 |
| Ghana | 18 | 50 | 109 |
| Tunesien | 18 | 50 | 109 |
| Rubbland | 16 | 46 | 100 |
| Angola | 15 | 42 | 93 |
| Thailand | 15 | 42 | 92 |
| Taiwan | 15 | 42 | 92 |
| Philippinen | 15 | 42 | 92 |
| Bangladesch | 14 | 40 | 88 |
| Pakistan | 14 | 40 | 88 |
| Nigeria | 14 | 35 | 86 |
| Ärgentinien | 14 | 39 | 85 |
| Kenia | 13 | 38 | 83 |
| Agypten | 12 | 35 | 76 |
| Iran | 11 | 32 | 71 |
| Jordanien | 11 | 32 | 71 |
| Kamerun | 11 | 32 | 71 |
| Indonesien | 11 | 32 | 70 |
| Afghanistan | 11 | 32 | 70 |
| Somalia | 10 | 28 | 63 |
| Tamil Eelam | 4 | 11 | 25 |




ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# வரையப்படும் எல்லைகள்

மழைவிட்டும் தூவானம் ஓயாத கதையாக அம்பாறை சம்பவத்தின் ஒப்பாரிகள் சிங்கள அரசியலில் இன்னும் ஓய்ந்தபாடில்லை. சிங்களப் படைகளால் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட போதெல்லாம் புலிகள்தான் கொல்லப்பட்டார்கள் என வாய் கூசாது சொல்லி வந்த சிங்களப் பேரினவாதிகள் எல்லாம் இப்போது சிங்கள மக்கள் கொல்லப்பட்டதும் அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டுவிட்டனர் என சர்வதேசம் முழுவதும் தனது 'கண்களை கசக்கிகாட்ட' முனைகிறது. ஆனால் வழக்கம்போல் சர்வதேசத்தில் சிறீலங்கா அரசின் 'நடிப்பு' இம்முறை எடுபடவில்லை என்றே தோன்றுகின்றது.

இப்போது அம்பாறை மக்களை மட்டுமல்ல தமிழீழத்தின் ஏனைய பகுதிகளில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களை பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு பயிற்சியும் வழங்கி ஆயுதங்களும் வழங்கத் தொடங்கியுள்ளது சிறீலங்கா அரசு. அம்பாறையில் இரு நாட்களில் மட்டும் பொது மக்களுக்கு 2500 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் அப் பகுதிகளில் இரு முகாங்கள் அமைக்கப்பட்டு அவற்றில் 200 விசேட அதிரடிப்படையினரையும் 300 ஊர் காவல் படையினரையும் நியமிக்க உள்ளனர். சிங்கள மக்களை பாதுகாக்க சிறீலங்கா அரசு தனது அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றமையையே இந் நிகழ்வுகள் காட்டுகின்றன.

அம்பாறையின் எல்லைப் பகுதியிலும், வவுனியாவின் எல்லைப் பகுதியிலும் உள்ள (குடியேறியேற்றப் பட்டிருக்கும்) சிங்கள மக்களில் இளைஞர்களை தேர்ந்தெடுத்து அவர்களின் மூலம் 'எல்லைக்காவல்படை' ஒன்றை உருவாக்கப் போவதாகவும் அப்படையில் சேரும் இளைஞர்களுக்கு விசேட சலுகைகளையும், மாதாந்த ஊதியங்களையும் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என சிறீலங்கா அரசு தெரிவித்துள்ளது. ஆனால் சிங்களம் கூறியுள்ள இக் கருத்து அவர்களுக்கே தெரியாமல் ஒரு உண்மையையும் வெளிக்கொண்டு வந்துவிட்டது. அது சிறீலங்காவில் 'இரு நாடுகள்' உள்ளன என்பதே ஆகும். ஒரு நாட்டினுள் எல்லைக்காவல் படை அமைக்கப்பட்டால் அந் நாட்டிற்கு அருகில் இன்னொரு நாடு உண்டு என்பதே அர்த்தம். தமிழீழ விடுதலைப் புலிகளால் எல்லைக் காவல் படையினர் ஏற்கனவே அமைக்கப்பட்டு விட்டனர். இன்று சிறீலங்கா அரசினாலும் எல்லைக் காவல் படையினர் அமைக்கப்பட்டு வருகின்றனர். எனவே இலங்கை 'இரு நாடுகள்' என்பதை சிறீலங்கா அரசே 'எல்லைக்காவல்படை' அமைத்து 'எல்லைகளை' வரையறுத்துக்காட்டிவிட்டது.




பாதுகாப்புக்கு வழங்கும் ஆயுதங்களை பயங்கரவாதத்துக்கும் பயன் படுத்தலாம்!

நன்றி: 'தினக்குரல்'

# சந்திரிகாவின் கோபம்

## பார்வை

ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்புப் பணிமனை புதுக்குடியிருப்பு சம்பவத்தை அம்பாறை சம்பவத்துடன் ஒப்பிட்டது சிங்கள இயந்திரத்திற்கு பிடித்தமானதல்ல. **புதுக்குடியிருப்பை தமிழர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையாகவும் அம்பாறையை படுகொலைகளாகவும் ஐ.நா கருதவேண்டுமென சிங்கள இயந்திரம் எதிர்பார்த்தது.**

**அம்பாறைச் சம்பவத்தைப் பெரிதாக்கி அதனை புலிகளுக்கு எதிரான பரப்புரை ஆயுதமாக்க சந்திரிகா முயன்று வருகின்ற நிலையில் ஐ.நா வெளியிட்ட அறிக்கை சிங்களத்திற்கு கோபத்தை கொண்டு வந்துள்ளது.** பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கம் (NMAT) என்ற பெயரில் பௌத்த சிங்கள இனவாதிகளைக் கொண்டியங்கும் அமைப்பு அம்பாறை சம்பவத்தை பயங்கரவாதமென கண்டித்துப் புலிகளை அழிக்க வேண்டுமென சத்தமிடுகின்றனர். சந்திரிகா புலிகளின் பயங்கரவாதம் பற்றி அறிக்கை வெளியிட்டார். ஆனால் இவர்களது புலம்பலை அமெரிக்கா போன்ற நாடுகள் இம்முறை பின்பற்றவில்லை. நீலனுக்காக அவசரப்பட்டு அறிக்கை விட்டுவிட்டதாக ஒரு தரப்பு அவதானிகளால் விமர்சிக்கப்படும் கிளின்டன் நிர்வாகம் உடனடியாக கைவிட்ட நிலையில் ஐ.நா. புதுக்குடியிருப்பையும் அம்பாறையையும் ஒப்பிட்டமை சந்திரிகாவுக்கு ஒரு தந்திரோபாயத் தோல்வியாக அமைந்துவிட்டது. இதுதான் கோபத்திற்கான காரணமாகும்.

**புலிகளை உலக அரங்கிலிருந்து ஒதுக்கிவிட்டதாக மார்தட்டி சாதனைப் பட்டியல் வெளியிட்ட சந்திரிகா புலிகளின் நடவடிக்கையை நியாயப்படுத்தும் பாத்திரத்தை ஐ.நா. எடுத்துவிட்டதாகக் கருதுகின்றார்.**

சந்திரிகா எப்போதும் எல்லோரையும் தனது பக்கத்தில் வைத்திருக்கலாம் என்ற போலியான எண்ணத்துடனும் வெறும் வாய்சவடால் மூலம் மட்டும் தன்னை நியாயப்படுத்தலாம் என்ற எண்ணத்துடனும் செயற்படுபவர்.

24 செப். 1999ல் அரச ஊடகமான டெய்லிநியூஸில் வெளிவந்த செய்தியை சந்திரிகாவை மோசமான இனவெறியாளர் என்பதை நிரூபிக்கின்றது. அம்பாறை சம்பவத்தால் பாதிக்கப்பட்ட சிங்களவர்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்குமாறும் குடியேற்றவாசிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் திட்டத்தை உடனடியாக வகுக்குமாறும் உத்தரவிட்டுள்ளதாகக் கூறும் அச்செய்தி, இனிமேல் இப்படியான சம்பவங்கள் தனது ஆட்சியில் இடம்பெறக் கூடாது என சந்திரிகா உத்தரவிட்டுள்ளார் எனவும் கூறப்படுகின்றது. மேலும் அம்பாறையில் கொல்லப்பட்ட சிறுவர்களுக்கு போரைப்பற்றி ஒன்றுமே தெரியாது எனவும் இது பிரபாகரனின் கொடூரத்தைக் காட்டுவதாகவும் சந்திரிகாவும் அமைச்சர்களும் கூறியுள்ளனர். ஆனால் இச் செய்தி சொல்லாமல் சொல்லும் விடயம், அந்த அமைச்சரவை புதுக்குடியிருப்புச் சம்பவத்திற்கு கண்டனம் செய்யவில்லை என்பதும் அங்கு கொல்லப்பட்ட சிறுவர்கள் சாவதற்கு தகுதியானவர்கள் என கருதுவதுமே.

**தமிழர்களின் தேசிய தலைவர் பிரபாகரன் கூறியது போல் சந்திரிகா மிகமோசமான இனவாதியாவர்.**

★ ★ ★

கதிர்காமர் பிரதமராவதற்கான தகுதி தனக்கு இருப்பதாக கருதுகின்றார். இதனை நிரூபிப்பதற்காக பல்வேறு அரச(?) பணிகளை விசுவாசமாக அவர் புரிந்து வருகின்றார். தான் தமிழனாக(?) இருப்பதால் தன்னை பிரதமராக்கினால் தமிழர்கள் சந்திரிகாவுக்கு வாக்குப் போடுவார்கள் என பாமரத்தனமாக கதை பரப்பும் இவர் தனக்கு எதிராக பிரதமர் பதவிக்குப் போட்டியிடக் கூடிய சிங்கள பௌத்தர்களை வெல்வதற்காக தன்னை பௌத்த விசுவாசியாகக் காட்ட குரல் கொடுத்துள்ளார். இதற்காக இவர் தேர்ந்தெடுத்த இடம் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையாகும்.

**பௌத்த புனித தினமான வெசாக் பண்டிகையை ஐ.நா. அங்கீகரிக்க வேண்டும் என கதிர்காமர் நியூயோர்க்கில் எழுப்பிய குரல் கொழும்பு பத்திரிகைகளில் வரி தப்பாது பிரசுரிப்பதற்கு வழங்கப்பட்டது. சந்திரிகா அரசு மட்டுமல்ல அதனால் கூலிக்கு அமர்த்தப்பட்ட தானும் பௌத்த மதத்திற்காக உழைப்பதை நிரூபிப்பதன் மூலம் சிறீமாவுக்குப் பின் பிரதமர் பதவியை தான் பெறலாம் என கதிர்காமர் நம்புகின்றார்.**

எதுவித அதிகாரங்களும் அற்ற நோயளியான சிறீமா அம்மையார் இருக்கும் பதவியை பெறுவதற்காக கதிர்காமர் அடிக்கும் குத்துக்கரணம் சிங்களவ்ர்களையே வியக்க வைக்கும்.

★ ★ ★

அம்பாறையில் இடம்பெற்ற சிங்கள குடியேற்றத் திட்டங்கள் மீதான தாக்குதல் உலக அரங்கில் பலவித விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. புதுக்குடியிருப்புக் குண்டுவீச்சுக்ளைப் பற்றி மூச்சே விட மறுத்த சந்திரிகா அம்பாறையில் கொல்லப்பட்ட சிங்களவர்களுக்காக விடுத்த கண்ணீரும் செயற்பாடுகளும் தமிழர்களின் அரசியல்—இராணுவ நிலைப்பாடுகளை மேலும் நியாயப்படுத்திவிட்டது. தமிழர்களை புலிகளிடம் தம்மை அடைவு வைத்தவர்கள் என விமர்சித்த இந்திய செய்தியாளர் நிருபமா சுப்பிரமணியத்தையும் இச் சம்பவம் பாதித்துவிட்டது போன்றுள்ளது.

Indian Express பத்திரிகையில் வெளிவந்த இவரது செய்தியில் இரு இனங்களும் இவ்விரு சம்பவங்களையும் எவ்வாறு பார்த்தது என விபரித்துள்ளார். கொழும்பின் சிங்கள - ஆங்கில ஏடுகள் புதுக்குடியிருப்பை மறைத்து அம்பாறைக்காக பக்கம் பக்கமாக எழுதியமையை இவர் சுட்டிக்காட்டி இரு இனங்களும் பிரிந்தே கிடக்கின்றன என்கிறார். இன்று நிருபமாவுக்கு ஏற்பட்ட ஞானம் தொடரவேண்டும்.

ஆசிய. மனித உரிமைகள் ஆணைக்குழு அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையே மத்தியத்துவம் செய்து தமிழ் - சிங்கள தேசங்களுக்கான சிக்கலை தீர்க்க வேண்டும் என கோரியுள்ளமையானது தமிழர்களுக்கு கிடைத்த வெற்றியாகும். எமது தேசியத் தலைவர் கடந்த மாவீரர் நாளில் தெரிவித்த அரசியல் நிலைப்பாட்டிற்கான தெளிவான ஆதரவாக இவ் அறிக்கை அமைந்துவிட்டது. சிங்கள அரசுடன் , உள்நாட்டுப் பிரச்சினை என்ற மட்டத்தில் வைத்துப் பேச தமிழர்கள் தயாரில்லை. மாறாக இரு தேசங்களும் உலக மன்றின் மத்தியத்துவத்தின் கீழ் பேசி எல்லைகளை தீர்மானிப்பதே சாத்தியமான விடயமாகும். **இதற்கான ஆதாரம் அண்மையில் வவுனியா மதவாச்சி எல்லைப் பகுதியில் சிங்களவர்ளுக்கு சந்திரிகா ஆயுதம் கொடுத்தமையும் வன்னியில் தமிழர் எல்லைக் காவல் படையை உருவாக்கி பல்லாயிரக்கணக்கில் பயிற்சி எடுத்தமையும் ஆகும்.**

★ ★ ★

- ராஜா

# தமிழகத் தேர்தல்

*மீண்டுமொருமுறை உலகின் பெரிய ஜனநாயக நாடு தனது பொதுத் தேர்தலைச் சந்திக்கிறது. 1952-ம் ஆண்டில் இந்திய தேசம் தனது முதலாவது பொதுத் தேர்தலைச் சந்திக்க ஆரம்பித்து 1999 இல் மீண்டும் வந்து நிற்கிறது. இக் காலப்பகுதிகளுக்கிடையே இந்திய அரசியலில் எத்தனையோ மாற்றங்கள் வந்தும்போயுமுள்ளன. கடந்த 50 வருடங்களில் இந்தியா சந்தித்த பொதுத் தேர்தல்களையும் தமிழகத்தின் அப்போதைய நிலையினையும் இக்கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது. கடந்த ஐந்து வாரங்களாக வந்த கட்டுரையின் இறுதிப் பகுதி இது.*

*— ஆர்.*

# கடந்த 50 ஆண்டுகளின் ஒரு நோக்கு

6

'ஆதி திராவிடர்கள் பார்ப்பனத் தெருக்கள், முன்னேறியவர்கள் வாழும் தெருக்கள், கோயில்களைச் சுற்றியுள்ள தெருக்கள் ஆகிய எதிலும் நடந்துகூடச் செல்லமுடியாது.

ஆதி திராவிடர்கள் முழங்காலுக்குக் கீழ் வேட்டி கட்டக் கூடாது. தங்க நகைகள் அணியக் கூடாது. மண்குடத்தில்தான் நீர் மொள்ள வேண்டும். ஆதி திராவிடர் வீட்டுக் குழந்தைகள் படிக்கக்கூடாது. அடிமையாக இருக்க வேண்டும். சொந்த நிலம் வைத்திருக்கக்கூடாது, திருமணக் காலங்களில் மேளம் வாசிக்கக் கூடாது. பூமி குத்தகைக்கு வாங்கி சாகுபடி செய்யக் கூடாது. குதிரை மீது ஊர்வலம் செல்லக் கூடாது, வண்டி ஏறிச்செல்லக் கூடாது, பொதுக்கிணற்றில் நீர் எடுக்கக்கூடாது, சுடுகாட்டிற்குச் செல்லும் பாதையே வேறு, மேல் அங்கியோ, துண்டு அணிந்து கொண்டோ செல்லக்கூடாது.

பெண்கள் ரவிக்கைகள் அணியக்கூடாது என்பதோடு மேல் சாதியினர் வரும்போது மேலே அணிந்திருக்கும் வேறு துணியையும் எடுத்து அக்குளில் வைத்துக்கொள்ளவேண்டும்.



ரஜனி

நீதி மன்றங்களில் சாட்சி சொல்ல நேர்ந்தால் குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் நின்று தான் சாட்சிசொல்லவேண்டும்.

இவையெல்லாம் உண்மையா? இப்படியெல்லாம் இரக்கமற்ற அரக்கத்தனமான விதிகள் விதிக்கப்பட்டனவா? என்றால் ஆம்; அதுதான் அன்றைய நிலை.

வீதிகளில் நாய்களும், எருமை மாடுகளும், பன்றிகளும் கூட நடமாட முடியும். ஆனால் மனித இனத்திலே பிறந்தவர்களில் ஒரு சிலர் நடமாட முடியாது. அவர்க்ள் யார்? 'பஞ்சமர்கள்' என்று 'பட்டம்' கட்டப்பட்ட ஆதி திராவிடப் பெருமக்கள் தாம்.

'பஞ்சமர்களும் நாய்களும் பெரு நோய்க்காரர்களும் நுழையக்கூடாது'. பஞ்சமர்களுக்கு இடமில்லை' என்றும் எழுதப் பட்ட சொற்கள் வீதியெங்கும், விடுதிகள் தோறும், பேருந்துகளிலும் போக்குவரத்து வண்டிகளிலும் பலகைகளில் விளம்பரங்களாக எழுதி வைத்திருப்பார்கள்.

அப்படி மீறி எவராவது வீதிகளில் நுழைந்துவிட்டால்.... மிருகங்களைவிடக் கேவலமாக அடித்து நொறுக்கி கொடுமைப் படுத்தப்படுவார்கள். இத்த



ஜெயலலிதா

கைய நிகழ்ச்சிகள் அன்றாடம் நடக்கும்; அங்கிங்கெனாதபடி எங்கும் நடக்கும்.

இத்தகைய அநீதிகளைத் தடுத்து நிறுத்தி; மூர்க்கத் தனமான கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தது. ஆதி திராவிட மக்கள் அனைத்துப்பிரிவு நிர்வாக மன்றங்களிலும் மக்கள் இடம்பெற, ஆதி நாளிலிருந்தே பாடுபட்டு வரும் ஒரே இயக்கம் திராவிட இயக்கந்தான் என்பது மறுக்க முடியாத வரலாற்றுப் பேருண்மையாகும்.

## நிலையான ஆட்சி - திறமையான பிரதமர் எந்தக் கட்சியால் தரமுடியும்

1996-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் தீர்ப்பு மாநில ஆட்சிக்கு எதிராக அமைந்துவிட்டது.

அ.இ.அ.தி.மு.க. ஐந்தாண்டுக் காலம் நிலையான ஆட்சியைத் தந்திருந்தும்—மாநில மக்கள் நிம்மதியான வாழ்வைப் பெற்றிருந்தும்- இந்தியாவுக்கு முன்மாதிரி பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தும் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் போன்றவற்றின் பிரச்சாரம் ஆளுங்கட்சிக்கு எதிராகவே இருந்தன.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் திருமணத்தின்போது செய்யப்பட்ட ஆடம்பரமான ஏற்பாடுகள்- வேண்டத்தகாத வெறுப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்திவிட்டன. ஆளுங்கட்சியினர் மீது ஏற்பட்ட வெறுப்பு ஆட்சியின் மீதே திரும்பியது.

அதே நேரத்தில், 'அ.தி.மு.க. ஊழல் கட்சி என்றும் அதோடு தொடர்ந்து உடன்பாடு கொள்ளும் காங்கிரஸ் கட்சியின் போக்கு கண்டிக்கத் தக்கது' என்றும் கூறி அந்தக் கட்சியிலிருந்து மூப்பனார் அணி விலகியதும் தி.மு.க.வுடன் அவர்கள் உடன்பாடு கொண்டதும் அவர்களுக்கு ஆதரவாக நடிகர் ரஜினிகாந்த் தேர்தல் பிரச்சாரத்திலே ஈடுபட்டதும் காற்று தி.மு.க.—த.மா.கா அணிக்கு ஆதரவாக வீசியது. அ.தி.மு.க. ஆட்சி வீழ்த்தப்பட்டது. கருணாநிதி மீண்டும் தமிழ்நாட்டின் முதல்வர் பொறுப்பேற்றார்.

1991-ல் நடந்த தேர்தலில் காங்கிரஸ் முழுப் பெரும்பான்மை இடங்களைப் பெறாவிட்டாலும், அதிகமான இடங்களைப் பெற்ற கட்சியாக இருந்ததால் அது நரசிம்மராவ் தலைமையில் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தது. அவர்தான் நிலையான ஆட்சியைத்தந்தார். அ.தி.மு.க. மகத்தான வெற்றியைப் பெற்றது.

1949-ல் அண்ணா தலைமையில் தி.மு.க. ஆரம்பிக்கப்பட்ட பிறகு 1953—54-ல் முதன்முதலாக இளம்பரிதி, ஆர்டி-அரசு, பாண்டியன் ஆகியோர் பிரிந்து சென்று 'தமிழர் முன்னணி' தொடங்கினர். 1961-ல் ஈ.வெ.கி. சம்பத்தலைமையில் பிளவு ஏற்பட்டு 'தமிழ் தேசியக் கட்சி உடைந்தது. 1993-ல் வைகோ தலைமையில் மறுமலர்ச்சி தி.மு.க. வாக கட்சி உடைந்தது. அதுவரை தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் பெறாத நிலையிலிருந்த ம.தி.மு.க. கட்சி அ.இ. அ.தி.மு.க.



கருணாநிதி

கூட்டணியில் சேர்ந்து நாடாளுமன்றத் தேர்தலில் (1998) வெற்றி பெற்ற பின்னரே ம.தி.மு.க. அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப் பட்டது. மீண்டும் தி.மு.க.வோடு சங்கமித்துள்ள வைகோ கட்சியின் எதிர்காலத்தை காலம் தான் நிர்ணயிக்கவேண்டும்.

1996-ல் நடந்த தேர்தலில் பா.ஜ.கவுக்கு முழுப்பெரும்பான்மை கிடைக்காவிட்டாலும் அதிக இடங்களைக் கைப்பற்றியதால், வாஜ்பாய் அரசமைக்க அழைக்கப்பட்டார். அப்போது அவர் 13 நாள் பிரதமராக இருந்தார். பா.ஜ.க அரசு கவிழ்ந்தது.

அதைத் தொடர்ந்து ஜனதா தளம், இடதுசாரிக் கட்சிகள், தி.மு.க., த.மா.க, தெலுங்கு தேசம்,



வாஜ்பாய்

அசாம் கனபரிஷத் ஆகியவை சேர்ந்து ஐக்கிய முன்னணியை உருவாக்கின. இதற்கு மார்க்சிஸ்ட் கட்சியும் காங்கிரஸ் வெளியிலிருந்து ஆதரவைத் தந்தன. தேவெகௌடா 1996-ல் பிரதமரானார். அப்போது காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த சீதாராம் கேசரி திடீரென்று ஐக்கிய முன்னணிக்கு தன் கட்சி ஆதரவு இல்லை என்று தேவெகௌடாவின் பதவியைப் பறித்தார். பின்பு ஐ.கே. குஜ்ரால் பிரதமரானார். மீண்டும் காங்கிரஸ் ஜெயின் கமிஷனின் இடைக்கால

**வீதிகளில் நாய்களும், எருமை மாடுகளும், பன்றிகளும் கூட நடமாட முடியும். ஆனால் மனித இனத்திலே பிறந்தவர்களில் ஒரு சிலர் நடமாட முடியாது. அவர்கள் யார்? 'பஞ்சமர்கள்' என்று 'பட்டம்' கட்டப்பட்ட ஆதி திராவிடப் பெருமக்கள் தாம்.**

அறிக்கையைக்காட்டி ஐக்கிய முன்னணியில் இருந்து தி.மு.க. அமைச்சர்களை நீக்கும்படி சொன்னது. ஆனால் ஐ.கே.குஜ்ரால் அப்படிச் செய்ய மறுத்து விட்டார். காங்கிரஸ் தன் ஆதரவை விலக்கிக்கொண்டது. ஐக்கிய முன்னணி ஆட்சி கவிழ்ந்தது.

1998-ம் ஆண்டு தமிழ்நாட்டில் ஒரு புதிய கூட்டணி உருவாயிற்று. அதுதான் அ.தி.மு.க., பா.ஜ.க கூட்டணி!

திருநெல்வேலியில் நடைபெற்ற அ.தி.மு.க. மாநாட்டில் பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் எல்.கே. அத்வானி, ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, பா.ம.க. தலைவர் டாக்டர் இராமதாஸ். தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

'நிலையான. ஆட்சி திறமையான பிரதமர்' என்ற முழக்கத்தை முன்வைத்து ஜனநாயக முற்போக்குக் கூட்டணி தேர்தலில் போட்டியிட்டது.

தமிழகத்தில் இந்தக் கூட்டணி



வைகோ

30 இடங்களைக் கைப்பற்றி மத்தியில் வாஜ்பாய் அரசு அமைய பெருந்துணைபுரிந்தது.

1998-ல் நடந்த தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி பெரும்பான்மை இடங்களைப் பிடித்ததால் வாஜ்பாய் மீண்டும் பிரதமரானார்.

பதின்மூன்றே மாத காலம் ஆட்சி செய்த பா.ஜ.க. கூட்டணியிலிருந்த அ.தி.மு.க. வெளியேறியது. சமயம் பார்த்திருந்த காங்கிரசும் ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து பா.ஜ.கவை பதவி



மூப்பனார்

யிலிருந்து இறக்கியது.

எனவேதான் வரும் செப்டெம்பரில் (1999) நாடாளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல்.

தேர்தலைப் பொறுத்தவரை ஒன்று நிச்சயம்.

'வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலி இல்லை, புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றி காண்பதில்லை. 'என்று கவிஞர் கண்ணதாசன் சொன்னது உண்மைதான்.

(முற்றும்)

# சொர்க்கத்தின் அகதிகள்:

## இன்னொரு புகலிட சினிமா

யமுனா ராஜேந்திரன்

கடந்த ஜூலை மாதம்.

சனிக்கிழமை (24.07.99) இரவு இலண்டன் வெம்ப்ளி சென்றல் கோபிலேண்ட் கம்யூனிட்டி சென்டரில் ஸன் அவர்களால் கதை திரைக்கதை எழுதி இயக்கப்பட்ட சொர்க்கத்தின் அகதிகள் திரைப்படம் / 2½ மணிநேர திரைப்படம் திரையிடப்பட்டது— படத்தின் பின்பான சில செய்திகள் சொல்வது படத்தைப் புரிந்துகொள்ள உதவும்.

ஈழத்தமிழர்களே பங்குபற்றிய முழு நீளப்படம் இது. தமிழகத்தில் படத்தொகுப்பும் (Editing), டப்பிங்கும் (குரல் பதிவும்) செய்யப்பட்ட படம். படத்தின் நிகழ்களம் ஐரோப்பிய தமிழ்ச்சூழல் /இலண்டன் தமிழ்ச்சூழல் படக்கதையின் நிகழ் கருத்தியல் களம் தமிழகச் சினிமாச் சூழல், தமிழக சினிமாவின் கதை சொல்லல் முறைக்கும்/தமிழ் மொழி உச்சரிப்பு உட்பட, ஈழத்தமிழரின் வன்முறைக்கான காரணங்களைப் படம் அணுக முயன்றிருக்கிறது.

கதை என்ன?

நண்பர்கள் சிலர் ஒரே அறையில் வாழ்கிறார்கள். இருவர் ACCA படிக்கிறார்கள். வேலைக்குப்போகிறார்கள். ஒருவர்/ கதாநாயகன் ACCA வகுப்பில் இந்தியப் பெண்ணொருத்தியைக் கண்டு காதல் கொண்டு மணந்து கொள்கிறார். தனிக் குடித்தனம் போகிறார்.



படத்தின் மையம் வாழ்வில் தோற்ற ஒரு பாத்திரம். பணம் இல்லாமையால் ஏஜென்ட் கைவிடுகிறான். தாய் தந்தையர் மரணமெய்துகின்றனர். தங்கையின் வாழ்வு நிர்மூலமாகிறது. பிச்சைக்காரன்போல் வாழ்கிறான். பணம் சம்பாதிப்பதன் பொருட்டு போதை மருந்து கடத்துகிறான், சமூக விரோதியாகிறான், கொலை செய்கிறான், கடத்தல் செய்கிறான், பெண்களிடத்தில் பலாத்காரத்தில் ஈடுபடுகிறான். காணும் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்ய முனைகிறான்.

இடையில் சில கதாபாத்திரங்கள், வெள்ளைப் பெண்ணைத் தமிழ் சினிமா நாயகன் பாணியில் காதலிக்கும் இளைஞன், கெட்டவர்களோடு சேர்ந்து பண ஆசைகொள்ளும் இளைஞன். நல்லவனோடு சேர்ந்து ரை கட்டிய உத்தியோகம் பார்க்கும் இளைஞன்.

படிப்பு இக் கதையில் பணத்தோடும் கௌரவமான பொறுப்பான வாழ்வோடும் வெள்ளை நிறத்தோடும் தொடர்புபடுத்தப்படுகிறது. சமூகச் சிரழிவு பணமின்மையோடும் தமிழரில் கறுப்பு நிறத்தவனோடும் ஆபிரிக்க சமூகத்தவரோடும் தொடர்புபடுத்தப்படுகிறது. ஐரோப்பிய தமிழ் சூழலில் இப்படம் அப்பட்டமான நிறவாதத் தன்மையைக் கொண்டிருக்கிறது. நிலவும் ஈழத்தமிழரின் ஜாதிய ஆதிக்கக் கருத்தியலை அடியொற்றி சமகால வன்முறையைப் பார்த்திருக்கும் படம் இது. கருத்தியல் ரீதியில் நிற/ஜாதிய உறவுகள் குறித்த அவதானிப்பு இதுதானெனில் இக் கதையாடல் ஆழ்ந்த பரிசீலனைக் குரியது.

கெட்ட கறுத்த பாலியல் பலாத்காரம் செய்யும் பண ஆசைகொண்ட இளைஞன் ACCA படித்த நல்ல இளைஞனின் மனைவியான நல்ல குடும்பத்துப்பெண்ணான இந்தியப் பெண்ணைக் கடத்திச் சென்று காசு பறிக்கத் திட்டமிடுகிறான். இடையில் ஏமாற்ற நினைத்த நண்பனைக் கத்தியால் குத்துகிறான், குற்றுயிரும் குலையுயிருமாக இருக்கும் அவன் கையினாலேயே குத்துப்பட்டுக் கடைசியில் இறக்கிறான்.

இப் படத்திற்கு வந்திருந்த எனது நண்பர்களில் பத்திரிகையாளர்கள், நாடக இயக்குநர், ஓவியர், நாடக நடிகர், தகவல் தொழில்நுட்பம் சார்ந்தோர், எழுத்தாளர் என அனைவரும் அடங்குவர். படத்தின் ஒளிப்பதிவின் தரமும், லோகேஷன்களின் தேர்வின் தரமும், இடைவெளிக்குப் பின்னே படத்தின் கட்டுக்கோப்பான தொகுப்பின் தன்மை குறித்தும் ஒரே கருத்துக் கொண்டிருந்தனர்.

படம் புகலிட ஈழத்தமிழர் வாழ்வில் சமீபத்தில் தோன்றியிருக்கும் ஒரு சமூகப் பிரச்சினையை எடுத்துக்கொள்கிறது. நிறைய பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். சொந்தப் பெற்றோர்கள் தம் மகளின் காதலை மறுத்து அவளைக் கொன்றிருக்கிறார்கள். சிறுமி கொல்லப்பட்டுள்ளார். வீடு புகுந்தும் இரயில்வே நிலைய வாசலிலும் நடவடிக்கையாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கத்தியால் குத்தியும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். போதை மருந்து பழக்கத்தில், கடத்தலில் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சமூக அவலம் ஒரு கலைஞனின் அக்கறைக்கு உரியதுதான்.



கலைஞன் ஒரு வகையில் ஆய்வாளர் போன்றவன். அனுபவத்தை அதன் அடித்தளத்தில் தேடிச்சென்று வாழ்வின் உண்மைகளை முன்வைக்க வேண்டியவன். மனிதர்களை விமர்சனத்துடன், பரிவுடன் பார்க்கத் தக்கவன். ஒரு சமூகத் தீமைக்கான காரணங்களைத் தனது சமூகத்தின் உளவியல், அரசியல், பொருளியல் அடிப்படைகளில் தேடவேண்டும். ஈழத் தமிழர் வாழ்வில் இத்தகைய வன்முறைக்கான காரணம் அவர்தம் அரசியல் வரலாற்றிலும் சிதறுண்டுபோன அவர்களது மனச்சிதைவிலும் இருக்கிறது. இதை ஆய்வு செய்வதற்கான சினிமா சட்டகமும் சரி, மொழி அமைப்பும் சரி ஈழத்தமிழர் வாழ்விலிருந்துதான் உருவாக வேண்டும்.

நிலவும் தமிழ் சினிமா கதாநாயகன்/ நாயகி வில்லன் விதூசகன் மரபிலோ, தமிழகத் தமிழ் உரையாடல் அமைப்புக்குள்ளேயோ இக்கதையைச் சொல்ல முடியாது. இன்னும் ஹாலிவுட் காமெரா கோணங்களின் வழியிலேயோ, இசை அதிர்வுகளின் வழியிலோ இந்தத் துயரத்தைச் சொல்ல முடியாது. துரதிஸ்டவசமாக தமிழகச் சினிமா கதை சொல்லலையும், மொழி அமைப்பையும் ஸன் தேர்ந்து கொண்டிருக்கிறார். காதல் சோகமாகப் பாடல்களும் அதிர்ந்த இசையில் இரைச்சல் எழுப்புகிறது. படத்தின் முதல்பாதியில் தவிர்த்திருக்கவேண்டிய காட்சிகளும் பாத்திரங்களும் நிறைய உண்டு.

நிறைய ஹாலிவுட் ட்ரகுல்லா படங்களைப் பார்த்தவர்களுக்கு, இப்படத்திற்கான Location, இசைத் தேர்வுகள் எங்கிருந்து வருகின்றன எனச் சாதாரணமாகச் சொல்லமுடியும். படத்தின் முதல் ஒரு மணி நேரத்தை விட்டு விட்டு, 11/2 மணி நேரத்தில் மிகக் கூர்மையாக ஓர் படத்தொகுப்புச் செய்திருப்பின் ஒரு அரசியல், உளவியல் ஆய்வு தவிர்ந்த ஹாலிவூட்—மணிவண்ணன் பாணி திகில் படமாகவேனும் வந்திருக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆயினும் வன்முறைக்கான உளவியல் அரசியல் ஆய்வுகளின் அடிப்படையில் பாத்திரங்கள் வளர்ச்சியுறும்போது ஒருபடம் படைப்பின் தன்மையை எய்துகிறது. போலன்ஸ்க்கியின் Death and the Maiden. ஜோர்டானின் அயர்லாந்துப் படமொன்று அத்தகைய தன்மைகொண்டது. ஈழத்தமிழ்ச் சினிமா இத்தகைய வன்முறை குறித்த சினிமாக்களில் ஒன்று கற்றுக்கொள்ள இடமுண்டு. சொர்க்கத்தின் அகதிகள் நிறவாதம் குறித்த ஜாதிய மனப்போக்கு குறித்து ஈழத்தின் வன்முறைப் பிரச்சினையை அணுகுகின்றது. வன்முறையை அதனது உளவியல், அரசியல் பரிமாணத்திலின்று பிரித்து, பணஆசை சம்பந்தமான கண்ணோட்டத்திலிருந்தும், தமிழக மொழி/ சினிமா சட்டகத்திலிருந்தும் அணுகுகிறது.




ஸன் ஒரு திறன் வாய்ந்த சினிமா இயக்குநர் என்பதை விடவும், ஒரு படைப்பாளியாக அறியப்படுதலே அவருக்குப் பெருமை சேர்க்கும், புகலிட ஈழத்தவரின் சினிமாவுக்கும் புகழ் சேர்க்கும்.

**கலைஞன் ஒரு வகையில் ஆய்வாளர் போன்றவன். அனுபவத்தை அதன் அடித்தளத்தில் தேடிச்சென்று வாழ்வின் உண்மைகளை முன்வைக்க வேண்டியவன். மனிதர்களை விமர்சனத்துடன், பரிவுடன் பார்க்கத்தக்கவன். ஒரு சமூகத் தீமைக்கான காரணங்களைத் தனது சமூகத்தின் உளவியல், அரசியல், பொருளியல் அடிப்படைகளில் தேடவேண்டும்.**

# மாவீரர் நினைவு விளைய



பொன்னம்மான் தற்காப்புக் கலைக்கல்லூரி மாணவர்களின் சோட்டோகான் கராட்டிக் கலையின், ஒழுங்குபடுத்தப்பட்ட தாக்குதல் தடுப்பு நிகழ்வு.



திலீபன் தமிழ்ப்பாடசாலை மாணவரின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பழம் தெரிதல்.

இத்தாலி பலெர்மோ மாநகரில் மாவீரர் நினைவுநாள் விளையாட்டுப் போட்டிகள். 1999 இடம்பெற்றது. மாவீரர் நினைவு நாள் விளையாட்டுப் போட்டிகளில் ஆரம்ப நிகழ்வாக 23.05.99 ஞாயிற்றுக்கிழமை பலெர்மோ தமிழ் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்றது. பிற்பகல் 13.30 மணியளவில் திலீபன் தமிழ்ப் பாடசாலை மாணவர்களின் அணி நடையுடன் ஆரம்பமானது. அணிவகுப்பு மரியாதையைத் தொடர்ந்து, தமிழீழத் தேசியக் கொடியேற்றல், இத்தாலி தேசியக்கொடியேற்றல், மாணவர் அமைப்புக்கொடி, விளையாட்டுக் கழகங்களின் கொடியேற்றலைத் தொடர்ந்து தமிழீழ விடுதலை என்ற உன்னத இலட்சியத்திற்காக வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கும், அவர்களுடன் இணைந்து நின்று போராட்ட வாழ்வில் உயிர் நீத்த எம் தேச உறவுகளுக்காகவும் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிப் பணியகப் பிரதிநிதி திரு.து.மேத்தா அவர்களின் சிறப்புரை இடம்பெற்றது. தனது உரையில் போராட்டம் அனைத்துலகின் கவனத்தைப் பெற்ற இவ்வேளை, புலம் பெயர்ந்த மண்ணில் வாழுகின்ற நாம் அனைத்து வழிகளிலும் எம் ஒன்று பட்ட தமிழீழத் தேசிய உணர்வினை வெளிப்படுத்தவேண்டும் எனவும், அவ்வுயரிய தமிழ்த் தேசிய விடுதலைக்காகத் தம் இனிய வாழ்வையும், இளம் உயிர்களையும் தற்கொடையாக்கி மண்ணின் தெய்வங்களாக வாழும் 13000ற்கும் மேற்பட்ட மாவீரர்களை நினைவில் நிறுத்தி வணங்கி, சிறந்த விளையாட்டு வீரனுக்குரிய உளப்பாங்குடன் அனைத்து விளையாட்டு வீரர்களும் போட்டிகளில் பங்கு கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ் உதைபந்தாட்ட நிகழ்வில் பலெர்மோ மாநகரத் தமிழ் விளையாட்டுக் கழகங்களான வீனஸ் விளையாட்டுக் கழகம், அன்புப் பறவைகள் விளையாட்டுக் கழக A,B அணியினர், பாடும்மீன் விளையாட்டுக் கழகம், நண்பர்கள் விளையாட்டுக் கழகம், ஏழுமீன் விளையாட்டுக் கழகம், காவலூர் இளைஞர் விளையாட்டுக் கழக A,B அணியினர் என்பன கலந்துகொண்டன. அத்துடன் இம்முறை புதிய இரு கழகங்களான பண்டாரவன்னியன், சங்கிலியன் விளையாட்டுக் கழகங்கள் இணைந்து சிறப்பித்தன. பலெர்மோ வாழ் தமிழ் சிறார்களின் திறமைகளை வெளிக்கொண்டுவரும் நல்நோக்குடன், எதிர்காலத்தில் மிக வல்லமையுடன், இத்தாலிய விளையாட்டுக் கழகங்களுடன் போட்டிகளைச் சந்திக்கவுள்ள இவ் இளம் வீரர்களின் அறிமுக நிகழ்வாகவும், 1999-ம் ஆண்டு மாவீரர் உதைபந்தாட்டப் போட்டியின் சிறப்புப் போட்டியாகவும் இடம்பெற்றது.

A,B பிரிவுகளாக வகுக்கப்பட்டு விளையாட்டுக் கழகங்கள் தெரிவுப் போட்டிகளில் பங்குபற்றின. 23.05.99, 30.05.99, 06.06.99 ஆகிய திகதிகளில் போட்டிகள் நடைபெற்றன. 06.06.99 அன்று நடைபெற்ற போட்டிகளில் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காவலூர் விளையாட்டுக் கழக A அணி மோதிய போட்டி மிக விறுவிறுப்பாக அமைந்தது.

20.06.99-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 14.00 மணிக்கு சங்கிலியன், பண்டாரவன்னியன் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான சிறப்புப்போட்டி நடைபெற்றது. இளம் சிறார்கள் மிகவும் திறமையாக விளையாடியதுடன், போட்டி முடிவடைந்ததும் இரு அணி வீரர்களும் ஒருவரை ஒருவர் ஆரத் தழுவி மைதானத்தை விட்டு வெற்றி, தோல்வியைச் சமமாக மதித்து நடந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் சங்கிலியன் கழகம் 3 கோல்களைப் போட்டு வெற்றி பெற்றது.

பின்னர் மாலை 16.10 மணியளவில் மூன்றாம் இடத்திற்கான போட்டி ஆரம்பமானது. இப்போட்டியில் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வீனஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தில் வீரர் பற்றாக் குறையிருந்தும் சளைக்காமல் போட்டியிட்டனர். எனினும் வீனஸ் கழகத்தினர் 3:1 என்ற கோல்கள் அடிப்படையில் 3-ம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

அடுத்து 1999-ம் ஆண்டு மாவீரர் நினைவு உதைபந்தாட்டச் சுற்றுக் கிண்ணத்திற்காகவும், முதலாம் இடத்திற்கானதுமான 1999-ம் ஆண்டு மாவீரர் நினைவு உதைபந்தாட்ட நிகழ்வின் இறுதிப் போட்டிகள் மாலை 17.25க்கு ஆரம்பமாகின. இப் போட்டியில்



30தும் 30 வயதிற்கு மேற்பட்டோர் குண்டெறிதல்



தலையணைச் சண்டை



99-ம் ஆண்டு மாவீரர்நாள் உதைபந்தாட்டத்தில் பங்குகொண்ட கழகங்களின் கொடிகள்



25–29 வயது ஈட்டி எறிதல்.

# யாட்டுப் போட்டிகள் 99



99-ம் ஆண்டிற்கான மாவீரர் வெற்றிக்கிண்ணத்தை பெற்ற அன்புப் பறவைகள் வி.க. வீரர்கள்



திலீபன் தமிழ் பாடசாலை மாணவரின் அணிவகுப்புக் குழு



ஆண்கள் நீளம் பாய்தல்



அஞ்சலோட்டத்தில் வெற்றி பெற்ற நண்பர்கள் வி.க., த.வி.பு. இத்தாலிப் பணியகப் பொறுப்பாளர் திரு.து.மேத்தா அவர்கள் பரிசில் வழங்குகின்றார்.



பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்வழங்கி, உரையாற்றிச் சிறப்பித்த பலெர்மோ மாநகர முதல்வர் கலாநிதி. லியநூக்கா ஓர்லிற்தோ அவர்கள்



கலாநிதி–லியலூக்கா ஓர்லித்தோ பரிசில் வழங்குகின்றார்.



மாணவர் அமைப்பைச் சேர்ந்த செல்வன் அகஸ்ரின் ஆலின்ராஜ் விளையாட்டு வீரருக்கான உறுதி உரை எடுத்தல்.

அன்புப் பறவைகள் விளையாட்டுக் கழக யு அணியை எதிர்த்து, காவலூர் விளையாட்டுக் கழக A அணி மோதியது. மாவீரர் சுற்றுக் கிண்ணத்தைப் பெற்றிடவேண்டும் என்ற ஆர்வத்துடன் இரு அணியினரும் சம பலத்துடன் போட்டியிட்டனர். போட்டி ஆரம்பித்த 8-வது நிமிடத்தில் அன்புப் பறவைகள் A அணியைச் சேர்ந்த10-ம் இலக்க வீரன்லக்ஸ்மன் ராஜு ஒருகோலை லாவகமாகப் போட்டார். பின்பு போட்டி முடிவடைய 1 நிமிடம் இருக்கும் போது அனைத்துப் பார்வையாளர்களையும் கவரும் வகையில் காவலூர் அணியின் 04-ம் இலக்க வீரன் வே. தேவகுமார் ஒரு கோலைப்போட்டார். இந்நிலையில் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்க முடியாததால் இரு கழகங்களுக்கும் மேலதிக நேரம் வழங்கப்பட்டது. எனினும் அந் நேரத்திற்குள் எவரும் கோல்களைப் போடாத நிலையில், நடுவர் தண்டனை உதை மூலம் வெற்றி தோல்விகளை முடிவு செய்ய இரு கழக வீரர்களும் அழைக்கப்பட்டனர். தலா 5 உதை எத்தனிப்புக்கள் வழங்கப்பட்டன. தமது உதைகளில் 2 மட்டுமே கோல்களாக அடித்தனர் காவலூர் அணியினர். ஆனால் அன்புப்பறவைகள் அணி 3 கோல்களை அடித்து 1-ம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. உதை பந்தாட்ட நிகழ்வு முடிவடைந்ததையடுத்து பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

முதலில் 1999-ம் ஆண்டு மாவீரர் நினைவு உதைபந்தாட்ட நிகழ்வில் அனைத்து விளையாட்டுக் கழகங்கள் சார்பாகவும் கலந்துகொண்ட வீரர்களைக் கௌரவித்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சான்றிதழ்களை துணை நடுவர்களாகக் கடமையாற்றிய திரு. ஆர். வின்சன்ற், திரு. ஜெறோமியஸ், திரு. தனபால், திரு.தங்கராசா, செல்வன். வதன் திலீபன் தமிழ்ப் பாடசாலை நிர்வாக உதவியாளர் செல்வன். ஞா.சிவஸ்கரன் ஆகியோர் வழங்கினர். சிறந்த விளையாட்டு வீரனுக்கான கிண்ணத்தைக் காவலூர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த 5-ம் இலக்க வீரன் பி. டென்சில் அவர்களுக்கு எமது விளையாட்டு நிகழ்வுகளில் நடுவராகக் கடமையாற்றிய திரு. பாத்தி அவர்கள் வழங்கினார். சிறந்த பந்துக் காப்பாளருக்கான கிண்ணத்தை அன்புப் பறவைகள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. அமலன் பெற்றுக்கொள்ள, நடுவராகக் கடமையாற்றிய இத்தாலிய நண்பர் திரு. பாத்தி அவர்கள் வழங்கினார். நடுவர்களாகக் கடமையாற்றிய திரு.பாத்தி, திரு.பிரெஞ்செஸ்கோ ஆகியோருக்கான சிறப்புப் பரிசை மாணவர் அமைப்பின் உதைபந்தாட்ட நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த திரு. ஜெயரட்ணம் ஆசிரியர் வழங்கினார். இம்முறை மைதானத்தில் ஒழுங்குடனும், சகல விளையாட்டு ஒழுங்கு விதிமுறைகளையும் மதித்து நடந்த வீரனுக்குரிய கிண்ணத்தை வீனஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த 3-ம் இலக்க வீரன் திரு.யோ. யோகதாஸ் அவர்களுக்கு, மாணவர் அமைப்பின் உதைபந்தாட்ட நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த பிரதம தீர்ப்பாளர்களில் ஒருவரான திரு.கஜேந்திரன் அவர்கள் வழங்கினார். மைதான ஒழுக்கத்திற்குரிய கழகத்திற்கான கிண்ணத்தை அன்புப் பறவைகள் விளையாட்டுக் கழகத்திற்கு, திரு. கஜேந்திரன் அவர்கள் வழங்கினார். மூன்றாம் இடத்திற்கான கிண்ணத்தை வீனஸ் விளையாட்டுக் கழகத்திற்கு மாணவர் அமைப்பின் உதைபந்தாட்ட நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த பிரதம தீர்ப்பாளர்களில் ஒருவரான திரு. ஜெயரட்ணம் ஆசிரியர் அவர்கள் வழங்கினார். 2-ம் இடத்திற்கான கிண்ணத்தைக் காவலூர் இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்கு, மாணவர் அமைப்பின் உதைபந்தாட்ட நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த பிரதம தீர்ப்பாளர்களில் ஒருவரான திரு.ஸ்ரீபன் அவர்கள் வழங்கினார். 1999-ம் ஆண்டு மாவீரர் சுற்றுக் கிண்ணத்தையும், 1-ம் இடத்திற்கான வெற்றிக் கிண்ணத்தையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிப் பணியகப் பிரதிநிதி திரு.து. மேதா அவர்கள் வழங்கிக் கௌரவிக்க அன்புப் பறவைகள் விளையாட்டுக் கழகத்தினர் அதனைப் பெற்றுக்கொண்டனர். இத்துடன் பரிசளிப்பு முடிவுற்றதும், கழகக் கொடிகள், இத்தாலி தேசியக்கொடி, தமிழீழ தேசியக்கொடி இறக்கலுடன் 1999-ம் ஆண்டு மாவீரர் நினைவு உதைபந்தாட்டப்போட்டி இனிது நிறைவு கண்டது. இந் நிகழ்வைச் சிறப்பித்த மக்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் சிற்றுண்டிச்சாலை தாகம் தீர்த்துப் பசியாற்றியது. ஈழப்பிரியா ஒளியகத்தினர் இந் நிகழ்வை ஒளிப்பதிவு செய்தனர். திரு.குரு அண்ணன் இந் நிகழ்வின் நிரலை வண்ண நிழற்பிரதியாக்கினார்.

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் நீலன் திசவீரசிங்கம், செல்வன் சி.பிரதீபன் பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.




## குறள் முற்றம்

**ஒளி ஒருவற்கு உள்ள வெறுக்கை, இளி ஒருவற்கு அஃது இறந்து வாழ்தும் எனல்**

ஒருவனுக்கு பெரு மதிப்பு, உயர்ந்தவற்றைச் செய்யக் கருதும் ஊக்க மிகுதியே. ஒருவருக்கு அவமதிப்பு, ஊக்கம் அற்று இவ்வுலகில் உயிர்வாழ நினைப்பதுவே.

## கவிதை முற்றம்

**வா !**

ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா
களி படைத்த மொழியினாய் வா வா வா
கடுமைகொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா
ஏறுபோல் நடையினாய் வா வா வா

*- பாரதியார் -*

**ஆருகா செல்வரட்ணம்**
**4562 Biberist, Swiss.**

ஒற்றுமை

ஒற்றுமையாய் இருக்கவேண்டும் தம்பி
நாம் ஒன்று பட்டு வாழவேண்டும் தம்பி
பிரிவினைகள் கூடாது தம்பி
எம்மில் பிளவு பட்டு சிதையலாமோ தம்பி
வஞ்சம் மனதில் கொள்ளவேண்டாம் தம்பி
நெஞ்சில் அன்பு கொள்ளவேண்டும் தம்பி
அணைத்துச் சேர்த்து வாழவேண்டும் தம்பி

## குட்டிக்கதை படிப்போம்

# தெனாலிராமனின் திருட்டு

ஒரு சமயம் தெனாலிராமனின் மனைவி அரண்மனைத் தோட்டத்திலுள்ள கத்தரிக்காயைச் சாப்பிட ஆசைப்பட்டாள். தோட்டத்திற்குள் நுழைவது தவறு என்று தெரிந்தும் இராமன் திருட்டுத்தனமாக காய்களைப் பறித்துவந்து சமையல் செய்து மனைவியுடன் சாப்பிட்டான். அவன் மனைவி தன் மகனுக்கும் கொடுக்க ஆசைப்பட்டாள். அவனால் தன் திருட்டு வெளிப்பட்டுவிடுமோ என்ற பயம் இராமனுக்கு.

அதனால் அவன் வெளித் திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்த தன் மகன் மீது நிறையத் தண்ணீரைத் தெளித்தான். பிறகு, 'மகனே! மழை அதிகம் பெய்கிறது. வீட்டிற்குள் வா!' என்று எழுப்பி உள்ளே அழைத்துச் சென்று நனைந்த அவன் சட்டையை மாற்றினான். பிறகு கத்தரிக்காய் உணவைச் சாப்பிட்டுவிட்டுப் படுத்தான்.

மறுநாள் கத்தரிக்காய் களவுபோன விஷயம் தெரிந்துவிட்டது. கடைசியில் இதைச் செய்தது தெனாலிராமனே என்று சந்தேகித்தனர். ஆனால் அவனைக் கேட்பதற்கு முன் அவன் மகனை அழைத்து விசாரித்தனர். அவன் நேற்றுக் கத்தரிக்காய்க் குழம்பு சாப்பிட்டதை ஒப்புக்கொண்டான்.

அதன் பிறகு தெனாலிராமனை அழைத்து அரசர், 'இராமா! இப்போது நீ ஏமாற்ற முடியாது. உன் மகன் உண்மையைச் சொல்லிவிட்டான். அதற்குரிய தண்டனையை நீ பெற்றுத்தான் ஆகவேண்டும்' என்றார்.

இராமன் 'அவன் கனவில் எதையோ கண்டுவிட்டுக் கூறுகிறான். இப்போது பாருங்கள்' என்று கூறி மகனிடம், 'ஏண்டா நேற்று எப்போது மழை பெய்தது?' என்று கேட்டான். 'நேற்று இரவு பெய்தது?' என் சட்டையெல்லாம் நனைந்துவிட்டது அச்சட்டையை மாற்றிக்கொண்டு சாப்பிட்டேன்' என்றான் மகன். அது கோடை காலம். எங்கும் மழை பெய்யவில்லை. அதனால் அவன் கனவு கண்டுதான் கூறுகிறான் என்று அனுப்பிவிட்டனர்.

தெனாலிராமன் மீது சந்தேகப்பட்டதற்கு வருத்தம் தெரிவித்தனர்.

## அறிந்துகொள்ளுங்கள்



சுபாஜினி துரைராசா
வயது: 12.07.87
இடம்: Rodez-France

**வானவில் வர்ணக்கிளி**

கிளிகளில் பஞ்சவர்ணக் கிளி மிகவும் அழகானது. 5 நிறங்களை உடையதால் இதைப் பஞ்சவர்ணக்கிளி என்று அழைப்பார்கள். கிளிகளில் வானவில் வர்ணக் கிளி என்று ஒருவகை உண்டு. வானவில்லில் 7 வர்ணங்கள் உள்ளன. அதேபோல் ஏழு வர்ணங்கள் உடைய கிளிகளை வானவில் வர்ணக் கிளிகள் என்று அழைப்பார்கள். வானவில் வர்ணக்கிளிகள் பஞ்சவர்ணக்கிளிகளை விடவும் கவர்ச்சித்தன்மை கொண்டவை. வானவில் வர்ணக்கிளிகள் 2 வருடங்களில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். இவை மரப்பொந்துகளில் சென்று ஒரே சமயத்தில் 2 முட்டைகள் இட்டு 24 முதல் 28 நாட்களில் குஞ்சு பொரிக்கின்றன.

## கண்டுபிடியுங்கள்




இந்த இரண்டு மனிதர்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.

முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

**கடந்தவார விடை**

2–வது அம்பு.




## அறிவியல் முற்றம்

**சொற்சிதறல் எண் - 49**

பிள்ளைகளே! சொற்களைக் கண்டுபிடிக்க முயன்று பாருங்கள். முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | ✕ 3 | 4 | 5 |
| 6 | 7 | ✕ 8 | 9 | 10 |
| ✕ 11 | 12 | ✕ 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | ✕ 19 | 20 |
| 21 | ✕ 22 | 23 | 24 | ✕ 25 |

**இடமிருந்து வலம்**

1. 1-2 அதிக ஆயுள் உடையவர். அடக்கமானவர் மெதுவாகவே நகருவார்.
2. 4-5 முத்தமிழ்களில் ஒன்று.
3. 6-7 முகத்தில் ஒரு பகுதி. இங்கு வலமிருந்து இடமாக உள்ளது.
4. 16-18 அண்ணனுக்கு இவர்....
5. 14-15 அழுவதற்கு எதிர்.
6. 23-24 நீந்தும் பறவை.

**மேலிருந்து கீழ்**

7. 1-6 மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்று.
8. 2-17 விளையாடும் திடல்.
9. 18-23 தந்தையை இப்படியும் சொல்லலாம்.
10. 4-14 கிழங்கு வகையைச் சார்ந்தது. இதை பல .உணவு வகைகளுடனும் சேர்த்துக்கொள்வர். மருத்துவ குணமும் உண்டு.
11. 5-20 இந்த நாட்டு வாத்துக்கள் ஒரு காலப்பகுதியில் தமிழீழத்துக்குச் சென்றுவருவதும் உண்டு.

**சொற்சிதறல் எண் நாற்பத்தி எட்டின் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| அ | ந் | தி | ம | ம் |
| ட | ■ | லீ | ■ | ப |
| ம் | ப | ப | ர | ம் |
| ப | ய | ன் | பா | டு |
| ன் | று | பு | ம் | கு |

கடந்த 22.08.99 அன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரான்ஸ் கிளையினர் நடாத்திய தமிழர் விழாவின்போது ஈழமுரசு சிறுவர் முற்றம் சிறுவர்களுக்காக நடாத்திய பொது அறிவுப் போட்டி வினாக்களும், விடைகளும்.

1. **தமிழீழ தேசிய தலைவரின் பெயர் என்ன?**
திரு.வே.பிரபாகரன்
2. **மாவீரர் நாள் எப்போது வருகிறது?**
கார்த்திகை மாதம் - 27ம் திகதி
3. **சூரியன் மறையும் திசை எது?**
மேற்கு
4. **அண்மையில் வானத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி என்ன?**
சூரிய கிரகணம்
5. **காகத்தின் கூட்டில் முட்டை இடும் பறவை எது?**
குயில்
6. **பூமியைச் சுற்றி வரும் கோள் எது?**
சந்திரன்
7. **தமிழில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன?**
247
8. **தமிழீழத்திற்கு அருகில் உள்ள நாடு எது?**
சிறீலங்கா
9. **உலகத்தில் பெரிய உயிரினம் எது?**
திமிங்கிலம் - டைனோசர்-யானை
10. **நன்றியுள்ள மிருகம் எது?**
நாய்

# மணலாறு ஒரு வீரவரலாறு 36



# இதயபூமி I



மணலாற்றில் இந்தியப் படைகளில் இருந்து சிங்களப் படைகள் வரைக்கும் எத்தனையோ தாக்குதல்களைப் பெயர் குறிப்பிட்டு நடாத்தியுள்ளனர். அத்தனை தாக்குதல்களிலும் அவர்கள் படுதோல்வியையே அடைந்தனர்.



அதேபோல் மணலாற்றிலும் பெயர்குறிப்பிட்டு ஒரு தாக்குதலை நடாத்தவேண்டும், அதில் பெரும் வெற்றியும் அடைய வேண்டும் என்பதே போராளிகளின் இலட்சியமாக இருந்தது. அவ் இலட்சியத்தின் உறுதிதான் மண்கிண்டிமலை இராணுவ முகாம் தாக்குதலில் பெரும் வெற்றியை ஈட்டிக்கொடுத்தது. இராணுவ ரீதியாக மட்டுமல்ல அரசியல் ரீதியிலும் சிறீலங்காப் படைகளுக்கும் அரசிற்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்த இத் தாக்குதலை, புலிகள் எவ்வாறு வெற்றிகரமாக நடாத்தி முடித்தனர்?

மணலாற்றில் வெலிஓயா என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களைப் பாதுகாப்பதற்காகவும், வடக்கு கிழக்கு பகுதிகளுக்கான புலிகளின் நகர்வுகளைத் தடுப்பதற்காகவும் அமைக்கப்பட்ட சிறீலங்கா இராணுவ முகாங்களில், பலமான ஒரு முகாம்தான் மண்கிண்டிமலை இராணுவ முகாம். கொக்குத்தொடுவாயில் இருந்து முந்திரிகைக்குளம் நோக்கிச் செல்லும் பிரதான வீதிக்கு இடையில் உள்ள பகுதிதான் மண்கிண்டிமலை. திருகோணமலை முல்லைத்தீவின் எல்லைப் பகுதியில் அமைக்கப்பட்ட இம் முகாமைப் பலப்படுத்துவதற்காக, இரு மினிமுகாங்கள் அமைக்கப்பட்டு மண்கிண்டிமலை இராணுவ முகாம் ஒரு இராணுவத் தளமாக விரிவுபடுத்தப்பட்டது. இதனால் தமிழ்மக்களின் ஏழு கிலோ மீற்றர் சுற்றளவான பிரதேசம் முற்றாக இராணுவ வசமாகியது. அத்துடன் அப்பகுதிக்கு 'ஜானகபுர' என சிங்களத்தில் பெயர்மாற்றமும் செய்து, இம் முகாமைச் சுற்றி சிங்களக் குடியேற்றங்களும் அமைக்கப்பட்டன. அக் குடியேற்றங்களுக்குப் பாதுகாப்பாகக் காவலரண்கள் அமைக்கப்பட்டு அவற்றில் ஊர்காவற்படையினரும் நிறுத்தப்பட்டனர்.

சுற்றிவரச் சிங்கள மக்களின் குடியேற்றங்களுடனும், மினிமுகாங்களின் பாதுகாப்புடனும் இருந்த மண்கிண்டிமலை இராணுவத்தளம்தான் மணலாற்றில் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளுக்கு எல்லாம் கட்டளையிடும் மையத்தளமாக நின்று செயற்பட்டது. பாதுகாப்பான இத் தளத்தில் இருந்துதான் இராணுவத் தளபதிகள் தாக்குதல் திட்டங்களை வகுத்தனர். அத்துடன் அருகில் அமைந்திருந்த முந்திரிகைக்குளம் இராணுவமுகாம், சாம்பன்குளம் இராணுவமுகாம், கொட்டக்கேணி இராணுவமுகாம், கொக்குத்தொடுவாய் இராணுவமுகாம் என மணலாற்றில் இருந்த பல இராணுவ முகாங்களுக்கும் உதவி வழங்கும் முகாமாகவும் இத் தளமே செயற்பட்டது. மணலாற்றுக் காட்டுப் பகுதிகளின் மீதும் கிராமப்புறங்களின் மீதும் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தக்கூடிய பாரிய பீரங்கித் தள்ளமும், ஏனைய முகாங்களுடனும் இராணுவத் தலைமையகத்துடனும் உடனுக்குடன் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய நவீன வசதிகளைக் கொண்ட சிறந்த தொலைத்தொடர்புக் கருவிகளும் இம் முகாமிலேயே இருந்தன. இவ்வாறு பலவழிகளிலும் முக்கியம் பெற்ற இம் முகாமைத்தான் தாக்கியழிக்கப் புலிகள் திட்டம் வகுத்தனர். மிகவும் பலம்வாய்ந்த நிலையில் இருந்த இம் முகாமை வெற்றிகரமாக, மிகக்குறைந்த இழப்புக்களுடன் தாக்கியழிப்பதென்றால் அம் முகாமைப்பற்றிய முழுத் தகவல்களும் தெரிந்தாக வேண்டும். அதற்காகவே நீண்டகாலப்பணி தொடர்ந்தது. வேவுப்புலிகளின் கடும் உழைப்பினாலும் அவர்களின் உயிர்த்தியாகங்களாலும் இராணுவத்தினரின் ஒவ்வொரு அசைவுகள் பற்றிய தகவல்களும், முகாமின் கட்டமைப்புப் பற்றிய தகவல்களும் தளபதிகளின் கைகளுக்கு வந்து சேர்ந்தது. இதன் மூலம் மண்கிண்டிமலை இராணுவத் தளத்தின் மாதிரி உருவ அமைப்பு, புலிகளின் தளத்தில் உருவாகியது.

இத் தளத்தின் மீது ஒரு நீண்ட நேரத்தாக்குதலை நடாத்துவதென்பது இலகுவான விடயமல்ல. தாக்குதலைத் தொடங்கிவிட்டாலே ஒரு மணி நேரத்துக்குள்ளேயே அருகில் உள்ள கொக்குத்தொடுவாய், முந்திரிகைக்குள முகாங்களில் இருந்து உதவிக்குப் படையணிகள் விரைந்துவந்துவிடும். விமானப் படைகள் விரைந்துவந்து தாக்குதலைத் தொடுத்துவிடும். எனவே இத் தளத்தின் மீதான தாக்குதல் மிகவும் குறுகிய நேரத்துக்குள் நடாத்தி முடிக்கப்பட வேண்டும். அதற்கான கடும் பயிற்சிகளில் போராளிகள் உற்சாகத்துடன் ஈடபடத் தொடங்கினார்கள். அத்துடன் இத் தாக்குதலுக்கென வன்னி மற்றும் தமிழீழத்தின் பிற பகுதிகளில் இருந்தும் விசேட தாக்குதல் அணியினர் வரவழைக்கப்பட்டனர். இதேவேளை இத் தாக்குதலுக்கு துணைப்படையினரையும் ஈடுபடுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டு அவர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. தாக்குதலுக்கான முழு ஒத்திகையும் பார்க்கப்பட்டு, தாக்குதலுக்குப் புலிகளால் இடப்பட்ட பெயர்தான் இதயபூமி-I. 1991ல் ஆனையிறவுப் பெரும் தளத்தின் மீது பெயர் குறிப்பிட்டு நடாத்திய தாக்குதலுக்குப் பின்னர் புலிகளால் பெயர் குறிப்பிட்டு நடாத்தப்பட்ட தாக்குதலும் இதுவேயாகும். தமிழீழத்தின் வட-தென் பகுதிகளை இணைத்து நிற்கும் இப் பகுதியே தமிழீழத்தின் இதயப்பகுதியாகும். அதனால் இம் மண்ணை மீட்டெடுக்கும் தாக்குதலுக்குப் புலிகளால் இடப்பட்ட பெயர்தான் இதயபூமி.



அதன் பின்னர் தாக்குதலுக்கான நாளும் குறிக்கப்பட்டது. 1983 யூலையில் திருநெல்வேலியில் விடுதலைப் புலிகள் நடாத்திய முதல்பெரும் தாக்குதலால் வெகுண்டெழுந்ததாகக் காட்டிக் கொண்டு சிங்கள படைகளும், சிங்களக் காடையர்களும் தமிழர்கள் மீது நடாத்திய யூலைப் படுகொலைகளின் 10ஆவது ஆண்டு நிறைவடையும் 25.07.93ன் நடு இரவு தாக்குதலுக்கான நாளாகத் தீர்மானிக்கப்பட்டது. தாக்குதலுக்கான அணிகள் பிரிக்கப்பட்டு, அவர்களுக்கான தாக்குதல் திட்டங்களை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி சொர்ணம், துணைத்தளபதி பால்ராஜ், தளபதி தீபன், மணலாற்றின் சிறப்புத் தளபதி அன்பு ஆகியோர் விளங்கப்படுத்தினர். தாக்குதல் திட்டங்களை மனப்பாடம் செய்துகொண்டு இரவோடு இரவாக மண்கிண்டிமலை இராணுவ முகாமைச் சுற்றி போராளிகள் வேலியமைத்து நிலையெடுத்தனர். தாக்குதலுக்கான உத்தரவு கிடைக்கும்வரை காட்டு மரங்களை கவசமாககொண்டு இருளோடு இருளாக மறைந்து கொண்டனர். ஆனால் தாக்குதலுக்கான உத்தரவு கிடைப்பதற்கிடையில் இராணுவ முகாமில்

*மணலாற்றிலும் பெயர்குறிப்பிட்டு ஒரு தாக்குதலை நடாத்தவேண்டும், அதில் பெரும் வெற்றியும் அடைய வேண்டும் என்பதே போராளிகளின் இலட்சியமாக இருந்தது. அவ் இலட்சியத்தின் உறுதிதான் மண்கிண்டிமலை இராணுவ முகாம் தாக்குதலில் பெரும் வெற்றியை ஈட்டிக்கொடுத்தது. இராணுவ ரீதியாக மட்டுமல்ல அரசியல் ரீதியிலும் சிறீலங்காப் படைகளுக்கும் அரசிற்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்த இத் தாக்குதலை, புலிகள் எவ்வாறு வெற்றிகரமாக நட்டாத்தி முடித்தனர்?*

இருந்த மோப்பநாய்கள் வெளிப் பகுதிகளைப் பார்த்துக் குரைக்கத் தொடங்கின. தாக்குதல் திட்டம் பிழைத்துவிட்டதோ எனப் போராளிகள் மட்டுமல்ல இத் தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தவேண்டும் என உறுதியாக இருந்து செயற்பட்ட மணலாற்றின் சிறப்புத் தளபதி லெப். கேணல் அன்புவின் உடல் கூட அந்த இருட்டிலும் வியர்க்கத் தொடங்கிவிட்டது.

(தொடரும்)

**எஸ்.தீரன்**




# எங்கே தவறு?

பறந்து வந்த சாப்பாட்டுக் கோப்பையிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள மதுமிதா குளிர்சாதனப் பெட்டிக்கும், மின்சார அடுப்புக்கும் இடையில் இருந்த இடைவெளிக்குள் புகுந்து குனிந்தாள்.

ஏழு மாதக் கர்ப்பிணியான அவளால் அந்தச் சிறிய இடைவெளிக்குள் தன்னை முழுமையாக அடக்க முடியவில்லை.

கோப்பை அவளைத் தாண்டிச் சுவரில் மோதி, அவள் ஆசை ஆசையாகச் சமைத்த சாப்பாடுகள் நிலத்தில் சிதறின.

ஏற்கெனவே படபடத்த அவளது நெஞ்சு, கோப்பை உடைந்த சத்தத்தில் இன்னும் வேகமாக அடித்துக்கொண்டது. கால்கள் வெடவெடத்தன.

'உனக்குப் புருஷன் வீட்டாரோடை சரியான முறையில் பழகத்தெரியாது' சாப்பாட்டை நிலத்தில் விதைத்ததோடு திருப்திப்படாத மகேசன் அவளை அடிப்பதற்காக, கோபாவேசத்துடன் அவளை நெருங்கினான்.

அந்தச் சிறிய சமையலறைக்குள் ஒடுங்கி நிற்கும் அவளுக்கு, தன்னை எப்படிக் காத்துக்கொள்வதென்றே தெரியவில்லை. பயத்தில் வீரிட்டாள்.

அந்தச் சத்தத்தில், குளியலறைக்குள் குளித்துக்கொண்டிருந்த கண்ணன் விழுந்தடித்துக்கொண்டு ஓடிவந்தான்.

மூர்க்கத்தனத்துடன் மதுமிதாவை நோக்கி விரையும் மகேசனை கட்டிப்பிடித்து மறித்தான்.

ஒரு நொடிப்பொழுது பிந்தியிருந்தாலும் கர்ப்பிணியான மதுவின் உடலின் ஏதோ ஒரு பகுதியை, மகேசனின் மூர்க்கத்தனம் பதம் பார்த்திருக்கும்.

மதுவின் கண்கள், கண்ணனுக்கு நன்றி கூறின.

'என்ன மகேசண்ணை நீங்கள்! உங்களுக்கு மதுவை அடிக்க மனம்வருதே? ஏன் இப்படி அவளைக் கொடுமைப் படுத்துறீங்கள்? அவள் உங்கடை தம்பி பெண்சாதியெண்டதை மறந்திட்டீங்களோ?'

கண்ணன் வேதனை இழைந்தோட வினவினான்.

'நீ என்னடா கதைக்கிறாய். அவளுக்கு நான் அவளின்ரை புருஷன்ரை அண்ணன் எண்டதே மறந்து போச்சு. நீ அதுக்குள்ளை வந்திட்டாய்' சீறினான் மகேசன்.

மகேசனின் சீற்றம், மதுவை இன்னும் பயமுறுத்த, அவள் கண்ணனின் பின் ஒளிந்து கொண்டாள்.

'என்னடி அவனுக்குப் பின்னாலை ஒளியிறாய்? அவன் என்ன உனக்குப் புருஷனோ?'

அவனது அநாகரிகமான பேச்சைக் கேட்க விரும்பாமல், மது தனது அறைக்குள் ஓடிச்சென்று, கட்டிலில் வீழ்ந்து அழுதாள்.

'ஏன் எனக்கு இந்தக் கொடுமை. இன்னும் எத்தனை காலத்துக்கு இந்த அவஸ்தைகளை நான் தாங்கவேண்டும்.'

மனசுக்குள் வேதனை பொங்க, கண்ணீரைச் சொரிந்தாள்.

இன்று அவளது முதலாவது திருமணநாள். அதைக் கொண்டாடத்தான் அவள் ஸ்பெஷல் சமையல் செய்திருந்தாள்.

அவளது அக்கா சுபேதாவும், அத்தான் மகேசனுமாகத்தான் அவளை மகேசனின் தம்பி சபேசனுக்கு மனைவியாக்க இங்கு ஜேர்மனிக்குக் கூப்பிட்டார்கள்.

'கொம்பியூட்டர் கோர்ஸ் செய்கிறேன், வரமாட்டேன்' என்று மது மறுத்துத்தான் பார்த்தாள்.

சுவேதாதான் தொலைபேசிமேல் தொலைபேசியாக அடித்து, ஊரிலிருந்து அம்மா, சகோதரர்கள் படும் கஷ்டங்களைக் காரணங்களாக்கி ஜேர்மனிக்கு மதுவை வரச்செய்தாள்.



வந்து ஹோல் எடுத்து, தாலி கட்டி, திருமதி சபேசன் ஆகும் வரையிலான அந்த மூன்று மாதங்களும் மது சிட்டுப்போல் சிறகடித்துப் பறந்து திரிந்தாள்.

சபேசனின் கடைக்கண் பார்வையில் களித்திருந்தாள்.

கூட்டுக் குடும்பமாய் சுவேதா மகேசன் ஒரு அறையிலும், மது சபேசன் இன்னொரு அறையிலும், சபேசனின் நண்பன் கண்ணன் இன்னொரு அறையிலுமாக அந்த வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்த சில நாட்களுக்குள்ளேயே மகேசனின் நடவடிக்கைகளில் ஏதோ தப்பிருப்பதை மது உணர்ந்துகொண்டாள்.

குளித்துக்கொண்டிருக்கையில், திறப்புத்துவாரத்தில் நிழலாடுவதும், உடைமாற்றிக் கொண்டிருக்கையில், எதேச்சையாக உள்ளே நுழைவதுபோல் மகேசன் அவள் அறையில் நுழைவதும், எதேச்சையான விடயங்கள்தான் என்று மதுவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஆனாலும் சந்தோஷமான குடும்பத்தில் சஞ்சலத்தை ஏற்படுத்தும் துணிவின்றி, மௌனித்திருந்து மனதுக்குள் சஞ்சலப்பட்டாள்.

சுவேதா வேலைக்குப் போகும் நேரத்தில் தனது வேலை நேரத்தை மாற்றி மகேசன் வீட்டில் நிற்கத் தொடங்கியதுமல்லாமல் 'ரீ போட்டுத்தா, பக்கத்திலை இருந்து சாப்பாடு போட்டுத்தா, என்னோடை கதை... என்று தொல்லைப்படுத்தவும், அவள் அதற்கு மறுக்கும் பட்சத்தில் அவளை மூர்க்கமாகத் தாக்க முற்படவும் தொடங்கிய போதுதான், அவள் துணுக்குற்று, சபேசனிடம் 'உங்கள் அண்ணனின் நடவடிக்கை சரியில்லை' என்று முறையிட்டாள்.

முதலில் புரியாது விழித்த சபேசன், என்ன சொல்கிறாளென்பது புரிந்ததும்,

'என்ரை அண்ணனை எனக்குத் தெரியும், நாங்கள் ஒற்றுமைக்கு உதாரணமாக வாழ்ந்த குடும்பம். இப்படியான கதையளைச் சொல்லி எங்களைப் பிரிக்க நினைக்காதை' புழுவைப்போல மதுவைப் பார்த்து, பொரிந்து தள்ளினான்.

வெகுண்ட மதுவின் மனதுள் அன்றுதான் சபேசனிலிருந்த காதல் மயக்கம் மெது மெதுவாய்க் கலையத் தொடங்கியது.

'மனைவி நான் சொல்கிறேன், நம்ப மறுக்கிறானே' என்று சினப்பட்டாள்.

* * *

குழந்தை பிறந்ததும் மகிழ்வில் எல்லாவற்றையும் மறக்க முயன்றாலும், மகேசனின் அருவருப்பான லீலைகளில் வாழ்க்கையையே வெறுத்தாள்.

தனிக்குடித்தனம் போய் விடுவோம் என்று சபேசனிடம் மன்றாடிப்பார்த்தாள்.

பலனில்லாது போக, அக்கா சுபேதாவிடம் தனது அவஸ்தைகள் பற்றிச் சாடைமாடையாகச் சொல்லிப்பார்த்தாள்.

'உனக்கு அடக்க ஒடுக்கம் இல்லை. பெரியவர்களை மதிக்கும் குணம் இல்லை. அவரே உன் அடங்காப் பிடாரித்தனம் பற்றி என்னிடம் சொல்லிப் பேசினார். நீ அடங்காமல் வாழும் ஆசையில் சாமிப்போக்கில் வாழும் அவரையே நாக்கூசாமல் குறை கூற நினைக்கிறாய். இப்படி ஒரு தங்கையைப் பெற்றதில் எனக்கு வெட்கமாய் உள்ளது'

சுவேதா சீறிய சீறலில் மது அடங்கிப் போனாள். ஒடுங்கிப் போனாள். அனாதையாக உணர்ந்தாள். சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் அந்த வீட்டுக்குள் நடக்கும் அநியாயங்களை மென்று விழுங்கினாள்.

மகேசனுக்கு இது நல்ல வசதியாகப் போய்விட்டது. பகல் வேலையையே விட்டுவிட்டு இரவு வேலை செய்யத்தொடங்கினான்.

பகலில் இவளின் அழகிய மேனியைத் தொடுவதிலும், உரசுவதிலும் கண்ணாயிருந்தான். மறைமுகமாகக் கட்டிலுக்குக்கூட அழைத்துப் பார்த்தான். அவள் மறுக்கும் நேரமெல்லாம் மூர்க்கம் பிடித்தவனாய் அவளை அடிக்கவும் உதைக்கவும் முயற்சித்தான்.

இப்படியான சமயங்களில்தான் கண்ணன் இவர்கள் பிரச்சினையில் தலையிடத் தொடங்கினான்.

இந்த நரக வாழ்க்கையின் நான்கு வருட ஓட்டத்தில் மது இரண்டாவது குழந்தையையும் பெற்றிருந்தாள்.

தனிமைப் படும் நேரத்திலெல்லாம், தன்னைக் காத்துக்கொள்ள மதுவே கண்ணனை அழைக்கத் தொடங்கியிருந்தாள்.

அண்ணன் மேல் கண்மூடித்தனமான பாசம் வைத்திருக்கும் சபேசனோ, கணவன் மேல் அதீத நம்பிக்கை வைத்திருக்கும் சுவேதாவோ தராத பாதுகாப்பை, கண்ணன் தந்ததில் கண்ணன் மீது தன்னையறியாமல் பாசமாகிப்போனாள்.

மகேசன், 'அவன் உன்ரை புருஷனோ' என்று கேட்கிற ஒவ்வொரு தருணத்திலும் அவளுக்கு கண்ணனிடமான மன நெருக்கம் இறுக்கமாகிக்கொண்டே போனது.

அந்த மனநெருக்கம் தப்பென்று தெரிந்ததும், தப்பிக்க முடியாமல் மது தடுமாறினாள்.

கட்டிய கணவன் பக்கத்தில் கட்டிலில் தூங்கியபோதும், மனம் துப்புக்கெட்டு பக்கத்து ரூம் கண்ணனைத் தொட்டுத் தொட்டு வருவதைத் தடுக்கமுடியாமல் தவித்தாள்.

'நான் என்ன கெட்டவளா? ஏன் இப்படியானேன்'. தன்னையே கேள்விகளால் துளைத்தாள்.

'சபேசன் என் கணவன்தான். ஆனாலும் காதலிக்க முடியவில்லையே. வெறுப்பில்லாவிட்டாலும், மனதால் விரும்பமுடியவில்லையே. ஏன் இப்படியானது? இவனுடனான நான்கு வருட வாழ்க்கை கசந்துவிட்டதா? அல்லது கசக்க வைத்தானா? பருந்தாகத் திரியும் இவன் அண்ணன் முன், நான் கோழிக்குஞ்சாய் நடுங்குவதைக் கூடக் கண்டுகொள்ளத் தெரியாத இவனை என்னால் கணவனாகவே கருதமுடியவில்லை' தானே தனக்குப் பதிலும் சொன்னாள்.

இரவு விடியலை நோக்கி நடந்து கொண்டிருக்கையில், இவர்களிடம் இருந்து விடிவை நோக்கி மதுவின் நினைவுகளில்.....?

(யாவும் கற்பனை)

சந்திரவதனா செல்வகுமாரன்

ஜேர்மனி நொய்ஸ் வாழ் மக்களுக்கும் அதன்
அண்மித்த நகர மக்களுக்கும்

ஓர் நற்செய்தி

நொயிஸ் நகரில்
20.09.1999 முதல்
கோலாகலமாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது

லீமா மக்கள் கடை

இடம்: நொய்ஸ் பிரதான புகையிரத நிலையத்திற்கு முன்பாக
Marienkirch Platz-5
41460 Neuss, Germaney.
Tel: 02131546311 - Fax: 02131546312

நிலூ ஆசியன் சொப்

Heb-Sr 25,
80798 München.

'தரமான பல வகையான
தொலைபேசி அட்டைகள்'
மொத்தமாகவும் சில்லறையாகவும்
உத்தரவாதத்துடன் விற்பனை ஆகின்றது.
மொத்தமாக வாங்குபவர்களுக்கு
10% முதல் 30% வரை
விசேட கழிவு கிடைக்கும்

Eelam card — Econo City Plus
Ganaam — Unicom
Alpha — Mundo Phon
A1 — Afrika Alpha

அனைத்து தொலைபேசி அட்டைகளுக்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்:

NILU ASIAN SHOP

தொடர்புகட்கு: 01 72 86 52 784

உன் உயர்வுக்கு...

மனிதனே: உன்மனதில் பட்டதை உடனே சொல்லிவிடு இல்லை என்றால் சில நாட்கள் கழித்து உன்கருத்தை வேறு ஒருவன் வாயிலாகக் கைகட்டி நின்று உபதேசமாக நீயே கேட்கவேண்டிவரும். எனவே உன்னை நீ மதி. அப்போதுதான் நீ உயர்வாய்.

ஜேர்மனியில் புகழ்பெற்ற மொத்த வியாபார ஸ்தாபனம்
இலங்கை, இந்தியா நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட
மீன் வகைகள் -நண்டுகள் மற்றும் மளிகைப் பொருட்கள்
இவற்றுடன் கென்யா நாட்டில் இருந்து பசுமையான மரக்கறிகள்
இவை அனைத்தையும் சனிக்கிழமைகளில் Frankfurt Air port இலும்
ஞாயிற்றுக்கிழமைகளில் Store (Viersen) இலும் பெற்றுக்கொள்ளலாம்.

Dero Trade International
Import & Export

Schonskanter weg31,
41066 Mönchengladbach,
Germany.
கே.பிரேம்குமார்

Tel: 02161 - 809891-208365 / Fax: 02161-809895-650741

மக்களின் நன்மதிப்பைப்
பெற்ற ஸ்தாபனம்

Premii Cash & Carry

சகலவிதமான
பொருட்களையும்
மொத்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

(Bahnhof க்கு அருகாமையில்)
Eickner Str.7
41061 Mönchengladbach.
Tel: 02161-208365
Fax: 02161-650741

உதாரணத்திற்குச் சில.....

மாபெரும் மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| அரிசிமா 4 pkt (4x 1 kg) | - | 9.90 DM |
| சம்பா அரிசி 3 pkt (3x 1 kg) | - | 9.90 DM |
| DERO மிளகாய்த்தூள் Box (3x500 Gr) | - | 12,75 DM |
| DERO மிளகாய்த்தூள் Bag (3x500Gr) | - | 11.99 DM |
| சம்பா அரிசி 5Kg | - | 16.90 DM |
| மரக்கறி (இலங்கை, இந்தியா, கென்னியா) | - | 6,90 DM |
| துப்பரவு செய்யப்பட்ட இந்தியன் நண்டுப்பெட்டி | - | 12.90 DM |

# கலைந்த சொற்கள் எண்: 40

கீழ் உள்ளவற்றில் 134 சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர்கோட்டிலும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச் சொற்களைக் கண்டு பிடித்துக் கோடிடவும். இச் சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தி | டு | தி | வு | பெ | மு | க | ர | ம் | னை | கே | பு | மை | ல | பு | பு |
| வி | ழு | ர | நீ | றி | அ | ட் | வ | ய | த | வி | ப் | கை | ப் | ப் | ப் |
| ல் | த | பு | ப் | னு | அ | டு | ட் | யா | ளை | வி | ரி | கை | டி | டி | ற |
| கை | ர | பு | கூ | ம் | ம | ம | ர | நி | ழ | ல் | தி | பி | த | ந | சி |
| ம் | க் | ல | பை | ச | பு | ர | ல | ம் | ட | ம | ப் | போ | ஆ | டி | பு |
| ம் | ம் | ரி | ப் | தே | ப் | ம் | ர | க | சி | றை | வா | ச | ம் | ப் | வு |
| இ | ள | த | கோ | வ | கு | கா | ர | ளா | சி | ழு | ச | ன | ழி | ரி | பு |
| த | ம் | க | க் | ர் | வ | ண | மா | வ | ம் | ல | ல் | செ | வி | வ் | செ |
| த் | ர | மை | ச | ச | ர் | ச் | வ | க | அ | வ | ம் | ய | லி | ல் | து |
| து | கா | க | ரி | னா | ய | ய | டு | தி | ப | ம | ரு | பு | ப் | ழி | அ |
| வ | ல | ள் | ன் | உ | உ | க | ப | க | ணி | ப் | பு | பு | ப் | டி | ம |
| ம் | ரு | இ | ய | பு | தி | ர் | ல் | த | ந் | த | து | து | த | ர | ஈ |
| அ | த் | பு | ம் | ர | ந | வ | ம | ணி | து | ம் | ல் | டி | வ | ர் | த |
| ம் | ட | ரு | வ | ர் | ம | ம் | வா | வு | செ | ல | த | ண் | ணீ | ர் | த |
| ப | அ | ன் | றா | கி | ப | ஒ | பு | ய் | வே | ய் | டு | த் | ம | ரா | ல் |
| ம் | ற | ற் | சு | ளி | வெ | ண் | வி | த | ப் | வை | யா | ம் | மு | ற | கு |
| கு | அ | த் | தை | டா | ம் | னை | ட | ல் | ல் | பு | ளை | மை | ற் | ற் | ம |
| ட | த | த் | ம | த | ர | ப | த | ம் | ள் | ச | வி | வி | ற | ண | இ |
| ம் | த | னை | ட | ண் | த | டை | ன | நா | ன | னை | பு | ம் | ம் | வ் | ன் |
| ல் | க | ம் | மை | வு | கு | ச | ரு | ன | ய | ம் | ர | ல | வி | ப | ப |
| ய | ய | ர | த | ர | ரி | தி | ம் | ம் | ட | க | த | ட | டை | ரு | ம் |
| மை | மை | ழ | கி | த | ல் | ச | ரை | உ | அ | அ | ம் | ப | ல | வி | அ |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பிரிவினை | விளைநிலம் | செம்மணி | நியாயம் | துல்லியம் | தரப்பு | உயர்வகுப்பு | மாணவர் | கட்டுமரம் | வர்க்கம் | மரநிழல் |
| குணவதி | வரம்பு | செல்லம் | வளாகம் | சிகரம் | அதிபர் | கடுகதி | அவசரம் | சிறைவாசம் | வானவில் | திரிப்பு |
| மரவண்டு | மடிப்பு | செய்யாமை | செய்வினை | விண்வெளி | அகரம் | அழிப்பு | சிறப்பு | பெறினும் | சர்வதேசம் | கர்வம் |
| சுத்தம் | சுற்றம் | விற்றல் | முறிப்பு | இன்னார் | அனுப்புதல் | பணிந்து | நடிப்பு | திகைப்பு | சப்தம் | தரகன் |
| வாய்ப்பு | மண்குதிரை | பண்டம் | அடிதடி | கதிரவன் | கணிப்பு | மடுவம் | வர்மம் | சகலம் | தத்துவம் | புருவம் |
| நரம்பு | அனுகூலம் | கோரிக்கை | செழிப்பு | மனுநீதி | பிடிப்பு | அற்றார் | நவமணி | தண்ணீர் | தண்டனை | வருடம் |
| அரும்பு | கும்பம் | தைத்தல் | கிரகம் | குதரம்* | குடைதல் | நம்புதல் | தரிசனம் | திருநாள் | உரைசல் | சனனம்* |
| நாயகம்* | வினையம் | உடம்பு | அம்பலவி | புரதம் | படலம் | இவ்விடம் | விம்பம் | இன்பம் | குற்றம் | தர்மம் |
| தந்தது | இதம் | அத்தை | குடம் | மையல் | மையம் | கிழமை | பதம் | தசம் | அகம் | கடம் |
| மணம் | அருவி | செவ்வி | மாவடு | காரம் | சிலம்பு | வாசல் | அறிவு | இம்மை | கோப்பை | விரிவு |
| புதர் | கைதடி | உரிமை | புழுதி | விதம் | புரம் | கரம் | களம் | கடல் | புலமை | ஆப்பு |
| அருள் | பகல் | தணிவு | மடமை | தடம் | தளம் | தரவு | முற்றம் | நடிகை | தகமைகள் | |
| விளையாட்டு | விளையாடுதல் | | சிறைப்பிடிப்பு | | | | | | | |

மேலுள்ள கலைந்த எழுத்துக்களில் சில குறள்களும், சில பழமொழிகளும் கலைந்திருக்கின்றது. எழுத்துக்களை ஒன்று சேர்த்து இரண்டு குறள்களும், மூன்று பழமொழிகளையும் எழுதி அனுப்பவேண்டும்.மேலுள்ள எழுத்துக்களை தவிர வேறு எந்த எழுத்துக்களையும் சேர்க்கக்கூடாது.

குறள் 1, ..........

குறள் 2, ..........

பழமொழி 1,..........

பழமொழி 2,..........


பழமொழி 3,..........

பெயர்:..........

முகவரி:..........

பிறந்த நாள்:.......... சந்தாதாரராயின் சந்தா எண்:..........

## கலைந்த சொற்கள் எண்–39 விடைகள்



ஈழமுரசின் சென்ற எண் கலைந்தசொற்கள் பகுதிக்கு 150 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள். அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர்களின் விபரங்கள் வருமாறு.

1) S. வாசுகி
93500 Pantin,
France.

2) K. பவென்
16036 Recco (Ge),
Italy.

3) S. சுககுமார்
7000 Chur,
Switzerland.

4) V.P. செல்லத்துரை
57205 Kreuztal,
Germany.

5) இ.மோகன்
1266 Oslo,
Norway.

இவர்களுக்கு *Lune International* நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்தக் கலைந்த சொற்கள் எண்-40 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்- 41ம், 14 - 20 ஒக்டோபர் 99 ஈழமுரசில் வெளிவரும்.

*இவ்வடையாளம் இடப்பட்ட சொற்களுக்கான விளக்கம்:
குதரம்-மலை, சனனம்-பிறப்பு, நாயகம்-தலைமை.

கலைந்த சொற்கள் எண்-40 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: 08.10.1999 (போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:
கலைந்த சொற்கள்: Eelamurasu
22, Rue Perdonnet, 75010 Paris,
France.

தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா

**சர்வதேச தமிழ் ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம் INTERNATIONAL TAMIL BROADCASTING CORPORATION**

**ITBC**
(FIRST DIGITAL RADIO IN TAMIL)

24 மணி நேர சர்வதேச தமிழ் வானொலி

(கனடாவிலிருந்து நேரடியாக ஒலிபரப்பாகின்றது)
Eutelsat Hotbird 3 இல் 12475.5 Mhz

TECHNICAL PARAMETERS


| | | | |
|---|---|---|---|
| Satellite: | Hotbird 3-13 degrees East | Polarization: | Horizontal |
| Platform: | DVB/MPEG-2(MCPC) | Symbol Rate: | 27,5 MS/s |
| Freqyency: | 1247550 | FEC: | 3/4 |

ஒலிபரப்பாகும் நாடுகள்:
42 ஐரோப்பிய நாடுகள் (Eutal sat Hotbird 3 இல்)
Canada உட்பட வட அமெரிக்கா (Fm சிறப்பலை வரிசையில்)
மத்திய கிழக்கு நாடுகள் (Eutal sat hot bird 3 இல்)
வெகுவிரைவில் இலங்கை, இந்தியா (சிற்றலை வரிசை)

ITBC இற்கு கடமைபுரிய சகல நாடுகளிற்கும் பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர்.

தலைமையகத் தொடர்புகளுக்கு:
Tel: 1-416 412 7384 / Fax: 1-416 412 7386

# பிரெஞ்சுக்காரர்கள் திருகோணமலையைக் கைப்பற்றிய பொழுது...




30.08.1782 அன்று திருகோணமலை நோக்கிய பிரெஞ்சுக் கடற்படையின் வருகை

சரித்திர வரலாறுகளின் கூற்றுப்படி சிறீலங்காவைப் போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற அந்நியர்கள் ஆண்டார்கள் என்பது தெளிவாக இருந்தபோதும், பிரெஞ்சுக்காரர்களும் இத் தீவின் திருகோணமலையை, ஏறத்தாழ 217 வருடங்களுக்கு முன்னர் தம்வசம், இரு வருடங்கள் வைத்திருந்தார்கள் என்பது இன்று கூடப் பலருக்குத் தெரியாமல் இருக்கின்றது.

30.08.1782ல் பிரெஞ்சுக் கடற்படை, ஆங்கிலேயர் வசம் இருந்த துறைமுகங்கள் மீது திடீர் தாக்குதல்களை நடாத்திய பொழுது திருகோணமலைத் துறைமுகம் பிரெஞ்சு ஆதிக்கத்தில் வந்தது.

ஆங்கிலேயர்கள் 11.01.1785 தொடக்கம் இத் துறைமுகத்தைத் தம்வசம் ஆக்கிக்கொண்டார்கள் எனவும், எக் காரணத்தைக் கொண்டு இவ் இடத்தைக் கைப்பற்றினார்கள் என்பதும் ஓர் கேள்விக்குறியாக இருக்கின்றது.

தென் இந்தியாவில் உள்ள நாகபட்டினம் துறைமுகம் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தில் வந்ததன் பிற்பாடு, அவ்விடத்தில் வருடா வருடம் வீசும் வடகிழக்குப் பருவப் புயல்கள், கிழக்குக் கரைகளில் தொடர்ந்து ஐந்து மாதங்கள் வீசும் பொழுது, திருகோணமலைத் துறைமுகத்தைக் கைப்பற்றினால்த்தான் தமது போர்க்கப்பல்களை இவ் விசாலமான இயற்கைத் துறைமுகத்துக்குள் பாதுகாப்பாக வைத்திருக்கலாம் என ஆங்கிலேயர்கள் கருதியிருக்கலாம் போலும்.

பின்பு அதேவருடம் ஏழு ஆங்கிலேயரது போர்க் கப்பல்கள் ஈழத்துறைமுகத்தின் நுழைவாயிலுக்கு அருகே நங்கூரம் இட்டு, தமது போர் வீரர்களை இறக்கத் தொடங்கின. இத் திருகோணமலைத்துறைமுகத்தின் மத்திய பாதுகாப்பு வலையம் எனக் கருதப்படும் 'Fort-ortenbu-rgh' என்னும் இடத்தில் இயற்கையின் சீற்றத்தினால் ஏற்பட்ட தாக்கங்களைச் சீர் அமைப்பதற்காக 'ஓர் சான்றிதழ்' பதினோராம் திகதி கையொப்பமிடப்பட்டது.

பிரெஞ்சு நாட்டவர்கள் திருகோணமலையை 30.08.1782 கைப்பற்றி ஏறக்குறைய இரு வருடங்கள் தம்வசம் வைத்திருந்துவிட்டு, ஒல்லாந்தரிடம் 1785ல் கையளித்தார்கள். ஒல்லாந்தர்கள் திரும்பவும் ஆங்கிலேயர்களுக்கு 1795ல் திருகோணமலையைக் கொடுத்தார்கள் என வரலாறு கூறுகின்றது. இத்துறைமுகம் ஏன் இப்படி அந்நிய ஆதிக்கங்களில் கைமாறுகின்றது என்பது ஓர் புதிராக இருந்துவந்தது.

மாசி 1782க்கும், ஆனி 1783க்கும் உள்ள இடைக்காலத்தில் இந்திய மைசூர் ஆஸ்தானத்தில் உள்ள கைபர் அலி என்பவருடன் பிரெஞ்சு கடற்படை ஓர் ஒப்பந்தம் எழுதிற்று. அந்நேரத்தில் ஆங்கிலேய்ருக்குத் தளபதியாக 'தாய்' எனக் கூறப்படும் வைஸ் அட்மிரல் —எட்வட் கியூலை என்பவர் இருந்தார். இரு பகுதியினருக்கும் ஐந்து பெரும்போர் மூண்டன. பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்களால் முன்பு கைப்பற்றப்பெற்ற துறை முகங்களைக் கைப்பற்றினர். இதில் திருகோணமலைத் துறைமுகமும் ஒன்றாகும்.

ஆங்கிலேயர்கள் வட அமெரிக்காவை 'அமெரிக்கச் சுதந்திரப் போரில்' இழந்ததன் காரணமாக அவர்கள் இந்தியாவைத் தமது தந்திரங்களால் கைப்பற்ற பல இரகசியத் திட்டங்கள் ஆக்கிக்கொண்டிருந்தார்கள். ஒல்லாந்தர் அவ்விடம் வரமுன் நாகபட்டினமும், திருகோணமலையும் நடுநிலை வகித்துக்கொண்டே இருந்தபோதிலும், கிழக்குப் பிராந்தியங்களுக்கு, திருகோணமலை ஓர் சிறந்த இயற்கைவளம் மிக்க, பாதுகாப்பான துறைமுகம் என அறிந்து கொண்ட எட்வேட்கியூஸ் இதைக் கைப்பற்றுவதற்குப் பல வழிகளை ஆராய்ந்துகொண்டே இருந்தார்.

பிரெஞ்சுக் கடற்படையில் அக் காலத்தில் ஓர் தளபதியாகக் கடமையாற்றிய கப்பித்தன் பியர் அன்றே துசோபன்டு சென் டொப்பேஸ் (Captain Pierre André de Suffren de St.Tropez) தமது 14 வயதில், பிரெஞ்சுக் கடற்படையில் சேர்ந்து, 52வது வய்தில் ஓர் தளபதியானார் என்பது அவரின் நாட்டுப்பற்றையும் வீரத்தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றது. இவர் பிரான்சில் உள்ள ஓர் மாகாணத்தில் பிறந்தவர் என்பதும், ஆங்கிலக் கடற்படையுடன் பல தடவைகள் போர்புரிந்தவர் என்பதும் இவரின் வாழ்க்கைச் சரித்திரத்தில் அடங்கும்.

பாண்டிச்சேரித்துறைமுகத்தைப் பிரெஞ்சுக்காரர்களிடம் இருந்து தை 1782ல் ஆங்கிலேயர் கைப்பற்றிய பின்பு தென் திசை நோக்கி ஒல்லாந்தர் வசம் இருந்த திருகோணமலையைத் தம்வசம் ஆக்கிக்கொண்டனர். சரித்திரவியலாளர் திரு. Dr.லோர்னா - S.தேவராஜனின் கூற்றுப்படி அக் காலத்துக் கண்டி அரசன் கீர்த்தி சிறீ ராஜசிங்கன் அவர்களுக்கும், ஒல்லாந்தரின் உறவுக்கும் இடையில் விரிசல்கள் இருந்ததால், ஆங்கிலேயர் தமது தூதுவன் H-Boyd-ஐ கண்டி அரசனிடம் அனுப்பி, அரசனிடம் இருந்து ஆயுதங்களைப் பெற்றுத் திருகோணமலையைத் தமது நிலையாகக்கொண்டு, ஒல்லாந்தரை வருங்காலங்களில் கண்டி அரசனுடன் அன்றி, கண்டி இராச்சியத்துடன் ஓர் வ்கைத் தொடர்புகளும் இல்லாமல் ஆக்க எண்ணினார்கள். இப்படித் திட்டங்கள் தீட்டிய வண்ணம் இருக்கும் பொழுது, துரதிர்ஸ்டவசமாக H.Boyd. கண்டி அரசனைச் சந்திக்க இருந்த சில தினங்களுக்கு முன்னரே, கண்டி அரசன் மாரடைப்பினால் காலமானார். அதன் பின்னர் கண்டி அரசனின் தம்பியார் ராஜாதி ராஜசிங்கன், பதவி ஏற்றார். (1782-1798) இப் புதிய கண்டி அரசன் வெள்ளையர்களின் தந்திரோபாயங்களை நன்கு அறிந்தவராக இருந்தபடியால், திரு.Boyd சந்தித்துக்கூறிய வைகளை எல்லாம் நன்கு அவதானித்த பின், திரு.போய்ட் கூறும் இவ் உடன்பாடுகளை உங்கள் 'ஆங்கிலேயரது இராட்சியத்தால்' வந்தால் மட்டுமே நான் ஏற்கத்தயார் எனக்கூறினார்.

திரு. போய்ட் கடைசியாகத் திருகோணமலைக்குப் போகும் பொழுது, அவரின் கடற்படை அங்கிருந்து சென்றுவிட்டதை அவதானித்தார். உடன் அவர் ஓர் சிறிய வள்ளத்தை வாடகைக்குப் பிடித்துக் கொண்டு, செல்லும்பொழுது, கிழக்கே சவ்ரினின் கட்டுப்பாட்டுக்குள், உள்ளே சென்றுகொண்டிருந்த பிரெஞ்சுக் கடற்படைக்குள் அகப்பட்டு பிரெஞ்சு அதிகாரிகளால் கைதானார். திரு.போய்ட் தாம் தை 11ல் திருகோணமலையைக் கைப்பற்ற நடாத்திய யுத்திகளின் விபரங்களையும், கண்டியரச்னுக்கும் தனக்கும் உள்ள பேச்சுவார்த்தைகளின் விபரங்களையும், சிறீலங்காத் தீவை ஆங்கிலேயர் கைப்பற்றப்போட்டிருந்த திட்டங்களையும் திரு. Suffren இடம் கூறினார். திரு.Suffren தனது கிழக்குத் திசைப் பிரயாணத்தைக் கைவிட்டு, தெற்குத்திசைப் பிரயாணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யத்தொடங்கினார்.

திருகோணமலையின் சரித்திரவரலாறுகள் இனிவரும் காலங்களில்தான் மிக முக்கியத்துவம் பெற்றுள்ளன.

திருகோணமலையைக் கைப்பற்றுவதற்கான முதலாவது போர் 17.02.1782ல் சென்னையில் இடம்பெற்றது. திரு.Suffren, ஓர் திடீர் தாக்குதலை சென்னைத் துறைமுகத்துக்குள் நின்ற ஆங்கிலேயர்களின் கடற்படை மேல் தொடுத்தார். ஆங்கிலேயருக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டபோதிலும், பிரெஞ்சு உப அதிகாரிகளின் சரியான ஒத்துழைப்பு இல்லாததால் திரு.Suffren க்கு இது ஒரு பெரும் வெற்றி எனக் கணிக்கமுடியாமல் இருந்தது.

இரண்டாவது போர், மேற்கிழக்கு மத்திய கடலில் திருகோணமலையில் இருந்து 30 மைல்கள் தொலைவில் 12.04.1782 இல் நடைபெற்றது. ஆங்கில Admiral திரு.கியூஸ் மெதுவாக சென்னை திருகோணமலைப் போரில் இருந்து தவிர்த்துக்கொள்ளவே விரும்பினார் என்பது குறிப்பு. அவர் ஓர் தந்திரவாதியாகையினால், தனது பலம் குறைந்த படைகளாலும், இருக்கும் சுற்றாடல் தமக்கு சரியின்மை காரணத்தாலும், திருகோணமலையைத் தாம் இழக்கவேண்டிவரும் என அவதானித்தார். அத்துடன் திருகோணமலையை இழந்தால், அடுத்தபடியாக 'கிரீடத்தின் வைரம்' எனக் கருதப்படும் இந்தியாவையும் இழக்கும் ஆதங்கங்களும் உண்டு. இதன் காரணமாக ஆங்கிலேயர் வல்லரசு, 'அஸ்தமிக்கும் தொடக்க காலம்' ஏற்பட்டாலும் ஆச்சரியப்படத் தக்கது அல்ல என உணர்ந்தார்.

அதன் காரணமாக அவர் மெதுவாக தென் இந்தியாக் கரைகளில் இருந்து படைகளுடன் புறப்பட்டு இரு தினப் பிரயாணமாக திருகோணமலையை நோக்கிச் செல்லும் பொழுது, வாடைக்காற்றில் (Norther winds) இழுத்துச் செல்லப்பட்டு, திருகோணமலையின் தென்கிழக்கே 30 மைல் தூரத்தில் நின்ற பிரெஞ்சுக் கடற்படைக்க்ள் போய்ச் சேர்ந்தனர். இதன் காரணமாக இரு பகுதியினருக்கும் இடையே போர் மூண்டு, இரு பகுதியினருக்கும் சமமான பாதிப்புகளும் இழப்புக்களும் ஏற்பட்டன. மேலும் ஒரு பிரச்சினைக்குள் திருசவ்ரின் (Suffren), திருகியூக்ஸ் (Huglus)ஐ இழுத்த பொழுதும், அவர் அதைத் தவிர்த்துக்கொண்டார். பின்பு திருசவ்றின் மட்டக்களப்பு ஊடாகக் காலிக்குத் தனது உடைந்த, பழுதடைந்த கப்பல்களைத் திருத்துவதற்குச் சென்றார்.

(மிகுதி அடுத்தவாரம்)



வைஸ் அட்மிரல் சவ்ரின்

**பிரெஞ்சு நாட்டவர்கள் திருகோணமலையை 30.08.1782 கைப்பற்றி ஏறக்குறைய இரு வருடங்கள் தம்வசம் வைத்திருந்துவிட்டு, ஒல்லாந்தரிடம் 1785ல் கையளித்தார்கள். ஒல்லாந்தர்கள் திரும்பவும் ஆங்கிலேயர்களுக்கு 1795ல் திருகோணமலையைக் கொடுத்தார்கள் என வரலாறு கூறுகின்றது. இத்துறைமுகம் ஏன் இப்படி அந்நிய ஆதிக்கங்களில் கைமாறுகின்றது என்பது ஓர் புதிராக இருந்துவந்தது.**

தொகுப்பு: சொக்கநாதன் - பிரான்ஸ்




# மது ஒழிப்பிற்காய் ஐ.நா விருதுபெற்ற சாந்தி



இன்று உலகளாவிய ரீதியில் மது ஒழிப்பு மற்றும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தப் பெரும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. அதன் ஒரு அம்சமாக இப்போது ஐக்கியநாடுகள் சபையும் ஆஸ்திரிய அரசும் இணைந்து இம் மது ஒழிப்புக்கு ஆதரவாகச் செயற்படும் அமைப்புக்களைப் பார்த்து அவற்றுள் திறமையானவற்றுக்குத் தம்முடைய ஐ.நா அமைப்பினது விருதை வழங்கிக் கௌரவித்து வருகின்றனர்.


இவ் விருதை இவர்கள் வழங்கத் தொடங்கியது இவ்வருடம்தான். இப்படி இவர்களால் வழங்கப்பட்ட இந்த முதல் விருது, தற்போது ஒரு இந்தியப் பெண்ணிற்குக் கிடைத்துள்ளது.

ஆம்! மதுபாவனையால் மற்றும் போதை மருந்துப் பாவனைகளால் பாதிக்கப்பட்டவர்களை மீட்டு அவர்களை நல்ல மனிதர்களாக்கும் முயற்சியில் வெற்றி கண்டு இன்று சர்வதேச அரங்கு வரை பாராட்டைப் பெற்றுள்ளார் திருமதி சாந்தி ரங்கநாதன் என்னும் பெண்மணி.

அண்மையில் வியன்னாவில் நடந்த இந்த விழாவில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கோபி அனான் இவருக்கான இந்த விருதை வழங்கிக் கௌரவித்ததோடு 25,000 அமெரிக்க டொலரையும் அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்.

பொதுவாகவே எம் ஆசியப் பெண்கள் என்றால் மதுபாவனையை விரும்பாதவர்கள்தான். அத்துடன் மதுபாவனைக்குள்ளாகும் தம் கணவன்மார்களால் அதிகமாகத் துன்புறுத்தப்படுபவர்களும் இவர்கள்தான். எனவே ஒரு ஆசியப் பெண் இந்த விருது பெற்றது எம் எல்லோருக்கும் பெருமைதான்.

எப்படி இவருக்கு இவ் இலட்சியம் வளர்ந்தது? ஆம், இந்த மது அரக்கனின் பிடியால் தன் கணவனை இழந்தவர் இந்த சாந்தி எனும் பெண்மணி. இவரின் கணவன் வேறு யாருமில்லை. பிரபலமான கிருஷ்ணமாச்சாரியாரின் பேரன் ரங்கநாதன் தான் இவர் கணவன். சமூகத்தில் உயர்ந்த குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டும் தன் கணவனின் ஓயாத மது பாவனையால் மிகுந்த துன்பத்தையடைந்தவர் இந்தச் சாந்தி. ஒருமுறை மதுபாவனையால் தீராத நோய் கண்ட தன் கணவனை அமெரிக்கா வரை கொண்டுசென்று தோல்விகண்டுவிட்டார் சாந்தி. தன் 30வது வயதிலேயே கணவனைப் பறிகொடுத்தவர் இவர். ஆனால் மற்றவர்களைப்போல் தானுண்டு தன் சோகமான வாழ்வுண்டென்று சமூகத்தின் ஒரு மூலையில் பதுங்கிக்கொள்ளவில்லை. மாறாகத் தன்னைப்போல ஒரு நிலை இனி வேறு எந்தப் பெண்களிற்கும் வரக்கூடாது என்பதில் தீவிர அக்கறை கொண்டார் சாந்தி. அந்தத் தீவிர அக்கறையின் விளைவாய் வளர்ந்ததுதான் தற்போது இந்தியாவில் மதுவுக்கு எதிராய் எழுந்து நிற்கும் டி.டி.கே. மருத்துவமனை.



இதைப்பற்றி சாந்தி ரங்கநாதன் கீழ்க்கண்டவாறு விபரிக்கிறார். அதாவது எம் சமூகத்தில் மது பாவனையை ஒரு திமிர்பிடித்த செயலாக எண்ணுகிறோம். ஆனால் மேற்கு நாடுகளில் அதை ஒரு நோயாக எண்ணி சிகிச்சையளிக்கவே முன்வருகிறார்கள். அதாவது பெரும்பாலும் பலர் தமக்கு ஆறுதல் அழிக்கும் ஒரு தரமாக அல்லது உல்லாசத்தைக் கொடுக்கும் ஒரு பொருளாகவே இந்த மதுவை உட்கொள்ளுகிறார்கள். எனவே இவர்களின் உடல், மனம் இரண்டிற்கும் நல்ல முறையில் சிகிச்சையை மேற்கொண்டால் இவர்களை நல்லவர்களாக மாற்றமுடியும். இவ்வாறு நிறையப் பேரை மாற்றியும் விட்டோம் என்று கூறுகிறார் சாந்தி. தற்போது 20 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள இவருடைய மருத்துவமனை இதுவரை 10,000 மதுபாவனையாளர்களுக்குச் சிகிச்சையளித்துள்ளது. இன்று ஐ.நாவின் விருதைப்பெற்றும் கூட சாந்தி ரங்கநாதன் தன் வாழ்வின் முழுமையாகக் கருதுவது தன் மருத்துவமனை மூலம் சிகிச்சை பெற்றுச் செல்பவர்கள் தொடர்ச்சியாக அவ்வாறு நல்ல நிலையில் வாழ்வதைத்தான். எனவே இவருக்கு வழங்கப்பட்ட விருது என்பது பொருத்தமானதே.

## வாக்குரிமை பெற்ற எலிசபெத் ராணி



இங்கிலாந்தில் இனி நடைபெறும் தேர்தல்களில் வாக்குப்போடும் உரிமையைப் பெற்றிருக்கிறார் எலிசபெத் ராணி. என்ன ஜனநாயகத்தின் பிறப்பிடமான இங்கிலாந்தில் ராணிக்கே வாக்குப் போட உரிமை இல்லையா என்று அதிசயிக்க வேண்டாம். ஏனெனில் இங்கிலாந்து நாட்டுச் சட்டப்படி அரசகுடும்பத்தைச் சார்ந்தவர்களிற்கு வாக்குப்போட அனுமதியில்லை. ஆனால் தற்போது சட்டங்களிடையே நடைபெறும் சீரமைப்புக்கள் எதிர்காலத்தில் அரச குடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும் வாக்குப்போடும் உரிமையைப் பெற்றுக்கொடுக்கலாம் எனவும் பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

இருந்தாலும் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அதுவும் ராணி ஒருவருக்கு வாக்குப்போடும் உரிமை இப்போதுதான் கிடைத்துள்ளது. ஆகவே வாக்குப்போடும் உரிமை பெற்ற முதல் ராணி எனும் பெருமை எலிசபெத் மகாராணியாருக்குத்தான் சொந்தமாகிறது.

## பெண்களைப் பாதிக்கும் சினைப்பைப் புற்றுநோய்

சென்றவார பெண்கள் பகுதியில் கர்ப்பப்பைப் புற்றுநோய் பற்றிப் பார்த்தோம். இவ்வாரம் ஓவரி (சினைப்பையில்) புற்றுநோய் வருவது பற்றி சிறிது பார்ப்போம். இந்தச் சினைப்பையில் வரும் புற்றுநோயும் பெண்களை அதிகமாகப் பாதிக்கும் நோய்களில் ஒன்றாகத்தான் அமைகிறது.

ஏனெனில் இந் நோயும் ஆரம்பத்திலேயே சம்பந்தப்பட்டவர்களால் இனங்காணப்படுவதில்லை. அத்தோடு பெண்களிற்குத் தேவையான சில விசேட ஓமோன்கள் இந்த சினைப்பையில் இருந்துதான் சுரக்கிறது என்பதால் இச் சினைப்பை பாதிப்புற்றால் பெண்களிற்கான பருவ வளர்ச்சி, மாதவிலக்கு, குழந்தைப்பேறு போன்ற அனைத்து விடயங்களும் பாதிப்புக்குள்ளாகிவிடுகிறது.

எனவே இந் நோய் உருவாவதற்கான சில அடிப்படைக் காரணங்களை முதலில் பார்ப்போம். 'அதாவது இந்நோய் அதிகமாக வரச் சந்தர்ப்பமுள்ளவர்கள் எவ்வாறானவர்கள் என்றால் ஒன்று அடிக்கடி கருச்சிதைவுக்குள்ளானவர்கள். மற்றது அதிகம் கருச்சிதைவை மேற்கொள்பவர்கள். அடுத்து ஏற்கனவே மார்பில் புற்றுநோய் வந்திருந்தால் அல்லது குடும்பத்திலுள்ள இரத்த உறவுகள் யாருக்காவது ஏற்கனவே மார்பில், சினைப்பையில் புற்றுநோய் வந்திருந்தாலும் இச் சினைப்பைப் புற்றுநோய் உருவாகச் சாத்தியமுண்டு. இதைவிட அளவுக்கதிகமான கதிர்வீச்சு, அளவுக்கதிகமான கொழுப்பு உணவுகளை உட்கொள்ளல், மற்றும் ஈஸ்ட்ரொஜன் ஓமோன்கள் எடுக்கும் பெண்களிற்கும், 30 வயதிற்கு மேலும் குழந்தை பெறாத பெண்களிற்கும்கூட இந்நோய் உருவாக வாய்ப்புகள் உண்டு.

அடுத்து இந்நோய் காணப்படுபவர்களிடம் பின்வரும் அறிகுறிகளும் தோன்றலாம். ஒன்று தொப்புளுக்குக் கீழேயுள்ள பெல்விஸ் பகுதி கனமாக இருக்கும். அடுத்து நடக்கும்போதும் நிமிரும் போதும் அடிவயிற்றின் கீழ்ப் பகுதி கடினமாக இருப்பது போல இருக்கும். இதைவிட ஒழுங்கற்ற மாதவிடாயுடன் வேறு காரணங்களின்றி உடல் பெருக்கத்தொடங்குதல், மற்றும் அடிவயிறு பெருத்தல் உடம்பில் வாயுத்தொல்லை அதிகரிக்கவும் தொடங்கும். இத்தோடு பசியின்மை, உணவு சீரணமடையாமல் போதல் வாந்தி எடுத்தல் போன்றன அறிகுறிகளாக இருக்கும். எனவே இவ்வாறான அறிகுறிகள் முன்பே தொடர்ச்சியாக இருக்குமிடத்து உடனே வைத்தியரை நாடுதலே சிறந்தது.

முதற் பெண்புலி 2-ம் லெப்டினன் மாலதி
நினைவாக தமிழ்ப் பெண்கள் அமைப்பு–பிரான்ஸ்
நடாத்தும்
சுதந்திரக்கீற்று
இடம்: 124, Rue de Bagnolet,
75020 Paris.
Mo: Porte de Bagnolet
காலம்: 10.10.99 பி.ப. 4.00 மணி
பிரவேசம் இலவசம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
தமிழ் பெண்கள் அமைப்பு–பிரான்ஸ் – தொலைபேசி: 0140316362


# புதிய நூற்றாண்டின் முதலாவது ஒலிம்பிக்


## சிட்னி 2000

புதிய நூற்றாண்டாக மலரும் 21-ம் நூற்றாண்டை வரவேற்கக் காத்திருக்கும் பல நிகழ்வுகளில் 'சிட்னி 2000' ஒலிம்பிக் போட்டியும் ஒன்றாகும். ஒலிம்பிக் உலகளாவிய விளையாட்டுப் பெருவிழாவானது 26 தடவைகள் நடைபெற்று ஓய்ந்துவிட்டபோதும் 27 வது தடவையாகச் சிட்னியில் நடைபெறுவதில் தனிச் சிறப்படைகிறது. அவுஸ்திரேலியாவின் முதன்மை நகரான சிட்னி பல சிறப்புக் கொண்டிருந்தாலும் 2000-ம் ஆண்டின் முதலாவது ஒலிம்பிக்கை நடாத்துவதால் அதன் பெருமை இன்னொருபடி உயர்கின்றது.

### அமைவிடமும் அரங்கும்

சரியாக இன்னமும் ஓர் ஆண்டு இருக்கும்போதே ஒலிம்பிக் 2000க்கான முழு ஏற்பாடுகளும் நிறைவை எய்திவிட்டன. வரவிருக்கும் 2000-ம் ஆண்டு செப்டெம்பர் 15-ம் திகதி விழாக் கோலம் கொண்டு பாரெங்கும் பரவும் செய்தி, சிட்னி ஒலிம்பிக் என்றால் மிகையாகாது. அவுஸ்திரேலியாவின் கோடைகால ஆரம்பத்துடன் ஆரம்பிக்கும் சிட்னி ஒலிம்பிக்கானது கோம்பூஸ் (Homebush) பகுதியை மட்டுமன்றி, சிட்னி நகரையே உலுக்கிவிடப்போகிறது. சிட்னி பெரு நகரிலிருந்து 16 கி.மீற்றரில் உள்ள ஒரு பகுதியான கோம்பூஸ் சில வருடங்களுக்கு முன் எப்படி இருந்தது என்பதையே அடையாளப்படுத்த முடியாதபடி இன்று காட்சியளிக்கிறது. ஒரு காலத்தில் சிட்னியில் கழிவுப் பகுதி என்றால் அது கோம்பூஸ் தான். குப்பை கூழங்கள் கொட்டுவதற்கும் கழிவுகளை எரிப்பதற்கும் என்றே ஒதுக்கப்பட்ட கோம்பூஸ் இன்று நல உலகின் நாகரிகப் பட்டினமாக உருப்பெற்றிருக்கும் நிலைக்கு, வளர்ந்துவரும் தொழில்நுட்பமே காரணமாகும். 40 கெக்டேயர் நிலப் பரப்பு விஸ்தீரணத்தில் அமைக்கப்பட்ட அதி நவீன வசதிகளைக் கொண்ட விளையாட்டு அரங்கானது இதுவரை எந்தவொரு ஒலிம்பிக் போட்டியிலும் பயன்படுத்தப்படவில்லை. 110,000 பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கத் தக்க வகையில் உருப்பெற்றிருக்கும் இந் நவீன அரங்கு இரு இறக்கைகளைத் தாங்கியதுபோல் காட்சியளிக்கிறது. உலகிலேயே இறக்கை வடிவில் கட்டடங்களை அமைத்துப் பிரசித்தி பெற்றிருக்கிறது சிட்னி நகரம் என்பது கூடப் பலருக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும். புத்தம் புதிய கோம்பூஸ் அரங்கானது உட்புற, வெளிப்புறச் சிறப்புகளையும் கொண்டிருக்கிறது. 28 விளையாட்டு அம்சங்களில் அதி நவீன நீச்சல் தடாகம், குழந்தைகளுக்கான விளையாட்டுத்திடல், நீர் விளையாட்டுப் பகுதி என்பன குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவை. ஒலிம்பிக் விளையாட்டுக்கான ஆயத்தங்கள் தவிர வரவிருக்கும் போட்டியாளர்கள், பார்வையாளர்கள் உல்லாசப் பிரயாணிகள் சம்பந்தப்பட்ட விடயத்திலும் முழுக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. தடல்புடலாகக் கட்டப்பட்ட விடுதிகள் பல டசின்களைத் தாண்டியதோடு அதற்குரிய பதிவுகளிலும் நிறைவைக் கண்டுவிட்டன. வீதிகள் மளமளவென்று உருவாகி விரைவுக்கு தயாராகிவிட்டன. அத்தோடு புதிய குடியிருப்புக்களும் நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியாக வளர்ச்சிபெற்று ஒலிம்பிக் நகரமென்றே கட்டியெழுப்பிய உணர்வு கோம்பூஸ்சை பார்த்தவர்களுக்குப் புரிகிறது.





விளையாட்டுக்கள் நடைபெறவிருக்கும் மைதானம்

### புதிய வேலை வாய்ப்புக்களும் வருமானமும்

2000-ம் ஆண்டிற்குரிய ஒலிம்பிக் போட்டியை சிட்னி கோம்பூஸ்சில் நடாத்துவதாக முடிவாகிய பின் ஏற்பட்ட போட்டிக்குரிய ஒழுங்குகளில் 117,000 புதிய தொழில் வாய்ப்புக்கள் பிறந்திருக்கின்றன. இதில் பெரும் பகுதி கட்டடத்தொழில் பற்றியதாக இருந்தாலும் மற்றைய தொழில் வளங்களும் பிரயோகிக்கவேண்டிய நிலை இருப்பதால் அனைத்துத் தொழில்களுக்கும் களம் அமைந்தது. நடைபெறவுள்ள 'சிட்னி 2000' ஒலிம்பிக் மூலம் பெருமளவு அன்னியச் செலாவணி எதிர்பார்க்கப்படுகிறது. அத்தோடு உள்ளூர் உற்பத்திகளும் 1.2 வீதத்தால் உயர்வை நாடியிருக்கின்றன.

ஒலிம்பிக் விளையாட்டுச் சம்பந்தப்பட்ட கட்டட வேலைகளுக்காக மட்டும் 2.288 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்கள் (கிட்டத்தட்ட 115 மில்லியன் ரூபா) செலவிடப்பட்டுள்ளது. இதில் ஒருபகுதி தனியார் கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து பெறப்பட்டன.

### போக்குவரவு ஏற்பாடுகள்

ஒலிம்பிக் போட்டிக் காலப் பகுதியில் அங்கு 50 செக்கன்களுக்கு ஒரு விமானம் பறப்பில் ஈடுபடும் என அறியப்படுகிறது. சுறுசுறுப்பாக இயங்கக் காத்திருக்கும் விமானப் போக்குவரவால் மட்டும் குறைந்த பட்சம் 117,500 பயணிகள் வந்துசேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டுப் போக்குவரவுக்காக விமானசேவை கணிக்கப்பட்ட அதேநேரம், உள்நாட்டுப் போக்குவரத்தில் தொடருந்துகள் பெரிதும் நம்பப்படுகின்றன. தொடருந்து சேவையின் பயனாக 0.9 இலிருந்து 1.8 மில்லியன் பயணிகள் குவியலாம் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை ஒவ்வொரு மணித்தியாலமும் 50,000 பயணிகள் வ்ந்திறங்கக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. சிட்னி நகரின் மையப்பகுதியிலிருந்து ஒலிம்பிக்போட்டி நடைபெறும் கோம்பூஸ்' அரங்கிற்கு விளையாட்டு வீரர்கள் வருவதற்கு ஏதுவாக, 'பரமற்றா' (Paramatta) நதியினூடாக அதிவேக படகுகள் சேவையில் அமர்த்தப்படவிருக்கின்றன. இவ்வளவு போக்குவரத்துத் தேவையற்றதாக்கி மட்டுப்படுத்தப்படுகிறது. இதனால் தரிப்பிடப் பிரச்சினை தானாக ஒதுங்கிக்கொள்கிறது. இருந்தபோதிலும் ஒலிம்பிக்போட்டி முக்கியஸ்தர்களுக்கும், வலது குறைந்தவர்களுக்கும் விஷேட சலுகைகள் வழங்கப்படவுள்ளன.

### சுற்றுச்சூழல் பாதுகாப்பு

1993-ம் ஆண்டு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி பசுமை விரும்பிகளுடன் (Greenpeace) சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பற்றிக் கலந்தாலோசித்துள்ளது. புதிய ஒலிம்பிக் அரங்கில் கூடியளவு சூரிய தொழில்நுட்பமும் பாவிக்கப்படுகிறது. சூழல்' மாசுபடுவதைத் தவிர்க்கும் முகமாக நவீன சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. பசுமை விரும்பிகளுக்கு 70 வீதம் திருப்தியளித்தபோதிலும் நீச்சல் தடாகத்தில் பாவிக்கப்படும் மருந்துப்பொருட்கள் விடயத்தில் அதிருப்தி நிலவுகிறது. நீச்சல் தடாக மருந்துகளில் நச்சுத் தன்மை உண்டெனவும், காற்று மண்டலம் அசுத்தமடையும் என்ற அச்சமும் பசுமை விரும்பிகளிடம் காணப்படுகிறது. ஏற்கனவே அசுத்தம் படிந்த காற்று படிவதால் தோல் வியாதிகள் ஏற்படுகிறது என்ற பீதி அவுஸ்திரேலியர்களிடம் நீண்டகாலமாக நிலவுகிறது.

### ஊழல்கள்

ஒலிம்பிக்போட்டி ஒழுங்கில் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக அறிந்த அவுஸ்திரேலியர்கள் சற்று வெறுப்படைந்தபோதிலும், உலக மக்கள் விளையாட்டு விழாவான ஒலிம்பிக் 2000-ஐ தங்கள் தேசத்தில் மிகவும் வித்தியாசமாக நடாத்த முனைவதையிட்டு ஆனந்த பரவசமடைகின்றார்கள். ஒலிம்பிக் விளையாட்டைப் பொறுத்தவரை அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களும் பெரும் ஆதிக்கம் பெற்றிருக்கிறார்கள். எனவே இவ்விரு நாடுகளுக்கும் அப்பால் பொதுவான இடமாகப் புதிய நூற்றாண்டின் வரவேற்புப்போட்டி சிட்னியில் நடைபெறுவது சற்று வித்தியாசமாக அமையும் என எண்ணத் தோன்றுகிறது.

போட்டி ஏற்பாடுகள் பூர்த்தியாகிவரும்போது நடைபெற்ற ஆரம்பவிழா ஒன்றுக்கான Rugby போட்டி ஒன்றில் 104,000 பார்வையாளர்கள் திரண்டு சாதனை படைத்துள்ளனர். இச் சாதனை ஒலிம்பிக் போட்டியின்போது முறியடிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

'சிட்னி 2000' இன் வெற்றியை எண்ணிக் காலம் கடக்கும்போது அனைத்து வேலைகளும் முற்றுப்பெற்று வருகின்றன. நீண்டகால ஏற்பாடுகளுக்கிடையிலும் ஏதும் தங்குதடை ஏற்படுமானால் அது போக்குவரவு சம்பந்தப்பட்டதாகவே அமையும் என 'Sydney Morning Herald'பத்திரிகை கருத்துத் தெரிவித்திருக்கின்றது. இது வரைக்கும் 5.5 மில்லியன் நுழைவுச்சீட்டுக்கள் விற்பனையாகிவிட்டன.



உதைபந்தாட்டத்திற்கான மைதானம்

— தகவல் K.M.S. ராஜி

# தொலைபேசி அட்டையில் ஓர் புரட்சி மாற்றம்

# France Radja Com

ஸ்தாபனத்தின் புதிய தொலைபேசி அட்டை (Numero Vert இலக்கத்துடன்)
எண்ண முடியாத அளவு நிமிடங்கள் 5 கண்டங்களுக்கும் அள்ளி வழங்குகின்றார்கள்!

## இதோ 5 கண்டத்தின் சில நாடுகள்!!










## இலங்கை 45

மனதில் இருப்பவற்றை உறவினர்களுடன் நீண்ட நேரம் பேசவேண்டும் என்ற ஆவல். ஆனால், Numero Local இல் விரயமாகும் பணச் செலவை நினைக்கும்போது அந்த எண்ணம் காற்றாக மாறிவிடும்.

**இனிமேல் அந்தப் பயம் வேண்டாம். இதோ!**

இப்போதே ஒக்டோபர் 5 முதல் உங்கள் கரங்களில் உங்கள் உறவினர்களுடன் எந்த நேரமும் ஒரே செலவில் (N° Vert) உறவாட உங்கள் இல்லம் தேடி வருகின்றது RADJA COM ஸ்தாபனத்தின் புதிய தொலைபேசி அட்டைகள்.

*Lyon, Marseille, Toulouse, Bourdeaux* போன்ற இடங்களுக்கு விநியோகஸ்தர்கள் தேவை. தொடர்புகளுக்கு:

# RADJA COM

**4, Rue Caulain Court, 75018 Paris.**
**Tel: 01 44 90 06 10**
**Fax: 01 44 90 06 59**
மேலதிகத் தொடர்புகளுக்கு: *Mob: 06 14 32 23 44*

| Destination | N° Vert |
|---|---|
| Algerie | 77 |
| Argentine | 35 |
| Bangladesh | 40 |
| Benin | 32 |
| Canada | 105 |
| Chine | 62 |
| Egypte | 40 |
| France | 110 |
| Ghana | 45 |
| Guadeloupe | 40 |
| Guinee | 45 |
| Haiti | 45 |
| Inde | 43 |
| Mali | 42 |
| Maroc | 75 |
| Martinique | 42 |
| Nigeria | 40 |
| Pakistan | 42 |
| Phillipine | 45 |
| Portugal | 60 |
| Senegal | 41 |
| Sri lanka | 45 |
| Taivan | 60 |
| Tunisie | 76 |
| USA | 130 |
| Vietnam | 32 |

# ஜே.என்.டிக்ஸிற்றின் வாக்குமூலம் 5

**'அசைன்மென்ட் கொழும்பு' என்ற நூலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டது.**

இந்தியாவின் கவனத்தை மேலும் உற்று நோக்கச் செய்தது. அத்தோடு தமிழ்நாட்டின் மக்களின் அபிலாசைகளை மனதில் கொண்டு, இந்தியா, ஜெயவர்த்தனா அரசுக்கு மேலும் கடும் அழுத்தங்களை உபயோகிக்கத் தொடங்கியது. அடுத்ததாக அன்றைய இந்திய ஜனாதிபதி திருவாளர் சஞ்சீவி ரெட்டியினதும், இந்தியப் பிரதம மந்திரி மொறாஜி தேசாயினதும் ஒருமித்த மனிதாபிமானக் கொள்கைகளுக்கும், சிறீலங்கா ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடைய கொள்கைகளுக்கும் இடையே பற்பல வேற்றுமைகள் அமைந்ததன் காரணத்தால் இரு நாட்டு உறவுகளில் தாக்கங்கள் ஏற்பட்டது என்பது தெளிவு.



திரு. ரெட்டி அவர்களும், திரு. தேசாய் அவர்களும், 1970 பிற்பகுதியில் ஓர் நல்லெண்ணக் குழுவாகச் சிறீலங்காவிற்குச் சென்றார்கள். மேற்கண்ட இவ் இருவரும், நல்ல அறிவாளிகளாக இருந்தபோதிலும், திருமதி இந்திராகாந்திக்கு எவ்வகையிலும் கட்டுப்பட்டவர்கள் அல்லர். அப்படிப்பட்டவர்கள், திரு. ஜெயவர்த்தனாவைச் சந்திக்க வந்தது, இரு நாடுகளில் உள்ள வேற்றுமைகளைக் களைந்து, மேலும் ஒற்றுமைகளை வளர்ப்பதற்கேயாகும். இம் மூவரது ஒன்றுகூடல் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், இந்திரா அம்மையாரைப் பற்றிய சில அவதூறான குற்றங்களும், இந்தியாவிற்கு இந்திராகாந்தி அம்மையார் ஆளத் தகுதியற்றவர் எனவும் திரு. ஜெயவர்த்தனா கூறியது இரு இந்தியர்களையும் வேதனைக்குட்படுத்தியது. அத்துடன் இவ் ஒன்றுகூடலில் நடைபெறும் விடயங்கள் யாவும், உடனுக்குடன் இந்தியாவுக்கு அறிவிக்கப்பட்டது. இதன் காரணங்களினால்தான் இந்திய/சிறீலங்கா நிலையில் மேலும் கொந்தளிப்பு ஏற்பட்டது என்பது உண்மைக்குப் புறம்பானதல்ல. இருந்தபோதும், இந்திரா அம்மையார்/சிறீமாவோ அம்மையார் ஒற்றுமை மேலும் இருந்தது என்பதும் தெளிவு. இதன் ஆரம்பகட்டமாக இந்தியா, சிறீலங்கா தமிழ் கட்சிகளுக்கும், போராளிகளுக்கும் 1980 முதல் ஆதரவு கொடுக்கத் தொடங்கியது.

இவை பற்றி சென்ற 9 வருடங்களாக பற்பல ஏடுகள், சஞ்சிகைகள் உலகெங்கிலும் வெளிவந்தது தெரிந்ததே! 1983 தமிழர் / சிங்களவர் கலகத்தின் சிற்பிகளில் ஒருவர் ஜெயவர்த்தனா என்பதும், அவரது அன்றைய அரசும் என்பதும் எல்லோருக்கும் தெரியும். திரு. ஜெயவர்த்தனாவின் முக்கிய கரங்களாக, பிரதம மந்திரி பிரேமதாசாவும், சிறீலங்காப் பாதுகாப்பு மந்திரி, அத்துலத் முதலியும் இருந்தார்கள் என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி'. திரு. அத்துலத் முதலி 'ஒக்ஸ்பேட் பல்கலைக் கழகத்தில்' படித்தவர். சிங்கப்பூர், இஸ்ரவேல் போன்ற நாடுகளில் சட்டம் கற்பித்தவர், நிதானமான கொள்கைகள் இல்லாதவர், பட்டம் பதவிக்கு அதிமோகம் கொண்டவர், தமிழ் இனத்தை வருத்துவதே அவருக்கு இன்பத்தைக் கூட்டும், போன்ற குணங்களை உடையவர் எனக் கூறிக்கொண்டே போகலாம். திரு. பிரேமதாசா என்பவர் காந்தியக் கொள்கைகள், எல்லா இனங்களும் ஒன்றாக வாழவேண்டும் என்று வெளியில் கூறிக்கொள்ளும் சுபாவமும், ஆனால் உள்ளால் சகல தீயவளிகளுக்கும் தூண்டுகோலாக இருந்தவர். இவர் இலங்கையில் தமிழருக்கு ஓர் தேசம் அமைவதை விரும்பாதவர்.

சிறீலங்காத் தீவில் தமிழ் இனத்திற்கு நடைபெறும் அழிவுகள், தீமைகள், கொடுமைகளை அவதானித்த திருமதி இந்திராகாந்தி அம்மையார், தனது பொறுமையை இழந்து உடனடியாக ஓர் அறிக்கையை சிறீலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தார். அவ் அறிவித்தல் 26.07.1983ல் அன்றைய வெளிநாட்டு அமைச்சர் திரு. நரசிம்மராவ் மூலமாக ஜெயவர்த்தனாவின் முக்கிய பொறுப்பதிகாரிக்குக் கொடுக்கப்பட்டது. இத் தருணத்தில் சிறீலங்கா இராணுவத்திற்கும், தமிழ் போராளிகளுக்குமிடையே மேலும் மேலும் பிரச்சினைகள் அதிகரித்துக்கொண்டே சென்றது. கிழக்குத்திசை வெளிவிவகார அமைச்சர் காரியாலயம் இந்நாட்டுச் செயல்களை அவதானித்துக்கொண்டே இருந்தது. திருமதி காந்தி அவர்கள் இந்நிலையைத் தணிக்க திரு. நரசிம்மராவை, திரு. ஜெயவர்த்தனாவைச் சந்திக்க ஏற்பாடுகள் செய்தார். இச் சந்திப்பு சுமூகமாக முடிந்ததன் பிற்பாடு, திரு. நரசிம்மராவ் சிறீலங்காவின் பிரதம மந்திரி பிரேமதாசாவைச் சந்திக்க விரும்பி உத்தியோகபூர்வ அனுமதி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. திரு. ராவ் அவர்கள் கொழும்பு வருவதற்கு, பிரேமதாசா



முன்பு—திரு. ராவுக்கு பற்பலவிதமான சிக்கல்களையும் நிதானமற்ற பேச்சுக்களையும் ஏற்படுத்தினார் என்பது எல்லோருக்கும் தெரியும்.

திரு. ராவ் அவர்கள் பிரேமதாசாவின் இடத்துக்குச் சென்றசமயம், அவரை கௌரவித்து, ஒருவரும் வரவேற்காமல், சுமார் இருபது நிமிடம் வரை வெளிமண்டபத்தில் காக்கவைத்து, அவமதித்த செயல் சிறீலங்காவிற்கு ஓர் பெரிய அவமானமாகக் காட்சி அளித்தது. இவை யாவும் பின்பு இந்தியாவிற்குத் தெரியவந்தது.

திரு. ராவ் அவர்களின் இவ் விஜயம், இந்தியா சிறீலங்காவிற்கு உதவிகளை மேலும் செய்ய ஓர் புதிய அத்தியாயமாக விளங்கியது. சில சுயநலம் கொண்ட அரசியல்வாதிகளும், சிங்களப் பார்வையாளர்களும், இந்தியா தேவையற்று சிறீலங்காவின் உள்நாட்டுப் பூசல்களுக்குள் ஊடுருவித் தன்னைத்தானே புகழ்ந்து கொள்கின்றது என்று கூறினார்கள்.

தொகுப்பு:
சி.சொக்கநாதன் பிரான்ஸ்

(வளரும்)

# தமிழர் நடந்த பாதை

## 11

## ஆத்திரேலியாவில் வாழும் குமரித் தமிழ்

தமிழோடு உறவுடைய பிராகுயி மொழி, மைய ஆசியாவை ஒட்டிய ஆப்கானிஸ்தான், ஈரான் பகுதிகளிலும் வழங்குவதை ஒட்டி வரலாற்றறிஞர்களும் கால்டுவெல் போன்ற மொழிநூல் அறிஞர்களும் தமிழ் தோன்றிய இடமாக மைய ஆசியாவைக் கருதினர்.

கி.மு. 5000 காலம் சார்ந்த எகிப்திய நாகரிகமே கி.மு. 3000 காலம் சார்ந்த சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் மூலம் என்றும் அச் சிந்து சமவெளி நாகரிகத்தின் வழி நாகரிகமே இன்றைய தமிழ் நாகரிகம் என்றும் அறிஞர்கள் கருதுகின்றவற்றை எல்லாம் தவறென்று தலைகீழ் வரலாறு என்னும் தலைப்பில் முன்னர் விளக்கியிருந்தோம்.

இந்தியாவைத் தாண்டி இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் தமிழின் கூறுகளைக் கண்ட வரலாற்று அறிஞர்களும் மொழி அறிஞர்களும் தமிழின் தொடக்கத்தை அங்கே காண முயன்றது முற்றிலும் தவறானது என்பதை நாம் நம் தொடரில் பல இடங்களிலும் விளக்கவே உள்ளோம். அத்தகைய போக்கில் ஒன்றே ஆத்திரேலியாவில் வாழும் குமரித்தமிழ் என்னும் இப்பகுதி காட்டும் செய்தியாகும்.

குமரிகண்டத்தில் பஃறுளியாறும் பன மலை அடுக்கமும் நிறைந்த அகன்ற நிலப் பரப்பில் தமிழ் தோன்றியது. தமிழினம் தோன்றியது என்னும் கருத்தினைப் பெரும்பாலான அறிஞர்கள் ஏற்பதில்லை. ஆத்திரேலியாவிலும் ஆப்பிரிக்காவிலும் வாழும் பழங்குடிகளின் மொழிகளில் ஏராளமான தமிழ்ச் சொற்கள் வழங்கி வருவதையும் இவ்விரு பழங்குடிகளின் பண்பாட்டுப் பழக்க வழக்கக் கூறுகளில் ஏராளமான தமிழ் நாகரிகக் கூறுகள் பொருந்தியிருப்பதும் எதன் அடிப்படையில் ஏற்பட்டிருக்கவேண்டும் என்பதை மேலைய அறிஞர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. ஒட்டு மொத்தத் தமிழ் வரலாறே இந்தப் புதிரை உடைப்பதில் அடங்கியுள்ளது.

கடலுள் மூழ்காமல் இருந்த குமரிக்கண்டத்தின் நெருக்கமான தென்கீழ்ப்பகுதியாக ஆத்திரேலியாவும் தென்மேற்குப்பகுதியாக ஆப்பிரிக்காவும் விளங்கிய காரணத்தால் தான் இவ்விரு பகுதிகளிலும் வாழும் பழங்குடி மக்களிடையே தமிழ்க்கூறுகளும் தமிழ் பண்பாட்டுக் கூறுகளும் நிறைந்திருப்பதற்குக் காரணமாயின என்றால் அதில் சிறிதும் மிகையில்லை.

சேம்சுகுக் (James Cook) என்னும் ஆங்கிலக் கப்பல் படைத்தளபதியால் 1770 இல் காணப்பெற்று 1788 இல் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட நாடே இன்றைய ஆத்திரேலியாவாகும். இந்நாடு ஆங்கிலேயர் வருமுன் அங்கிருக்கும் பழங்குடி மக்களுக்கே முழுச் சொந்தமாகும்.

இந் நாட்டில் வாழும் பழங்குடி மக்கள் 250 வகையான மொழிகளைப் பேசுவதாக அறிஞர்கள் கூறுகின்றனர். ஆயினும் இவை தம்மிடையே இருக்கும் ஒப்புமை அடிப்படையில் 26 குடும்பங்களாக அடங்கும் எனவும் அறிஞர்கள் எழுதியுள்ளனர்.

நிக் தீபெர்கர் (Nick Thieberger) வில்லியம் மாக்ரிகோர் (Willam McGreagor) ஆகிய அறிஞர்கள் இருவரும் பதிப்பித்த (1994) ஆத்திரேலியப் பழங்குடிகளின் மொழி பற்றிய அகராதி கொண்டு அவற்றிடையே விரவிக்கிடக்கும் தமிழ்க்கூறுகளை யாம் விரிவாகத் தொகுத்துள்ளோம். இவ்வகராதியும் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் அனைத்து மொழிபெயர்ப்பும் பதிப்பித்துள்ளதென்று பதினேழு பழந்திராவிட பழங்குடியினரின் மொழியியல் பற்றி மட்டுமே இத்தொகுப்பு அமைந்துள்ளதாகப் பதிப்பாசிரியர்கள் எழுதியுள்ளனர்.

ஆத்திரேலியத் தீவு எப்பொழுது குமரிக் கண்டத்தோடு தொடர்புடையதாக இருந்ததென்பதும் எப்பொழுது எக்கால கட்டத்தில் குமரிக்கண்டத் தமிழர் ஆத்திரேலியத் தீவிற்குள் சென்று புகுந்தனர் என்பதும் சொல்ல முடியா காலப்பழமையைச் சார்ந்ததாகவே தெரிகிறது.

**இனி சில தமிழ் வழக்குகளை உள்நோக்குவோம்.**

| தமிழ்நாட்டுத் தமிழ் | ஆத்திரேலியத் தமிழ் |
|---|---|
| அப்பா-தந்தை | Pappa-Father |
| அரத்தம்-குருதி | afkuga-blood |
| உகிர்-கைகால் நகம் | Yulu-nail af finger |
| ஊதை-குளிர்காற்று, குளிர்காலம் | Wathara-wind kudlille-rainy season,winter |
| எல்-சூரியன் | Walu-time day-sun |
| கட்டை-மரக்கட்டை | katta-heavy stick to fight with club gadle-fire, fuel, wood |
| கழி-மரக்கட்டை | Garli-boomerang |
| கலம்-சிறுபடகு | Galwaya-canoe |
| கரி-கருநிற நஞ்சு, கருமை நிறம் (கார்பன் என்னும் கரி சாராயத்தில் சேர்க்கப்படும்) | gan-poison aiconol |
| கருப்பு-கரிய நிறம் | Kob-black |
| கணை-கூரிய ஆயுதம் | ganay-digging stick |
| கனல் -நெருப்பு | Karl-fire |
| கரம்-கை | Yikere-hand |
| களம்-கழுத்து, தொண்டை | Yalayn-throat,neck |
| காது-உடல் உறுப்பு | wutha-ear |
| காற்று-காற்று | yadu-wind gale |
| காக்கை-காகம் | wagahu-crow |
| காளான்-காளான் | ngalangala-murhroom |
| கிழவன்-முதியவன் | gidhuhm-old man Gidhuium |
| குருதி-அரத்தம் | Kurrk-red (literally having the colour of blood) karro-blood |
| குடிசை-சிறுகுடில் | kulyi-hut,humpy |
| குய்-தாளிப்பு | guyba-to cook, to bum |
| கொப்பூழ்-வயிற்றுப்பகுதி | Kopurl-stomach |
| ஞாயிறு-சூரியன் | nyaui-sun |
| தாலம்-நாக்கு | thalay. dalang dhalayh-tongue |
| தீயர்-தீங்கு செய்பவர் | tyrr,tyrr-splrlt (of dead person) |
| தூர்ப்பணம்-துளையிடு கருவி | thum to speer prerce prick |
| தூம்பு-துளை,நீர் ஓடும் இடம் | thumpl-deep water hole, permenent water irack fiat orint vytug-Exyef thukaay-really a lot |
| தொடை-கால் உறுப்பின் மேற்பகுதி | tharra tyal-thigh |
| தொழுதி-சேறு, சகதி | dholu-mud |
| நெற்றி-உடல் உறுப்பு | nihr-forehead |
| பந்தல்-கட்டப்பட்டது | Pantali-to tie |
| படகு நீரில் செல்லும் கலம் | bagul-cance |
| பிறை-இளநிலா | pire-moon |
| பிள்ளை(புள்ளெ பேச்சுவழக்கு சிறுவன், சிறுமி) | purraay-child, son, daughter |
| புருவம்-கண்ணின் மேற்பகுதி | pilpe-eyebrow |
| புழுதி-கோடை காலத்தெழும் மண்துகள் | putharra-dust storm, pytyl, putyl-hot weether time |
| புகை-புகை | buyu. buya,buyi. buwi- smoke buku-rangu dark |
| மலை-மலை | muli-hill,ridge |
| மணல் -மணல் | manal manaldhall-beeudesen |
| மணல்வெளி-பாலை நிலம் அழகான பாலை | |
| மதி-நிலா, மாதம் | mlthiyen-moon,month |
| மதியம்-முழுநிலா | mrriyanada-full moon |
| மழை-மழை | mahana-rain |
| மாமன்-மாமன் | mahman-father, uncle |
| மின்னல்-மின்னல் | mungi-lightning |
| முகம்-முகம் | mulha-frce.nose |
| முழை-குகை | mirrka-cave |
| முணிதல்-முடைதல் | Muni-to tie munipolice man (literally to the up) |
| மூக்கு-மூக்கு | Muruh,muru-nose |
| மெழுகு-தேனடை | muyl-bees wex |
| மேகம்-முகில் | makka dagam-cloud |
| மையல்-மயக்கம் அறியாமை | mayaal-incompetenl Ignorant |
| வரை-மலை | bargu-hilli |
| வலியன்-பருந்து | maliyan-eagle hawk |
| வலை-வலை | gulay-net for fishing or for trapping animals in a narrow pass. |
| வரணம்-கடல் | wadam-sea |
| விழி-கண் (முழி, முயி-உலக வழக்கு) | mal, mil, milki. myi-eye |
| விரல்-கை` உறுப்பு | mara-hand. finger, five |

டாக்டர் கால்டுவெல், தமிழின் தொல் பெரும் பழைமையை அதன் இலக்கிய ஆட்சிகளைத்தாண்டிச் சுட்ட விழைந்தார். அதற்கு அவர் ஹீப்ரு மொழியில் புழங்கும் தோகை என்னும் தமிழ்ச் சொல்லின் 'துகி' வடிவத்தைக் கண்டெடுத்துச் சாலமன் காலமான கி.மு. 1000 என்றார்.

மேற்சுட்டிய பலப்பல ஆத்திரேலியர் தமிழை எண்ணினால் தமிழை எத்தனை ஆயிரம் ஆண்டுகளின் முன் தோன்றிய மொழி என்று சொல்வது!

பேரா.கு.அரசேந்திரன்

(வளரும்)

# வீரம் விளைக்கின்ற வீரர்களை மனத்தெண்ணுகின்றோம்



தென்னை இளநீரும்
செவ்வலரிச் சிறு பூவும்
கண் மலர்த்தி வேம்பு
காய் பழம் தருகிறது.
கத்தரியும் வெண்டிக்கன்றும் பூக்கிறது.
சட்டிக் கரணை தழைக்கிறது.
இந்தமண் அழகோடு
இன்றும் தான் இருக்கிறது.
எந்தத்துயர் வரினும்
இனிக் கலக்கம் கொள்ளாது
ஆழக் கிணறு, ஆடுகால் பூவரசு
நீளக் கிடக்கின்ற நெல்வயல்கள்
உள்ள மட்டும்
காலில் விழுந்து எவர்க்கும்
கைகட்டி நிற்காது.

கைகட்டி நிற்பதற்கான வாழ்வை இனிக் காலம் சொல்லாது. பொய்யிலேயா புரண்டோம்? புழுகிலேயா வளர்ந்தோம்?

மெய்த் தீயில் உயிர் சுடர்ந்தல்லவா
மேனி சிலிர்த்தோம்.

ஆதலினால் ஆர்க்கும் அஞ்சோம். அவனி வெல்வோம். மண்மீது கொண்ட காதலினால் நாம் களிப்புக்கொண்டோம். காவியம் செய்வோம். சாதலைத்தான் சந்திக்க நேரிடினும் சரித்திரம் படைப்போம்.

சாவிலும் சரித்திரம் படைத்த காவிய நாயகன் கதை நாம் கூறுவோம். உயிர் காவி ஓடி ஓடி ஒளிந்து வாழ்வை மேவிய வகைஅல்ல. சாவை, புன்கையுடன் எதிர்கொண்டு போருக்குப் புறப்பட்ட வெற்றி வீரனது விடுதலை வரலாற்றை நாம் பாடுவோம்.

போருக்குப் போனவன்-புறமுதுகிட்டு ஓடியவன் அல்ல- போரில் உடல் வெந்தான். குடல் சுருங்கினான். களத்தில் நின்றோர் அதன் கதை, அவன் கதை அறிவர்.

ஆயுதம் தூக்கியவன்—அதற்கு அவன்
அஞ்சியதில்லை. ஆனால் அகிம்சையில்தான்
அவனை நாம் இழந்தோம். அது ஒரு பெரும் கதை.

செம்மண் புழுதி-சிவந்த இரத்தம் போன்ற மண்- செம்பருத்தி பூத்திருக்கும்-சேறாய்ப் பூமி கிடக்கும். தோட்டம்-தொலை தூரம் எங்கு திரும்பினும் தோட்டம். ஆங்காங்கு குடில்கள் -பிறகு கல்வீடுகள். அதை அண்டி 'பொயிலைக் கொட்டில்! தோட்ட வெளியில் வாழைத்தோப்பு, சருகாய் வாழைகள், பச்சையாய் வாழைகள், குலைதள்ளிய வாழைகள். மதர்த்து நின்ற வாழைகள். தோட்ட வெளி முடியுந்தறுவாயில் பனந்தோப்பு நெடிதுயர்ந்து நீண்ட பனைகள். நேரான பனைகள்.

நிலம் நோக்காப் பனைகள்

நம் மக்களைப் போன்றது அது! உழுவதற்கு என்ன பஞ்சி? உழைப்பதற்கு என்ன பஞ்சி. ஒரு நிமிடம் ஓய்ந்ததில்லை. உறங்கும் நேரம் அன்றி உழையாத நேரம் இருந்ததில்லை. ஒய்வறியாக் காரணத்தால் பாய் விரித்துப் பகற் போதில் படுத்ததில்லை.

மாடுமோ செத்தல் மாடு
வண்டிலுமோ ஒட்டை வண்டில்
மாடிழுக்கமாட்டாமல்
தானிழுத்து மாய்கிறாண்டி உன் புருஷன்

இந்தப் பாடல் நீங்கள் கேட்டதுண்டா? எம் மண்ணின் மகனைப் பார்த்துப் பாடப்பட்ட பாடல் இது.

ஒட்டை வண்டி, செத்தல் மாடு இத்தனையும் வைத்து ஓட்டுவார்கள் நம் மக்கள்- உடலிலும், உள்ளத்திலும் அத்தனை-வலிமை கொண்டவர்கள் அவர்கள்.

அதனால்தான் இதுவும் வலியதாய் இருந்தது.
எந்தக் காரியம் செய்யினும் அந்தக்
காரியத்தில் அத்தனை ஆழம் இருந்தது.
அந்தக் காரியத்தில் அத்தனை செறிவு இருந்தது.
அந்தக் காரியத்தில் அத்தனை வீறாப்பு இருந்தது.
அந்தக் காரியத்தில் அத்தனை ஓர்மம் இருந்தது.

ஆயுதம் தூக்கிய வேகத்தில் அதனை நாம் பார்த்தோமே! தூக்கிய ஆயுதம் கீழே வீழ்ந்ததில்லை. வீழுமுன் இன்னொருவர் கை அதைப் பற்றியது.

ஆயுதம் தூக்கியது கைகள் மாத்திரம்தானா?

ஓர்மம் தூக்கியது—வீறாப்பு தூக்கியது.
வலிமை தூக்கியது—உறுதி தூக்கியது
விடாப்பிடி தூக்கியது— நெஞ்சுரம்
தூக்கியது
விட்டுக் கொடுக்காத் தலைமை தூக்கியது.

அதனால்தானே அனைத்தும் வெற்றி என்னும் சொல்லில் வந்து நின்றது. தோல்வி எனும் சொல் தவிர்க்கப்பட்டது.

வெற்றி என்றாலும் சும்மா ஒரு வெற்றியா?
இமாலயா வெற்றியும் அல்ல; அதற்கு மேலும்
இன்றும் கண்டுபிடிக்கப்படாத சொல்லினால் கூறத்தக்க
வெற்றி அல்லவா?

எந்த மண்ணில் இது விளைந்தது-எந்த வாழ்வு இந்த வைரத்தைக் கொடுத்தது- எந்த வளம் இதற்கு உரம் சேர்த்தது? எதனால் இப்படி எல்லாம் நேர்ந்தது?

நமது மண்ணின் வலிமை—நமது மக்களின்
உழைப்பு—நமது நிலத்தின் உறுதி—நமது நீரின் உரப்பு
இவையல்லால் இந்த வலிமை வேறு எவை தந்திருக்கும்?
இவையல்லால் இந்தச் செழுமை வேறு எவை தந்திருக்கும்.

அதனால்தான் அகிம்சைப் போரிலும் அதிக வலிமை காட்டமுடிந்தது—ஆயுதம் இயங்குமா—அகிம்சையிலும் வலியபோரை அது வழங்குமா?

## காலத்தைப் பதிவுசெய்து மாயோன் எழுதுவது

இயங்கும், வழங்கும்-என்று அது உலகுக்கு எடுத்துக்காட்டியது.

ஒரு கேள்வி—ஒரே ஒரு கேள்வி—மண் பற்றிக்
கூறினோமே—மக்கள் பற்றிக் கூறினோமே.
மண்ணினதும், மக்களினதும் வலிமை, பெருமை, ஓர்மம்,
உரப்பு, வீரம், வீறாப்பு என்றெல்லாம் எடுத்து
ஓதினோமே—முன்னரும் இதே மண்ணும், இதே
மக்களும்தானே இருந்தன, இருந்தனர். அப்போது இதே
அகிம்சைப்போர் ஆற்றல் வாய்ந்தது
வெளிப்படவில்லையே!

வெளிப்படவில்லைத்தான்-அதற்கு வேறு காரணம்-தக்க தலைமை இல்லை; வழிகாட்டும் தலைமை இருக்கவில்லை. முனைப்புடன் முன்னெடுக்கும் தலைமை இருக்கவில்லை. எதையும் முடித்து வைக்கும் ஆற்றல் வாய்ந்த தலைமை இருக்கவில்லை. உறுதியும், விடாப்பிடியும், நெஞ்சுரமும் மிக்க தலைமை இருக்கவில்லை.

விடுதலை மூச்சை வீறாப்புடன் உள்வாங்கிய தலைமை இருக்கவில்லை.

இருந்த தலைமையோ —இங்கொரு பேச்சு—
அங்கொரு பேச்சு. தமிழ் நிலத்தில் விடுதலை தாம் தம்
மூச்சென்பார்—வாக்குகள் வாங்குவார். வெற்றி
கிடைத்தவுடன்—வேற்று நிலம் சென்று விருந்துண்டு
மகிழ்வர்—தம் வளம் பெருக்குவர்; வசதி பெருக்குவர்.
தம்மை நம்பிய மக்களை தப்பாமல் கைவிடுவர்—
துரோகம்—நம்பிக்கைத்துரோகம் செய்ய சிறிதும்
நாணப்படார்.

ஆனால் இப்போதெனில் அவ்வாறு அல்ல- இதனைச் சொல்வதற்கு வல்லமை மிகுந்த வாய்வேண்டும்-பன்னீரில் கொப்புளித்துவிட்டுச் சொல்லும் பக்குவம் வேண்டும். அத்தனை உன்னத தலைமை-உறுதி மிக்க தலைமை- வீரம்மிக்க, வீறாப்பு மிக்க, விட்டுக்கொடுக்காத்தலைமை!!

இந்தத் தலைமையை நம்பி இவன் எழுந்தான்.
அகிம்சைப் போர்—ஆற்றல் மிக்கது என்று ஒரு கூட்டம்
சொன்னது—ஆயுதம் தூக்கப்பயந்தோர் அதனைச்
சொன்னார்கள். அது வேறு—அதனையே வலிமை என்று
நம்பியோரும் அதனைச் சொன்னார்கள். ஆனால், இந்த
இடத்தில் இதுதான் இயலும். இதை விட்டால் வேறு வழி
இல்லை என்று நம்பிய தருணங்களிலும்,
அகிம்சைப்போர் ஆயுதமானது.

அப்படி ஒரு சூழல். அவ்வாறான ஒரு நிலைமை. 1987 செப்டெம்பரில் உருவெடுத்தது. உரும்பிராய் சிவகுமாரனைப் பெற்றபூமி-அதன் அயலூர்-அடுத்த ஊர்-ஊரெழு. ஊரெழு பெற்ற புதல்வன்-ஒருவன் அவனால் அகிம்சைப்போர் ஆற்றல் பெற்றது.

அகிம்சைக்கு ஒரு தந்தை இருந்தார்—
மகாத்மாகாந்தி—அவரது பெயர்—அகிம்சையைப்
பேச்சாய், மூச்சாய் கொண்டவர். அகிம்சையைப்
போதித்தவர்—அகிம்சையே ஒரே வழி என்றவர்—
அகிம்சையினால் இந்தியா சுதந்திரமடைந்தது
என்று நம்பியவர். ஆனால் அகிம்சைப் போரில்
அவர் காலமாகவில்லை. கோட்சேயின் ஆயுதமே
அவர் உயிரைக்காவு கொண்டது.

ஆனால் இவனோவெனில், ஆயுதப்போரைத் தனது வழிமுறையாகத் தெரிவு கொண்டவன். ஆயுதப்போரில் அரசியற் பொறுப்பாளராய் இருந்தவன். ஆயுதம் தூக்கிப் போரிட்டவன். களத்தினில் காயப்பட்டவன். ஆனால், அகிம்சைப் போரில் அவன் வீரமரணமடைந்தான்.

அது மகா கடினமான செயல்—அணு அணுவாக
உயிர் போய்க்கொண்டிருந்தது. குண்டுபட்டு அதோ
என்று உடன் சாவு அல்ல. பாம்பு கொத்தி நீலம் பாரித்த
விரைவு மரணம் அல்ல.

நோயில் இருந்து ....விழுந்த மரணம் இதுவல்ல. பாயில் இருந்து பாடையில் ஊர்ந்த கதையல்ல. ஒருபோதும் ஆகாரமின்றி,

அதுமாத்திரமல்ல ஒரு சொட்டு நீரின்றி
சில நாள் இருந்து உயிர் நீக்கிய செயல்..
இது மகத்தானது; மனிதர்களால் செய்ய முடியாதது
எந்த மனிதரும் இதுவரை செய்யாதது.
தியாகங்களுக்கென்று சில தீர்மானங்கள் இருக்கின்றன.
இது தீர்மானமே இல்லாத் தியாகம்.

அகராதியைப் புரட்டிப்பார் – அங்கு
தியாகத்தின் பொருள் திலீபன் என்றிருக்கும்.
அல்ல, தியாகத்தின் அம்பால் தீரமிக்க
செயலின் பொருள் திலீபன் என்றிருக்கும்.

அந்த நாட்களைப் பார்க்கிறோம்—அந்தஇறுதி
நாட்களைப் பார்க்கிறோம்—நல்லூர் வீதியெங்கும்
நாலாபுறமும் நம்மக்கள். பொல்லாக் கொடுமையை
எதிர்த்துப் போருக்குப் புறப்பட்ட மாவீரன் மரணத்தின்
வாசலை நெருங்கும் காலத்தில் அவன் காலடியில் தம்
கண்ணீர் கரைக்க நம்மக்கள்.

நல்லூர் இராசதானியில் நம் ஆட்சி நடந்தது ஒருக்கால், அதன் பின் நம் ஆட்சி நடத்தத் துடியாய்த் துடித்த ஒருவன் தன் கனவு நிறைவேற காலனை அணைக்கும் காட்சியின் காவியம் காண நம்மக்கள்

அந்தநாள் வந்துவிட்டது.

புரட்டாதிச் சனி-கறுப்பாய்க் காகங்கள் கரையும்-கடும் வெய்யில் இருக்காது மப்பாய் நாட்கள் நகரும்- புரட்டாதிச் சனி மதியத்தில் காக்கைக்கு உணவு ஊட்டுவோம்.

உணவு உண்டால்தான் பிறகு சாப்பிடுவோம்

ஆனால் ஒருவன் உண்ணாது சாகக் கிடந்தான்.
மக்களுக்காக அப்படி இருந்தான்.
அவன் 1987 செப்டெம்பர் 26—ம் திகதி

அது ஒரு புரட்டாதிச் சனி நாள்-அந்த நாளில் அவன் வீர மரணமடைந்தான்.

ஆனால் நாங்கள் காகம் சாப்பிட்டதா என்று பார்த்துவிட்டுச் சாப்பிட்டோம்.

எல்லோரையும் கூறாவிட்டாலும், வெகு சிலர்
அப்படிச் செய்தார்கள்.

அவன் வாழ்வும், அவன் மரணமும்
எங்களுக்குத் தந்த செய்திகள் அதிகம்.
இப்போதும் நரம்பினிடைத் துடித்தெழ வைக்கும்
உயிர்ப்பும், உணர்வும், உரப்பும் அவன் தந்தவை.

நெருப்புக்குள் நின்றும் நிமிர்ந்தோம்
இருப்பிழந்து போகாமல்
இன்னும் இருக்கின்றோம்
பெருமைப் படுகின்றோம்.
தேகம் புல்லரிக்க நின்றாடுகின்றோம்.
தொழுது எம் மண்மீது தொடுகின்றோம்
ஒத்திக் கண்ணில் வைக்கின்றோம்.
புழுதி மண்ணாணாலும்
புரண்டு விழுந்தெழும்புகின்றோம்.
தாயை நிகரெங்கள்
தாயகத்தைக் காதல் செய்கின்றோம்
வாயால் புகழ்ந்தேற்றி வாழ்த்துகின்றோம்
இம்மண்ணில்
வீரம் விளைக்கின்ற வீரர்களை
மனத்தெண்ணுகின்றோம்
தியாக தீபத்தின் திருவடி எண்ணி
வாழ்த்துகின்றோம்
வாயார வணங்குகின்றோம்.

NÆRKØB -DKS Video
Danmark பதறேஸ்சியா
மாநகரில் (Nærkøb) நியர்குப்ப் DKSVideo
ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்
இடமாற்றம் 01.09.99 முதல் NÆRKØB ரவல்ஸ் கு Mony Exchence
புதிய முகவரி
NÆRKØB ரவல்ஸ் 5
Vestcenter, Venvsvej-10, 7000 Freclericia, Danmark.
தொலைபேசி: 75915840 -75915841 / Fax: 75915842

Nærkøb Travels®
Nærkøb Tvavels புதிய நவீன படுக்கை வசதிகள்
கொண்ட பஸ்சேவை - வாரம் 3 நாட்கள்

| | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark - London- | 540Kr | 890Kr |
| Danmark - Paris | 358Kr | 574Kr |
| Danmark - Hambvrg | 205Kr | 327Kr |

இலையுதிர்கால மலிவு பயணச்சீட்டுகள் October கடைசிவரை
பாரிஸ் சென்று அதே பஸ்சில் திரும்பிவர 398 Kr மட்டுமே
பிரான்ஸ் நாட்டில் இருக்கும் டிஸ்னிலாண்ட்
(Disnny Land Paris) சென்று திரும்பிவர 6.78 Kr மட்டுமே
2 வயதிற்குமேல் 12 வயதுக்குட்பட்டவருக்கு 598 Kr மட்டுமே
உடன் தொடர்புகொண்டு ஆசனங்களைப் பதிவு
செய்துகொள்ளுங்கள்: 75915840 - 75915004
Fax 75915842 Fax 75915806

Nærkøb Money Transfer
15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை
அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த
இடத்துக்கும் கொடுக்கவோ/
பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற
ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன்
அறியத்தருகிறார்கள்.

இவ்வாரம் முதல் Okotober 30ª
திகதி வரை
மலிவான விமானப் பயணச்சீட்டுக்கள்.
Copenhagen - Colombo - 3,200 Kr
மட்டும் (Tax 165 Kr)
Copenhagen - Colombo - India
(திருவனந்தபுரத்திற்கு) -
3800 Kr + Tax 185 kr

## உலக நிகழ்வுகள்

# யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஞாபகார்த்த மென்பந்தாட்டம்

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பேர்லின் கிளையினரால் 6வது தடவையாக வணக்கத்திற்குரிய பீற்றர் பேர்சிவல் ஞாபகார்த்த சுழல் வெற்றிக்கிண்ணத்திற்கும், சிறீலசிறீ ஆறுமுகநாவலர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்குமான 15 பந்துவீச்சு மாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டப்போட்டிகள் கடந்த 5-ம், 6-ம்



திகதிகளில் பேர்லின் லிஸ்ரபெல்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டிகள் 5ம் திகதி காலை 10 மணிக்கு மௌன வணக்கத்துடன் பழையமாணவர் சங்கத்தின் தலைவர் S.S. பஞ்சரட்ணம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டுப் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றன.

இப்போட்டியில் பேர்லின் தமிழர் விளையாட்டுக் கழகங்களாகிய ரெம்பிள்கொவ் த.வி. கழகம், லிஸ்ரபெல்ட த.வி.க. நாவலர் த.வி.க. சிலோன் கவுஸ் த.வி.க. லிஸ்ரபெல்ட வீனஸ் த.வி.க. குறொஸ்பேர்க் த.வி.க ஆகிய 6 கழகங்கள் பங்குபற்றின. சகல விளையாட்டுக் கழகங்களும் திறமையாக விளையாடி இறுதிப் போட்டிக்கு ரெம்பிள்கோவ் த.வி.கழகமும் லிஸ்ரபெல்ட த.வி.கழகமும் தெரிவாகின. இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ரெம்பிள்கொவ் த.வி.க 15 பந்துவீச்சு மாற்றங்களுக்கு 4 இலக்குகளை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய லிஸ்ரபெல்ட வீனஸ் த.வி.க. 15 பந்துவீச்சு மாற்றங்களுக்கு 9 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றனர். இதன்படி ரெம்பிள்கொவ் த.வி.கழகத்தினர் இரண்டாவது தடவையாக வணக்கத்திற்குரிய பீற்றர் பேர்சிவல் சுழல் வெற்றிக்கிண்ணத்தையும் சிறீலசிறீ ஆறுமுகநாவலர் வெற்றிக்கிண்ணத்தையும் 2ம் இடத்தை லிஸ்ரபெல்ட வீனஸ் த.வி.கழகமும் 3ம் இடத்தை லிஸ்ரபெல்ட தமிழர் வி.கழகமும், சிறந்த விளையாட்டுக்கழகமாக நாவலர் த.வி. கழகமும் தெரிவு செய்யப்பட்டன.

இறுதிப் போட்டியிலிருந்து சிறந்த துடுப்பாட்ட வீரனாக பத்மநாதன் ரகுநாதன் ரெம்பிள்கொவ் (த.வி.க.), சிறந்த பந்துவீச்சாளராகவும் இறுதிப்போட்டியின் நாயகனாகவும் பெருமாள் ஜெகன் (ரெம்பிள்கொவ் த.வி.க) சகலதுறை வீரனாக செல்லையா றொன்ஸ் (ரெம்பிள்கொவ் த.வி.க), சிறந்த பந்து தடுப்பாளராக சற்குணசிங்கம் சிவகுமார் (லிஸ்ரபெல்ட வீனஸ் த.வி.க), இவர் 5 தடவைகள் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.) சுற்றுப்போட்டிகளின் நாயகனாக மகாலிங்கம் திலீபன் (லிஸ்ரபெல்ட வீனஸ். த.வி.க ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டிகள் யாவற்றுக்கும் நடுவர்களாக பிறேமன் நகரத் துடுப்பாட்ட வீரர்களான திருவாளர்கள் பிறேமராஜா, சுரேன் ராஜரட்னம் கஜேந்திரா ஆகியோரும் பிரதம விருந்தினராக பேர்லின் தமிழர் நலன்புரிக்கழக முன்னாள் தலைவர் திரு.திருமதி ஆ. தங்கராசா தம்பதிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். போட்டியின் முடிவில் யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவர் திரு. கோல்டன் ராஜா அவர்களாலும் ஏனைய பழைய மாணவர்களாலும் வழங்கப்பட்ட 2000 DM ஜேர்மனி தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டது.

*- J.J. செல்வின்*

### ஈழமுரசில் வெகுவிரைவில்....
### உலக வரலாற்றில் பதிவானவர்கள்

கடந்த 20 நூற்றாண்டுகளில் உலக வரலாற்றில் தங்கள் செயற்பாடுகளின் மூலம் ஒரு பதிவினை ஏற்படுத்திச் சென்றவர்களை, மனித வரலாற்றுப்போக்கில் பல மாறுதல்களை ஏற்படுத்திய பல்வேறு மனித முகங்களை உங்கள் முன் ஈழமுரசு தொடராகத் தருகின்றது. நூற்றுக்கணக்கான இவ் வரலாற்றுப் பதிவாளர்களை வாரம் ஒருவராக பதிவு செய்கின்றது ஈழமுரசு.

ஆ-ர்

### பிழை திருத்தம்

சென்ற வார புதிர் முரசில், சாக்கடல் என்பது ஒரு **குளம்** என்பதற்கு பதிலாக **ஏரி** என்று மாற்றிக்கொள்ளவும். அத்துடன் **சூயஸ் கால்வாய்** என்பதற்குப் பதில் **நைல் நதி** என மாற்றிக் கொள்ளவும்.

- ஆர்

# ஜேர்மனியில் லெப்.கேணல் திலீபனின் 12வது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள்

'தமிழீழமே இலக்கு! முழக்கு முரசே முழக்கு'! என்ற எழுச்சியுடன் லெப்.கேணல் திலீபனின் பன்னிரண்டாவது நினைவுநாள் நிகழ்ச்சிகள் ஜேர்மன் வியூப்பற்றால் நகரில் நடைபெற்றன. காலையில் தியாகி திலீபனின் பேச்சுப்போட்டிகளும், மாலையில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

25.09.99 சனியன்று மாலை 5 மணிக்கு நினைவுநாள் நிகழ்ச்சிகள் அமைதி வணக்கத்துடன் ஆரம்பமாகின. லெப்.கேணல் திலீபன் நினைவு ஈகைச்சுடரை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனிப் பணியக இணைப்பாளர் ஏற்றி வைத்ததையடுத்து, சுடரொளி வணக்கமும் மலர் வணக்கமும் செலுத்தப்பட்டது. தியாகி திலீபன் எழுச்சி உரையை ஜேர்மன் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு.கா.சிவநாதன் வழங்கினார்.

லெப்.கேணல் திலீபன் பேச்சுப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றோருக்கான பரிசுகள் வழங்கப்பட்டன. அவர்களுக்கான சான்றிதழ்களையும் தியாகி திலீபன் ஞாபகார்த்தக் கிண்ணங்களையும் ஜேர்மனியின் விடுதலைப் புலிகளின் இணைப்பாளர் வழங்கினார்.

பேச்சுப்போட்டியில் கீழ்ப் பிரிவில் முதலிடத்தை அபிலாசா தர்மசோதிராசாவும், இரண்டாமிடத்தை தீபிகா ஜெயராஜாவும், மூன்றாமிடத்தை தர்சிகா தர்மசோதிராசாவும் பெற்றனர். நடுப்பிரிவில் முதலாமிடத்தை ரோசியா ஜோசப்பும், இரண்டாமிடத்தை கதிஸ் கந்த மூலமும் மூன்றாமிடத்தை திவ்யா ஜெயராஜாவும் பெற்றனர்.

இரு பிரிவுகளிலும் முதலாமிடத்தைப்பெற்ற மாணவர்கள் மாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியின்போது லெப். கேணல் திலீபனைப்பற்றி உரையாற்றினர். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனிப் பணியகக் கலை பண்பாட்டுக் கழகத்தின் நடன ஆசிரியைகளான திருமதி. சாவித்திரி இம்மானுவேல், திருமதி. வானதி தேசிங்குராஜா, செல்வி பவித்திரா செல்வகாந்தன். செல்வி யாமினி சர்வானந்தன், திருமதி அற்புதராணி கிருபராஜ், திருமதி றஜனி சத்தியகுமார் ஆகியோரின் வடிவமைப்பில் உருவான இரண்டு நடனத் தொகுப்புகள் இடம்பெற்றன. உணர்ச்சிக் கவிஞர் திரு.காசி ஆனந்தனால் எழுதப்பட்டு தேனிசை செல்லப்பா அவர்களால் பாடி வெளியிடப்பட்ட புதிய பாடல்களுக்கும். நடன மணிகள் நடனமாடினர். பாடல்களுக்கு உயிரூட்டுபவைகளாக நடனங்கள் அமைந்தனவா? அல்லது நடனங்களினால் பாடல்கள் உயிர் பெற்றவையா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் அளவுக்கு நடனங்கள் அனைத்தும் அற்புதமாக அமைந்தன.

'பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்ற நாடகம் நவீன நாடக யுக்திகளுள் ஒன்று. பீலபெல்ட் தமிழ் நுண்கலைக் கல்லூரி இதனை வழங்கியது. இந்நாடகம் வித்தியாசமான முறையில் தயாரிக்கப்பட்டிருந்தது. சபையோரையும் அவ்வப்போது இணைத்து, சபையோரினுள்ளும் நடிகர்கள் வைக்கப்பட்டு நாடகம் அமைக்கப்பட்டிருந்தது. எமது தாயகத்தில் மனிதன் அல்லல்படுவதை இந்நாடகம் விளக்கியது. சபையோரின் பாராட்டை இந்நாடகம் முழுமையாகப் பெற்றது. ஆனால் சொற்களில் சில 'விரசமாக' அமைந்திருந்ததாக சபையோரில் சிலர் குறிப்பிட்டனர். அத்துடன் நாட்டின் தலையெழுத்தையே மாற்றக்கூடிய இளைஞர்கள், அழுது புலம்பி ஒப்பாரி வைப்பதும் இன்றைய சூழ்நிலையில் ஏற்புடையதல்ல என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

லெப்.கேணல். திலீபன் நினைவெழுச்சி நாளில் ஒலி, ஒளி நாடாக்கள் இரண்டு வெளியிடப்பட்டன. ஜேர்மன் கலைபண்பாட்டுக் கழகத் தயாரிப்பான 'வெற்றி நிச்சயம்' நாட்டிய நாடகமும் ஒலித்தட்டில் பதிவாகி வெளியிடப்பட்டது. 1998-ம் ஆண்டு மாவீரர்நாள் எழுச்சிக் கலை நிகழ்ச்சிகள் அடங்கிய ஒளியிழைப்பேழையும் வெளியிடப்பட்டது.

இசையமைப்பாளர் கண்ணனின் தமிழிசை இடம்பெற்றது. மிகவும் இனிமையான இவரின் தமிழிசை சபையோரை மெய்மறக்கச் செய்தது. வயலின் திரு. தேவராஜா, தவில் திரு. செல்வநாயகம், மிருதங்கம் திரு.சிவரூபன், தபேலா.தேவகுருபரன், கடம் திரு.கமலநாதன், கெஞ்சிரா திரு.தா.சிவநாதன், தாளம் திரு.குகதீபன் ஆகியோர் இதற்குப் பக்கவாத்தியம் வழங்கினர்.

*- வீ.ஆர்.வரதராஜா*

# செல் நகரில் தமிழ்ச்சோலைப்பள்ளி

கடந்த 15.09.99 புதன்கிழமை காலை 10 மணியளவில் 3, Rue Jean Moulin, 77500 Chelles மண்டபத்தில் 30-வது தமிழ்ச்சோலைப் பள்ளி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழக செல் கிளையினரின் அனுசரணையுடன் இப்பள்ளி தொடங்கப்பட்டது. இப்பகுதி மாநகரசபையின் பிரதிநிதிகளாக திருமதி றெனோ அவர்களும் திருமதி பீலிக்ஸ் அவர்களும் வருகை தந்து மங்கலவிளக்கினை ஏற்றிவைத்தனர். இவர்கள் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

வரவேற்புரையைத் திருமதி மாலினி- பீலிக்ஸ் அவர்கள் நிகழ்த்தினார். அவரைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழக செல் கிளையின் தலைவரும், இப்பள்ளியின் பொறுப்பாளருமான திரு. ஸ்ரீதரன் அவர்கள் தம் உரையில், வீடுகளில் பிள்ளைகள் பிரெஞ்சு மொழி நன்கு தெரியாத தம் பெற்றோருடன் நம் தாய்மொழியில் உரையாடாது பிரெஞ்சு மொழியில் உரையாடும் நிலை ஏற்படுகின்றது. இது எதிர்காலத்தில் ஒரு விரிசலை ஏற்படுத்தி குடும்ப உறவைப் பாதிக்கும் என்று கூறினார். இந்நிலையைத் தவிர்க்க இப்பள்ளிமூலம் கல்விச்சேவையை ஆரம்பிக்கிறோம். என்று தம் உரையில் கூறினார். இப்பகுதி மாநகரசபையைச் சேர்ந்த திருமதி றெனோ 'தமிழர்களின் பழக்க வழக்கங்கள் தம்மைப் பெரிதும் கவர்ந்துள்ளதாகவும் இவ்வளவு மக்கள் கூடியுள்ள இடத்தில் அமைதியாகவும், ஒழுங்காகவும் இருப்பது தனக்கு மகிழ்ச்சியைத் தருவதாகவும் உங்கள் குழந்தைகளுக்கு உங்கள் தாய் மொழியைக் கற்பிப்பது முக்கியமானதென்றும், இம் முயற்சிகளுக்குத் தங்களாலான உதவிகள் செய்யக் காத்திருப்பதாகவும் கூறினார்.

அவரைத்தொடர்ந்து தமிழ்ச்சோலைத் தலைமைப் பணிமனைப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட திரு. அருளம்பலம் அவர்களின் உரையில், புலம்பெயர் மண்ணில் வாழும் நம் தமிழர்கள் தங்கள் முகத்தை, முகவரியைத் தொலைத்திடாது எம்வேர் காத்திடவேண்டுமாயின் தமிழர், தமிழர்களாக வாழவேண்டுமென்றும், அதற்கேற்ற வகையில் இங்கு வளரும் எம் சந்ததியினருக்கு எம்தாய் மொழியைப் போதிப்பது பெற்றோர்களான நமது பிரதான கடமையாகும். தாயகம் நோக்கிய எமது பயணத்தை ஆரம்பிக்கும்போது தமிழ்ப் பிள்ளைகளாக வளர்த்தெடுத்து, எம் சந்ததியினரை அங்குகொண்டு செல்லவேண்டும். இப்பகுதிவாழ் தமிழர்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து இப்பள்ளியை வளர்த்தெடுத்துப் பயன்பெறவேண்டுமென்றும் கூறி இப்பள்ளிக்கான நடைமுறை விதிகளையும் எடுத்துரைத்தார்.



இவரைத் தொடர்ந்து இப்பள்ளியில் தமிழ் கற்பிக்க முன்வந்த ஆசிரியை திருமதி ஸ்ரீவாணி கனகசபை அவர்களும் பெற்றோர் சார்பாக திரு. சந்திரசேகரன் அவர்களும் இப்பள்ளி நல்ல முறையில் வளருவதற்கு அனைத்துப் பெற்றோரும் பூரண ஒத்துழைப்பைத் தரவேண்டுமென்றும் எடுத்துக்கூறினர். 28 மாணவர்கள் அன்று வருகை தந்தனர்.

பொதுக்கூட்ட நிகழ்வினைத் தொடர்ந்து சிறார்களுக்கான தமிழ்வகுப்பினைச் சம்பிரதாய பூர்வமாக பொதுமறையாம் திருக்குறள் பாவொன்றுடன் திரு. அருளம்பலம் ஆசிரியர் ஆரம்பித்துவைத்தார். திரு.யோகு அவர்களின் நன்றியுரையுடன் இந் நிகழ்வு நிறைவுற்றது.

# இந்திய அணியின் புதிய பயிற்சியாளர் கபில்தேவ்



இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளரான அன்சுமன் கெய்குவாட்டின் பதவிக்காலம் முடிவதையிட்டு புதிய பயிற்சியாளர் தேர்வு இடம்பெறவேண்டியிருந்தது. இப்புதிய பயிற்சியாளர் தேர்வுக்கு உலகக்கிண்ணத்தை இந்தியாவுக்கு வழங்கிய தலைவர் கபில்தேவ்வின் பெயரும், இந்திய A அணி பயிற்சியாளரும் ஆரம்ப அதிரடி மன்னனுமான சிறீகாந்தின் பெயரும் பெரிதாக அடிபட்டது. ஆனால் இறுதி முடிவு கபில்தேவ் பக்கம் கிடைத்தது. 1994-ம் ஆண்டு கிரிக்கெட் ஓய்வுக்குப் பின் கிரிக்கெட் பக்கமே காணக்கிடைக்காவிட்டாலும் 434 விக்கெட்டுக்களைச் சாய்த்து உலகசாதனை வீரனாக இருக்கும். இவரின் அனுபவமும் ஆற்றலும் மெலிந்து காணப்படும். இந்திய அணிக்கு அவசியமாகிறது. கபில்தேவ் சிறந்த பந்துவீச்சாளர் என்பதைவிட துடுப்பாட்டம், மைதானத்தடுப்பு, தலைமை யாவற்றிலும் கை தேர்ந்த ஒரு சகலகலா வல்லவன். இப்படிப்பட்ட சகலதுறையாளன் மூலமே அணி பலதுறைகளிலும் வலுப்பெறமுடியும் என்பது பலரது ஆதங்கமாகக் கூட இருக்கலாம். ஆனாலும் பயிற்சியாளர் அனுபவம் எதுவும் இல்லாது முழுமையான பலங்கொண்ட இந்திய அணியை கபில் தேவ்வால் கட்டியெழுப்ப முடியுமா? என்ற கேள்விக்கு விடைகாண 01.10.99 இலிருந்து தனது பயிற்றுவிப்பினை கபில் ஆரம்பிக்கிறார். பொதுவாக ஒருவருட பயிற்சியாளர் பதவியைத் தனது விருப்பின் பேரில் கபில்தேவ் இருவருடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் சம்மதம் கொடுத்திருக்கிறது. பயிற்சியாளர் மட்டுமன்றி கட்டுப்பாட்டுச் சபையிலும் புதிய மாற்றம் தென்படுகிறது. தமிழகத்தைச் சேர்ந்த முத்தையா புதிய கட்டுப்பாட்டுச்சபை தலைவராகிறார். அத்துடன் புதிய உடற்பயிற்சியாளராக தென்னாபிரிக்கரான அன்றியு லிப்பூஸ் நியமிக்கப்படுகிறார். புதிய மாற்றங்களைக்கொண்டு மாற்றப்படும் இந்திய கிரிக்கெட்டில் வெற்றிகளும் புதிய வீச்சைப் பெறுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# இந்திய சுழல் பந்திற்கு தென்னாபிரிக்கா சுருண்டது



இந்தியா, தென்னாபிரிக்கா, சிம்பாவே, கென்யா ஆகிய நான்கு நாடுகள் கலந்துகொள்ளும் ஒருநாள் போட்டித் தொடரானது 25.09.99 கென்யாவின் தலைநகர் நைரோபியில் தொடங்கியுள்ளது. முதல்நாள் ஆட்டத்தில் சிம்பாவே 3 விக்கெட் வித்தியாசத்தில் கென்யாவை வென்றது. இரண்டாம் நாளாகிய 26.09.99 இந்திய தென்னாபிரிக்க முக்கிய போட்டியில் இந்தியா மிகச் சுலபமாக 8 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்காவைத் தோற்கடித்தது. முதலில் ஆடிய தென்னாபிரிக்காவை 117 ஓட்டங்களுக்குள் சுருட்டிப்போட்டனர் இந்தியச் சுழல்பந்துவீச்சாளர்கள். குறிப்பாக கர்நாடக வீரன் ஜோர்ஷி 10 ஓவர்களில் ஆறு ஓட்டங்களை மட்டும் கொடுத்து (6 ஓட்டமேதும் கொடுக்காத ஓவர்கள்) ஐந்து விக்கெட்டுக்களைச் சாய்த்தது குறிப்பிடத்தக்கது. பதிலுக்காடிய இந்திய ஆரம்பத்தை ரமேஷ் அதிரடியாக்கி 33 பந்துகளில் 7 நாலுகளுடன் 36 ஓட்டங்களைப் பெற்றார். முதல் 10 ஓவர்களில் இந்திய அணி 70 ஓட்டங்களைப் பெற்றது. முடிவில் 22:4 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது. வெற்றிக்கான மூலவீச்சை வழங்கிய ஜோஷி சிறந்த வீரனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

# அவுஸ்திரேலியாவுக்கு இரட்டைத் தங்கக் கிண்ணம்



வரப்போகும் 2000 ஆண்டின் ஒலிம்பிக் போட்டிகளால் பிரபலம் காணப்போகும் சிட்னி கோம்பூஸ் நகரில் அமைக்கப்பட்ட புதிய அரங்கில் நடைபெற்ற ஹொக்கி போட்டியின் இரு பிரிவுகளிலும் அவுஸ்திரேலியா தங்கப்பதக்கத்தை வென்றது. 'Sydney International Hockey Challenge' போட்டியின் ஆண்கள் பிரிவில் தென்கொரியாவை 2:1 எனவும் பெண்கள் பிரிவில் அமெரிக்காவை 4:0 எனவும் இறுதியாட்டங்களில் அவுஸ்திரேலியா வென்றுள்ளது.

# கார் ஓட்டப் பந்தயத்தில் எதிர்பார்க்கப்படாத வெற்றியாளர்கள்

இவ்வருடத்திற்கான கார் ஓட்ட சம்பியன் (Formula 1) போட்டிகள் முடிவை நெருங்கிக்கொண்டிருக்கும்போது 26.09.99 ஜேர்மனியில் நடைபெற்ற போட்டியில் யாருமே எதிர்பார்க்காதவர்களே வெற்றி பெற்றுள்ளனர். இவ்வருட சம்பியனளாகக்கூடிய வாய்ப்புக்கள் உள்ள மக்லேறன் ஓட்டுநர் ஹக்கினன், ஃபறாறி ஓட்டுநர் ஈர்வின் ஆகிய இருவரும் முதல் மூன்று இடங்களுக்குள் வரமுடியாது போயுள்ளது.

(Nuerburgring) நகரில் நடைபெற்ற இப்போட்டியில் ஸ்ரிவாட் ஓட்டுநர் Herbert முதலாம் இடத்தையும், புறோஸ் ஓட்டுநர் Trulli இரண்டாம் இடத்தையும் மற்றொரு ஸ்ரிவாட் ஓட்டுநரும் அடுத்த வருடத்திற்கான ஃபறாறி ஓட்டுநருமான Barrichello மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். இம்முடிவானது முக்கிய ஓட்டுநர்களுக்கு மட்டுமன்றி முக்கிய கார்களுக்கும் ஏமாற்றமாகவே அமைகிறது. இன்னும் மிகுதியாகவுள்ள இவ்வருடத்திற்கான இரு போட்டிகளும் ஆசியாப் பக்கம் திரும்புகிறது.

முதல்போட்டி 17.10.99 மலேசியா தலைநகர் கோலாலம்பூரிலும், இரண்டாவது போட்டி 31.10.99 ஜப்பான் சுசுக்கா நகரிலும் நடைபெறவுள்ளது. தற்போது ஓட்டுநர்கள் நிலையில் ஹக்கினன் 62 புள்ளிகளுடனும், ஈர்வின் 60 புள்ளிகளுடனும் முதலிடத்திற்காக போட்டி போடும் அதேநேரம் மக்லேறன் 110 புள்ளிகளுடனும் ஃபறாறி 102 புள்ளிகளுடனும் முதல் நிலைக்குக் கடுமையாகப் போட்டியிடுகின்றனர்.

# பிரான்ஸ், அவுஸ்திரேலியா டேவிஸ் கிண்ண இறுதிப்போட்டிக்கு தெரிவு

நாடுகளுக்கிடையில் நடைபெறும் பிரசித்தமான டேவிஸ் கிண்ண டெனிஸ் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் 25,26 செப்டெம்பரில் பிரான்ஸ், அவுஸ்திரேலியாவில் நடைபெற்றன. பிரான்சில் நடை



பெற்ற அரையிறுதியில் பிரான்ஸ் பெல்ஜியத்தை 4:1 எனத் தோற்கடித்தது. அதேபோல் அவுஸ்திரேலியாவில் நடந்த அரையிறுதியில் அவுஸ்திரேலியா ரஷ்யாவை 4:1 எனத் தோற்கடித்தது. நடைபெற்ற 5 போட்டிகளில் 4 தனியான போட்டிகளும் 1 இரட்டையர் போட்டியும் இடம்பெற்றதாகும்.

பிரான்ஸ், அவுஸ்திரேலியா வெற்றியை அடுத்து டிசெம்பர் 3 தொடக்கம் 5 வரை டேவிஸ் கிண்ண இறுதிப்போட்டி பிரான்சில் நடைபெறவுள்ளது. 100 வருட டேவிஸ் கிண்ண வரலாற்றில் அவுஸ்திரேலியா 43 தடவை இறுதியை எட்டி 26 தடவை வெற்றிபெற்றுள்ளது. இறுதியாக 1986ல் வெற்றிபெற்றது பிரான்ஸ். 13 அடவை இறுதியைத் தொட்டு 8 தடவை வெற்றிபெற்றது. இறுதியாக 1996ல் வெற்றியீட்டியுள்ளது. நடைபெறவுள்ள டேவிஸ் கிண்ண இறுதிப்போட்டியானது கோடை காலத்தில் நடைபெறும் பிரான்ஸ் கரோலின் ஹுப்பனுக்கு அடுத்தபடியான பெரிய ரெனிஸ் போட்டி என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு: பொன். தாமோதரம்


# 1ம் ஆண்டு கண்ணீர் பூக்களில்...

மண்ணின் மடியில்: 07 - 01 - 1976



மாவீர் போர்க் களத்தில்: 06 - 10 - 1998

## கடற்புலி மேஜர் கலாநிதி
## நந்தினி இராசேந்திரம் (சிவா)
*(வடமராட்சி கிழக்கு ஆழியவளை)*

ஆழி தவழும் ஆழியவளை மண்ணில்
அவதரித்த பெண்புலி கலாநிதியே
கடலன்னை உனை அரவணைப்பாளென-நாம்
கடவுளைத் தொழாத நாளில்லையம்மா. ஆனால்
கருணை கொண்டு கடலன்னை உன்னை
அணைக்கவில்லை.
களிப்புடனே களமாடி நீ மாங்குள மண்ணை முத்தமிட்டாய்.

ஏழு வருடங்கள் அறப்போர் புரிந்து வென்று வந்தாய்-நாம்
எண்ணவில்லை எல்லோரையும் ஒவ்வொரு திசையில்
அனுப்பிவிட்டு
நீ போர்க்களம் சென்று உன் உடல்மட்டும் வருமென்று
உன் உறவுகள் விடும் கண்ணீரை - ஒருமுறை
வந்து பார்த்துச் செல்லமாட்டியோ? - நீ மறைந்து
ஓராண்டல்ல ஓராயிரம் ஆண்டானாலும்-எங்கள்
கண்ணீருக்கு ஓய்வே கிடையாது.

உன் பிரிவால் வாடும்,
அப்பா, அம்மா,
அக்காமார், அத்தான்மார்,
தம்பி, தங்கைமார், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

*தகவல்: அத்தான், அக்கா (சிவகுமார், லதா) நோர்வே*

Pub

## சீவரத்தினம் வள்ளிப்பிள்ளை
(வெற்றிலைக்கேணி, முள்ளியான்)

மண்ணின் மடியில்: 1935



ஆண்டவன் அடியில்: 18.10.1998

உன் பேத்தியின் மரணச் செய்தி கேட்டு
ஏக்கம் கொண்ட உன் உயிர்
திரும்பி வர மறுத்ததேனோ? — உன்
மற்றய உறவுகளை நினைக்க
மறந்து விட்டாயோ?
அல்லது உன் உறவுக்குத் துணையாக
சென்றனியோ?

உன்னால் துயரம் தாங்க முடியாது
உடன் பறந்து சென்றனையோ —
. இப்போ பல
உறவுகள் உமைப் பிரிந்து தினமும்
உள்ளம் கலங்குகின்றோம் —
நீ மறைந்து ஒராண்டு
உருண்டோடினாலும் உம் நினைவுகள்
என்றும் மாறாது.

உம் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

*(32-ம் பக்கத் தொடர்ச்சி)*

## மட்டக்களப்பில்.......

வைக்கப்பட்டிருந்த 'சைற் சாஜர்' வகையை சேர்ந்த குண்டு இராணுவத்தினரை அதிகமாக ஏற்றிச்சென்ற பேருந்தை இலக்கு வைத்து வெடிக்க வைக்கப்பட்டது. இதன்போது பேருந்து பல அடிதூரம் தூக்கியெறியப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குண்டுத் தாக்குதல் இடம்பெற்றதும், பின்னால் வாகனங்களில் வந்த படையினர் துப்பாக்கி வேட்டுகளை தீர்த்தபடி அப்பகுதியை உடனடியாக சுற்றிவளைத்து தேடுதலை நடாத்தியுள்ளனர். இதன்போது பல பொதுமக்கள் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகினர். படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். தாக்குதல் நடைபெற்ற பின் அப் பகுதியை ஆராய்ந்த இராணுவத்தின் குண்டுவெடித்த இடத்தில் குண்டு விழாமல் இருப்பதற்காக ஒட்டப்பட்டிருந்த 'பிளாஸ்ரர்கள்' மூலம் குண்டு இரு வாரங்களுக்குள்ளேயே பொருத்தப்பட்டிருக்கின்றது என தெரிவித்ததுடன், 150 மீற்றர் இடைவெளியில் இருந்தே குண்டு ஒருவரால் அமுக்கி வெடிக்க வைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

*(32-ம் பக்கத் தொடர்ச்சி)*

## ரணகோஷா–5ல்.......

என்ன நடந்தது என்பது பற்றியும் தமக்கு தகவல் கிடைக்கவில்லை என இராணுவ தரப்பு செய்திகள் கூறுகின்றன.

இத் தொலைத் தொடர்பு கருவி வேறு தொடர்பாளர்களின் செய்திகளை தெளிவாக ஒட்டுக்கேட்கக் கூடிய அதே வேளை இத் தொலைத் தொடர்பு கருவியில் உரையாடுவதை வேறு கருவிகள் மூலம் ஒட்டுக்கேட்க முடியாதவாறும் அமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

*(32-ம் பக்கத் தொடர்ச்சி)*

## பேருந்து.......

படையினரையும் பொலிசாரையும் ஏற்றிக்கொண்டு சென்றபோதே இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இத் தாக்குதலில் மேலும் இரு படையினர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது.

தாக்குதலை முடித்துக்கொண்டு புலிகள் சென்றபின்னர் அப்பகுதியை நோக்கிப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோது டி.அருள்சீலன்(17) என்ற மாணவன் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

*(32-ம் பக்கத் தொடர்ச்சி)*

## முல்லையில்.......

சிறீலங்கா கடற்படையில் பீரங்கிப் படகுகளே தாக்குதலை மேற்கொண்டன என செய்திகள் தெரிவிக்கின்றன.

இருந்தபோதிலும் விடுதலைப் புலிகளே இக் கப்பல் மீது தாக்குதல் நடாத்தியதாக சிறீலங்காப் படைகள் தெரிவித்துள்ளன. கடந்த வியாழன், வெள்ளி தினங்களில் கடற்புலிகளின் நடமாட்டமே இப்பகுதிகளில் அதிகரித்திருந்தன என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

சுண்டிக்குளம் பகுதியில் கடந்த இரு நாட்களாக விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் வந்து இறக்கப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து கடற்பரப்பில் சிறீலங்கா படைகளின் நடமாட்டம் அதிகரித்திருந்தது எனவும் இதன்போது முல்லைத்தீவு கடலில் பயணித்துக் கொண்டிருந்த சீனக் கப்பல் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் ஏற்றிவந்த கப்பல் எனக்கருதி சிறீலங்காப் படையினர் அதன் மீது தாக்குதல் நடாத்தி இழுத்துச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இடம் : *LE TRIANON*
*80 Bd ROCHECHOUART,*
*75018 PARIS. M° : ANVERS*

காலம் 01/10/99 வெள்ளி மாலை 7.30
02/10/99 சனி மாலை 6.15 - 9.15
03/10/99 ஞாயிறு 6.15 - 9.15

மேலதிக தொடர்புகளுக்கு: 01 48 38 54 65 /: 06 16 39 20 57




*எங்கள் மணிக்கு இதய அஞ்சலி*

## 1ம் ஆண்டு நினைவாஞ்சலி

தாய் மண்ணில்: 08.08.1968



அன்னிய விபத்தில்: 15.09.1998

## கனகலிங்கம் மணிவண்ணன்

**திரைகடல் ஓடியும் திரவியம் தேடியோர்,**
**மணி நீயோ குளிர்ப்பனிக்குள் அந்த வடதுருவத்தில்**
**எம் மக்களுக்காய் வேகமுடன் திரவியம் தேடினாய்**
**கண்ட மணவாழ்வுக் கனவுக்காய் ஓடிச்சென்றவனே**
**இறுதியில் மணம் முடிந்து வாழ்வு தொடங்குமுன்னர்**
**மங்கைதனைத் தனியாக்கி நீர் விபத்தில் மாண்டீரே**
**உன் இழப்பு உன் மனைவிக்கு மட்டும் அல்ல,**
**நோர்வே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினருக்கும் தான்.**

*உன் நினைவை சோகத்துடன் பகிர்ந்துகொள்ளும்*
மனைவி, மாமா, மாமி, மைத்துனர்கள்: 4795249536
உன் பணி தொடருவோம் நண்பர்கள்: 4795730915

**எனது கணவரின் 1–ம் ஆண்டு நினைவு அஞ்சலிக்கு உதவி செய்த/பங்கேற்ற அனைவரிற்கும் எனது குடும்பத்தின் சார்பில் நன்றி.**

## மரண அறிவித்தல்



### திரு. செல்லர் வேலும்மயிலும்

(பளை ஆயுள்வேத வைத்தியர்)

பளையைச் சேர்ந்த திரு. செல்லர் வேலும்மயிலும் அவர்கள் 25.09.99 அன்று பளையில் காலமானார் என்பதனை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகிறோம்.

இவர் காலம் சென்ற திரு.திருமதி செல்லர் தம்பதிகளின் செல்வப் புதல்வனும், சின்னப்பிள்ளை (இலங்கை)யின் அன்புக் கணவரும், காலம் சென்ற செல்வரத்தினம், சந்திர சேகரம் (இலங்கை), கயிலாயமூர்த்தி (டோகா), சிறிஸ்வரலிங்கம் (சுவிஸ்), சிவஜெயம் (ஜேர்மன்), மாசிலாமணி (இலண்டன்), சிவயோகம் (சுவிஸ்), இவர்களின் அன்புத் தந்தையும்,

காலம்சென்ற தேவமலர், தேவி (இலங்கை), தனுசிய (இலங்கை), ஜெயந்தி (சுவிஸ்), சிவஜோதி (ஜேர்மன்), திலகேஸ்வரி (இலங்கை), வசந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

*தொடர்புகளுக்கு:*
லிங்கம்: 004112913978 சுவிஸ்
0041763813324
யோகா: 0041 76 54 33 943 சுவிஸ்
ஜெயம்: 0049 89 74 29 83 56 ஜேர்மன்
மணி: 0044 7881534609 இலண்டன்

தகவல்: லிங்கம் – சுவிஸ்

## தமிழர் தொலைபேசி நிலையம்

**இலங்கை-50 / இந்தியா-50**

**1 Card - 90Frs**

சனி, ஞாயிறு, திங்கள் தினங்களில் ஒரு அட்டை வாங்கும்போது அன்பளிப்பையும் கேட்டு வாங்குங்கள், கைத்தொலைபேசிகள் திருத்திக் கொடுக்கப்படும்

புதிய படப் பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

Itineris SFR

Bouygues Telecom

**ALLO BOX**

**59, Rue d'Avron,**
**75020 Paris**
Tel: 01 43 73 76 83 - Fax: 01 43 73 96 31
M°: Maraîchers / Buzenval
Bus: 26

# ஈழமுரசு

Eelamurasu Weekly



அனைத்துத் தொடர்புகளுக்கும்:

"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris

Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64



மேற்கு லண்டன் மாநகரில்

**துவாரகா**

Cash & Carry

இல்லை என்பது இங்கில்லை

N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26

Pub


# மட்டக்களப்பில் மீண்டும் 'சைற் சாஜர்' தாக்குதல் 18 படையினர் பலி - 20 பேர் படுகாயம்

(27.09.99)

லெப். கேணல் திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு படையினரால் மட்டக்களப்பு தீவிர பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தபோதும் இராணுவ வாகன ரோந்து அணிமீது விடுதலைப்புலிகளால் இரண்டாவது தடவையாக 'சைற் சாஜர்' மூலம் வெற்றிகரமான தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. இதன்போது 18 படையினர் கொல்லப்பட்டதுடன், 20 படையினர் படுகாயமடைந்துள்ளனர். கடந்த வெள்ளியன்று மட்டக்களப்பு நகரில் இருந்து மதியம் 11.50 மணியளவில் பொலனறுவை நோக்கி சென்று கொண்டிருந்த இராணுவ வாகனத்தொடரணி மீது நண்பகல்12 மணியளவில் விடுதலைப்புலிகளால் பொருத்தி வைக்கப்பட்டிருந்த குண்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 11ம் திகதி இப் பகுதியில் நடாத்தப்பட்ட இதேபோன்ற தாக்குதல் ஒன்றில் 9 பொலிசார் கொல்லப்பட்டு 20ற்கும் மேற்பட்ட பொலிசார் படுகாயமடைந்திருந்தனர். அதேபோன்றே இக் குண்டும் பொருத்தப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளதாக இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னர் வெடிக்க வைக்கப்பட்ட இடத்திலிருந்து 150 யார் தூரத்திலேயே இக் குண்டும் வெடித்துள்ளதாக தெரியவருகிறது. கடந்த மாதம் நடாத்தப்பட்ட இத் தாக்குதலின் பின்னர் மட்டக்களப்பில் வாகன ரோந்து அணி செல்வது இடை நிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும் கடந்தவாரமே ஆரம்பிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

வழக்கம்போல மோட்டார் சைக்கிள் அணியினர் ரோந்து அணி செல்லும் பாதையில் மக்கள் நடமாடாதபடி பாதுகாப்பு வழங்கிக்கொண்டு முன் செல்ல பின்னால் ரோந்து அணி சென்றுள்ளது. திடீரென ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வீதியை விட்டு பாதுகாப்புகருதி ஏற்கனவே இரகசியமாக திட்டமிடப்பட்டிருந்த இரண்டாவது வீதிவழியாக இராணுவ வாகனங்கள் செல்லத் தொடங்கின. அப்போதே கடையொன்றின் முகப்பு பலகையில் மறைத்து

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## ரணகோஷா-5ல் நவின தொலைத் தொடர்புக்கருவி புலிகளிடம்? மீட்கப்போன படையினர் அறுவரைக் காணவில்லை

(26.09.99)

ரணகோஷா-5 படையினர் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் பெறுமதிமிக்க சக்திவாய்ந்த நவீன தொலைத் தொடர்பு கருவியொன்று புலிகள் வசம் சென்றிருக்கலாம் என படை தரப்பு அச்சம் தெரிவித்துள்ளது. ரணகோஷா படைகள் நகர்ந்து கொண்டிருக்கும் போது புலிகள் பலமுனைகளினூடும் பெருந்தொகையான ஆட்லெறி, மோட்டார், பல்குழல் பீரங்கிக்குண்டுகள் மூலம் கடும் தாக்குதலை தொடுத்ததை தொடர்ந்து முன்னேற முடியாதநிலையில் நூற்றுக் கணக்கான படையினர் காயமடைந்து ஏராளமான படையினர் கொல்லப்பட்டதால் அத் தொலைத் தொடர்பு சாதனத்தை அவ்விடத்திலேயே கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அதனை தொடர்ந்து புலிகள் அப்பகுதிக்கு வந்து அவற்றை கைப்பற்றுவதற்கு முன்னர் அவற்றை மீட்டெடுத்து வருவதற்காக விசேட பயிற்சிபெற்ற ஆறு படையினர் அப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஆனால் அதனை மீட்கச்சென்ற ஆறுபடையினருக்கும் இதுவரை

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## திலீபன் நினைவாக மூன்று எழுச்சிக் கிராமங்கள்

(26.09.99)

மட்டக்களப்பில் திலீபனின் நினைவாக மூன்று எழுச்சிக் கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பிரம்படித்தீவு, மயிலவெட்டுவான், கரடியனாறு ஆகிய பகுதிகளிலேயே இக் கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. திலீபனின் 12வது நினைவு நாளான இன்று திறந்து வைக்கப்பட்டு, இடம்பெயர்ந்தும் வீடுகளை இழந்தும் வாழ்கின்ற மக்களுக்கு இவ் வீடுகள் வழங்கப்படவுள்ளன.

உருவாக்கப்பட்ட மூன்று எழுச்சிக் கிராமங்களிலும் 85 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மயிலவெட்டுவானில் 25 வீடுகளும், கரடியனாற்றில் 30 வீடுகளும், பிரம்படித்தீவில் 30 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன. இவையனைத்தும் இன்று பொதுமக்களிடம் கையளிக்கப்படும்.

## மாணிக்கதாசன் பிரிவை சேர்ந்த 120 புளொட் குழுவினரை கைது செய்ய உத்தரவு

மாணிக்கதாசன் குழுவில் இயங்கிவந்த 120 புளொட் குழுவினரையும் கைது செய்யுமாறு தர்மலிங்கம் சித்தார்த்தன் சிறீலங்கா இராணுவத்தினரிடம் உத்தரவிட்டுள்ளதாக சிறீலங்கா தொலைக்காட்சி செய்திவெளியிட்டுள்ளது. வவுனியாவின் ஆசிக்குளம் கர்ட்டினுள் தலைமறைவாகியிருக்கும் இப் புளொட் குழு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டார்களா என்பது குறித்து செய்திகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. மாணிக்கதாசனின் மரணத்தையடுத்து அவரது இடத்திற்கு நியமிக்கப்பட்ட ஹரி பாபு என்பவர் ஏற்கனவே சிறீலங்கா படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பேருந்து மீது தாக்குதல் பொலிசார், கடற்படையினன் பலி

(26.09.99)

தலைமன்னாரில் இருந்து மன்னார் நோக்கிச் சென்றுகொண்டிருந்த சிறீலங்காப் படையினரின் பேருந்து ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு பொலிசாரும், ஒரு கடற்படையினரும் கொல்லப்பட்டனர். தலைமன்னார் — மன்னார் வீதியூடாக நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் பயணிகளின் பேருந்து ஒன்றில் விடுமுறைக்காகச் செல்லும்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## முல்லையில் சீன சரக்கு கப்பல் மீது தாக்குதல்

(27.09.99)

முல்லைத்தீவு கடற்பரப்பில் சீனக்கப்பல் ஒன்றின் மீது நேற்றிரவு தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. MV Yugi என்ற சீன நாட்டுக் கப்பல் ஒன்று முல்லைத்தீவு கடலில் பயணம் செய்து கொண்டிருந்தபோது தாக்கப்பட்டு சிறீலங்கா கடற்படையினரால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இக்கப்பல் உரம் ஏற்றிச் சென்ற கப்பல் என்றும் இதன் மீது அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த

(தொடர்ச்சி 31ம் பக்கம்)


**K.R.S. ENTERPRISES**

கே.ஆர்.எஸ். என்ரபிறைசெஸ்

537 High Road,
Wembley
Middlesey, Hao 2 Dj,
Tel: 0181- 9024590

நிர்வாகி: G.சதீஸ்.



★ Leela அரிசிமா - 89P ல் இருந்து
★ Kingfish- 2.59 ல் இருந்து
★ நீலக்கால் [துப்பரவு செய்த] நண்டு £3.89 ல் இருந்து
★ 20 Kg Broken Basmath £7.99 இலிருந்து
★ CD 2.99 இல் இருந்து.
★ Audio 99 இல் இருந்து
★ நல்லெண்ணை £3.49; 1/2 போத்தல் £1.79
★ ஞானம்காட் 10% விலைக் கழிவில்

£20 இற்கு மேல் கொள்வனவு செய்தால் 1 Kg லீலா அரிசிமா இலவசம்!

லீலாவின் அனைத்துத் தயாரிப்புக்களும் மலிவு விலையில்!!

Pub